விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 மார்கழி 01 செவ்வாய்க்கிழமை (16.12.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 362

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிரணிக்குத்தான் ஆதரவு!

## அரசாங்கம் கூறுகிறது

(கொழும்பு)

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கும் என அரசு அறிவித்துள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக யார் போட்டியிடுகின்றார்களோ அவருக்கு ஆதரவாக கூட்டமைப்பு செயற்படும் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சுசில் பிரேம்ஜயந்த தெரிவித்துள்ளார்.

23 ஆம் பக்கம் பார்க்க....

## தமிழ் மக்கள் வாக்களிப்பது மிகவும் முக்கியமானது!

### சுமந்திரன் எம்.பி கருத்து

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் வாக்களிப்பது மிகவும் முக்கியமானது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

அதேவேளை, தமிழ் மக்களின தேசியப் பிரச்சினைக்கு இந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் தீர்வை வழங்கப் போவதில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் அடுத்த மாதம் 8ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில், இந்தத் தேர்தல் தொடர்பில் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும தெரிவித்துள்ளதாவது,

அடுத்த மாதம் 8ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வைத் தரக்கூடிய தேர்தலாக இருக்காது என்ற ஆலோசனையை நாம் எமது மக்களுக்கு தெரிவிக்க விரும்புகிறோம்.

இந்தத் தேர்தலில் யாரை ஆதரிப்பது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுவரை முடிவு செய்யவில்லை. இது தொடர்பில் நாம் எமது மக்களுடன் தொடர்ந்து கலந்துரையாடி வருகிறோம். தமது வாக்குகளை அளிக்கவுள்ள எமது மக்களின் ஆலோசனையைப் பெற்றே நாம் முடிவு எடுக்கவுள்ளோம். இந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் வாக்களிப்பது மிகவும் முக்கியமானது என்ற அறிவுரையை மக்களுக்கு நாம் தெரிவிக்கின்றோம்.

ஜனாதிபதி தேர்தலைப் புறக்கணிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்

24 ஆம் பக்கம் பார்க்க....

## நீர்கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

இந்தியாவில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களை விடுதலை செய்வதற்கு நடவடிக்கைகளை எடுக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தும் ஆர்ப்பாட்டமொன்று நீர்கொழும்பில் நேற்று நடைபெற்றது.

நீர்கொழும்பு நகரில் ஒன்றுகூடிய இந்தியாவில் தடுத்துவைக்கப்பட்டுள்ள மீனவர்களின் உறவினர்கள் மற்றும் ஏனைய மீனவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து

24 ஆம் பக்கம் பார்க்க....

## அரசியலில் படையினர் ஈடுபட்டால் என்ன?

### பாதுகாப்புச் செயலாளர் காட்டம்

(கொழும்பு)

தீவிரவாதிகள் அரசியலில் ஈடுபடும் போது, படையினர் அரசியலில் ஈடுபட்டால் என்ன என்று படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு திரட்டும் பணியில் ஓய்வுபெற்ற மற்றும் சேவையில் உள்ள படையினரை அரசாங்கம் ஈடுபடுத்தியுள்ளதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளன.

இந்நிலையில், இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

24 ஆம் பக்கம் பார்க்க....

## எம்.பியை கட்சி மாற்றுவதற்கு 25 கோடி ரூபாய்க்குப் பேரம்

(கொழும்பு)

என்னை 25 கோடி ரூபாய்களுக்கு விலை பேசினார்கள். அத்துடன் தனது தந்தைக்கு ஆதரவளித்து அரசாங்கத்துடன் இணைந்து கொண்டால் நான் விரும்புவது எல்லாவற்றையும் தருவதாக நாமல் ராஜபக்ஷ என்னிடம் கூறினார் என்று எம்.கே.டி.எஸ். குணவர்தன எம்.பி. கூறினார்.

திருகோணமலை 4 ஆம் கட்டை பகுதியில் பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்து நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்தும் பேசுகையில்,

நான் அரசாங்கத்தை விட்டு வெளியேறிய பின்னர் இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவர் என்னுடன் இரண்டுமுறை தொடர்பு கொண்டு பேசினார். 25

23 ஆம் பக்கம் பார்க்க....

## இராசியான இலக்கம்-08 மீண்டும் ஜனாதிபதி மகிந்தவே

### ஜோதிடர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி தேர்தலில் மூன்றாவது தடவை மாத்திரமல்லாது நான்காவது தடவையும் அவரே வெற்றி பெறுவார். ஏன் என்றால் பிறவியிலேயே அதிர்ஷ்டசாலி என சிரேஷ்ட ஜோதிடரும், ஜனாதிபதியின் ஜோதிட ஆலோசகருமான தேசபந்து சுமனதாச அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள அவர்,

எதிர்வரும் ஜனவரி மாதம் 8-ம திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே வெற்றி பெறுவார். 8-ம் இலக்கம் மகிந்த ராஜபக்ஷவுக்கு இராசியான இலக்கம் என்பதால் தேர்தலில் அவர் வெற்றி பெறுவார்.

உலகத்தில் எந்தவொரு ஜனாதிபதியும் தனது பிறந்த தினத்திற்கு முன்னதாக ஜனாதிபதி தேர்தலை

24 ஆம் பக்கம் பார்க்க....

## கூட்டத்தில் பொதுமக்கள் கூச்சல் பாதியில் உரையை நிறுத்திய மகிந்த



(கொழும்பு)

தம்புள்ளையில் ஆளும் கட்சியின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உரையாற்றிய போது, அங்கிருந்தவர்கள் கூச்சல் எழுப்பிக் கொண்டிருந்ததால், ஆத்திரத்தில் தனது பேச்சை முடித்துக் கொண்டு கீழ் இறங்கிச் சென்ற சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பாக ஆங்கில ஊடகங்கள் வெளியிட்டுள்ள தகவலில்,

தம்புள்ளையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உரையாற்றிக் கொண்டிருந்த போது கூட்டத்தில் பங்கேற்றிருந்த பொது மக்கள் தொடர்ச்சியாக கூச்சல் குழப்பம் விளைவித்துக் கொண்டிருந்தனர்.

இதனால், மகிந்த ராஜபக்ஷ கோபமடைந்து பலமுறை கூட்டத்தினரை அமைதியாக இருக்கும்படி கேட்டுக் கொண்டார்.

அதையடுத்து அமைதியாவதும்

23 ஆம் பக்கம் பார்க்க....

## தேர்தல் வன்முறை அதிகரிப்பு!

(கொழும்பு)

தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக பப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியராச்சி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலுடன் தொடர்புடைய வன்முறை சம்பங்கள் குறித்து இதுவரை 178 முறைப்பாடுகள் கிடைத்துள்ளது.

இதில் 50 முறைப்பாடுகள் துப்பாக்கிகள் பயன்படுத்தப்பட்ட வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவை.

இதேவேளை தேர்தல் சட்டமீறல

23 ஆம் பக்கம் பார்க்க....

## அப்பாவை காணவில்லை அம்மா வெளிநாட்டுக்கு

### 13 வயது மகன் சாட்சியம்

(வவுனியா)

செட்டிகுளம், மெனிக்பாம் பகுதியில் உள்ள எமது வீட்டின் கதவை கோடரியால் கொத்தித் திறந்த இராணுவம் அப்பாவை பிடித்துச் சென்றது என 13 வயது மகன் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்தார். வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலகத்தில் இரண்டாவது நாளாக நேற்று இடம்பெற்ற ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணையின் போதே குணராசா டிலக்சன் என்ற 13 வயது சிறுவன் இவ்

23 ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதிக்கு பேராசை ரணில் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பேராசை காரணமாகவே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மூன்றாம் தவணைக்காக தேர்தலில் போட்டியிடுகின்றார் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

சிங்களக் கிராமங்களில் ஓர் பழமொழி சொல்லப்படும். மூன்று வேளை சாப்பிடுவது தொடர்பில் இந்த பழமொழி சொல்லப்படும்.

23 ஆம் பக்கம் பார்க்க....

## ஓமந்தை வரை சென்ற எனது மகளை காணவில்லை

(வவுனியா)

முள்ளிவாய்க்காலிலிருந்து ஓமந்தைவரை வந்து இராணுவத்திடம் பதிவுசெய்துகொண்ட எனது 14 வயது மகள் இன்று வரை எங்கே என்று தெரியாது என ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் தாய் ஒருவர் சாட்சியமளித்துள்ளார்.

வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஜனாதிபதி ஆணைக்குழுவின் இரண்டாம் நாள் விசாரணையின் போதே அவர் இவ்வாறு சாட்சியமளித்தார். தாயாராகிய விக்கினேஸ்வரன் ரஞ்சினி தொடர்ந்து சாட்சியமளிக்கையில்,

நான் செட்டிகுளம், தட்டான் குளத்தில் இருக்கின்றேன். மகள் லக்சி முள்ளியவாய்காலில் எனது அம்மாவுடன் தங்கிநின்று படித்தவள். அங்கு வைத்து 2008 ஆம் ஆண்டு எனது

23 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயிரிழையில் உயிர் தப்பிய தாய்லாந்து முன்னாள் பிரதமர்

(கொழும்பு)


தாய்லாந்து முன்னாள் பிரதமர் தக்ஷின் சினவத்ரா இலங்கையில் மயிரிழையில் உயிர் தப்பியதாக கூறப்படுகிறது.

இலங்கை வந்திருந்த தாய்லாந்து முன்னாள் பிரதமர் அண்மையில் அருத்துருகிரிய பிரதேசத்தில் விபத்துக்குள்ளான விமானத்தில் பயணம் செய்ய இருந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

விபத்திற்குள்ளான அண்டனோவ் விமானம் திருகோணமலையில் இருந்து கொழும்பு இரத்மலானை விமான நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

தாய்லாந்து முன்னாள் பிரதமர் சினவத்ரா உட்பட 5 பேரை மீண்டும் திருகோணமலைக்கு அழைத்துச் செல்லும் நோக்கில் இந்த விமானம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

சினவத்ரா உட்பட 5 பேர் விசேட பணியொன்றுக்காக விபத்து இடம்பெற்ற தினம் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்திருந்தனர்.



அங்கிருந்து அவர்கள் விசேட ஹெலிகொப்டர் மூலம் திருகோணமலைக்கு அழைத்துச் செல்லப்படவிருந்தனர்.

எனினும் அன்றைய தினம் காணப்பட்ட அதிகமான பனிமூட்டம் காரணமாக தன்னால் ஹெலிகொப்டரை செலுத்த முடியாது என விமானி அறிவித்துள்ளார்.

இதனையடுத்து விசேட பிரதிநிதிகளை அழைத்துச் செல்லும் ஹெலிகொப்டர் மூலமாக அவர்கள் இரத்மலானை விமான நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

அங்கிருந்து இவர்களை அழைத்துச் செல்ல பனிமூட்டத்திற்கு மேலாக பறக்கக் கூடிய விமானம் ஒன்றை இரத்மலானையில் இறக்குமாறு உத்தரவிடப்பட்டிருந்தது.

அதற்கென வந்த விமானம் இரத்மலானை விமான நிலையத்தில் தரையிறக்கும் நோக்கில் தாழ பறந்த போதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், அன்றைய தினம் மாலை பனிமூட்டம் குறைந்த பின்னர் தாய்லாந்து முன்னாள் பிரதமர் உட்பட 5 பேர் விசேட ஹெலிகொப்டர் மூலமாக திருகோணமலை கடற்படை முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (எ-11)

## மாணவனைத் தாக்கிய இருவர் கைதாகினர்

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினர் என தம்மை அடையாளப்படுத்தி பல்கலைக்கழக மாணவர்களை தாக்கிய இருவரை யாழ்ப்பாண பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவபீடத்தில் கல்வி பயிலும் மாணவன் ஒருவரும், யாழ்ப்பாணத்தில் உள்ள வங்கி ஒன்றில் பணி புரியும் ஊழியர் ஒருவரும் தம்மை பயங்கரவாத குற்றத் தடுப்பு பிரிவினர் என அடையாளப்படுத்தி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலைப்பீடத்தில் கல்வி பயிலும் மாணவர்களைத் தாக்கியுள்ளனர்.

இதுதொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு தெரிய வந்ததையடுத்து மேற்படி இருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் பல்கலைக்கழக நிர்வாகத்தினரிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-4)

# அவுஸ். செல்வதற்கு தயாராகும் கம்மன்பில

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமய கட்சியில் இருந்து விலகிய மேல் மாகாண சபை உறுப்பினர் உதய கம்மன்பில, ஜனாதிபதித் தேர்தல் முடிந்தவுடன் குடும்பத்துடன் அவுஸ்திரேலியாவுக்கு சென்று குடியேறவுள்ளதாக தெரியவருகிறது.

அதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதுடன் விமான பயணச்சீட்டுகளும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக நம்ப தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன் காரணமாக மேல் மாகாண முதலமைச்சர் பதவியை ஏற்குமாறு ஜனாதிபதி விடுத்த கோரிக்கையை அவர் தயவுடன் மறுத்துள்ளார்.

உதய கம்மன்பிலவின் பிரத்தியேக செயலாளராக பணியாற்றிய இவரது மனைவி தினேஷாவை தனது நிலைப்பாட்டுக்குள் ஜனாதிபதி கொண்டு வந்தார்.

இதன் காரணமாகவே உதய கம்மன்பில பொது வேட்பாளருக்கு வழங்கிய ஆதரவை வாபஸ் பெற்று மீண்டும் ஆளும் கட்சி பக்கம் தாவியதாக கூறப்படுகிறது.

பொது வேட்பாளர மைத்திரிபால சிறிசேனவுடன் ஜாதிக ஹெல உறுமய கைசாத்திட்ட உடன்படிக்கையை கம்மன்பிலவே தயார் செய்தார்.

மனைவி கொடுக்கும் அழுத்தம் காரணமாகவே அந்த உடன்படிக்கை பற்றி தனக்கு எதுவும் தெரியாது என அவர் கூறி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

உதயகம்மன்பில அவுஸ்திரேலியாவில் வசிப்பதற்கான நிரந்தர வதிவிட விசாவை பெற்றவர். இதனால், அவரும் அவரது குடும்பத்தினரும் விரும்பிய நேரத்தில் அந்த நாட்டுக்கு தடையின்றி செல்ல முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

# சனத் தொகையின் அளவு எஸ்.பிக்கு தெரியாதாம்!

உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க அடுத்த ஜனாதிபதி தேர்தலில் மகிந்த 2500 மில்லியன் வாக்குகளால் வெற்றி பெறுவார் என புதிய புள்ளி விபரமொன்றினை வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் மொத்த சனத்தொகை 20.46 மில்லியன்களாகும். வாக்காளர் தொகையோ 15.47 மில்லியன்களாகும்.

இவ்வாறு கூறியிருக்கும் உயர் கல்வி அமைச்சரின் அறியாமையை எப்படிக் கூறுவது என ஆங்கில இணையத்தளம் ஒன்று கேள்வியெழுப்பியுள்ளது.

நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே உயர் கல்வி அமைச்சர் எஸ்பி.திஸாநாயக்க இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அது மாத்திரம் அல்லாது உலக சனத்தொகையில் 33 வீதமான மக்கள் இலங்கையில் வசிப்பதாகவும் அவர் புதிய புள்ளிவிபரம் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இவருடைய இவ்வாறான சிறுப்பிள்ளைத்தனமான கருத்துக்களை பார்க்கும் போது இவர் உண்மையில் உயர் கல்வி அமைச்சர் பதவிக்கு பொருத்தமானவரா என்றும் அவ்விணையத்தளம் குறிப்பிட்டுள்ளது. (எ-11)

## கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலய ஆசிரியர் இ.ரகுநாதன் அவர்களின் அன்புத் தாயார்.

**இராமையா இராசமணி**

அவர்கள் 14.12.2014 அன்று இறைபதமடைந்தமையையிட்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு, அவரின் பிரிவால் துயரடைந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச்சங்கம்
கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்

(சி-9392)

## தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி வரணி

**பானை முறையிலான வடிகலன் தொகுதியை திருத்தம் செய்தல்**

எமது வரணி வடிசாலையிலுள்ள பானை முறையிலான வடிகலன் தொகுதியை முழுமையாகத் தொழிற்படுத்துவதற்காக இந்த துறைசார்ந்த தொழில்நுட்பவியலாளர் மூலம் அதனை திருத்தம் செய்யவுள்ளோம். செய்ய வேண்டிய திருத்தத்தை பரீட்சித்து திருத்தத்திற்கான உத்தேச செலவு மதிப்பீட்டைக் குறிப்பிட்டு **தலைவர், தென்மராட்சி ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் கொத்தணி, வரணி** என்ற முகவரிக்கு 25.12.2014 ஆம் திகதிக்கு முன்னர் மூடி ஒட்டிய நிலையில் பதிவுத்தபாலிலோ அல்லது நேரிலோ ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கூறுவிலை அனைத்தும் எமது நெறியாளர் குழுவுக்குச் சமர்ப்பித்து இறுதி முடிவு அவர்களால் மேற்கொள்ளப்பட்டு தங்களுக்கு அறிவிக்கப்படும்.

கி.பூபாலசிங்கம்,
தலைவர்.


(சி-9390)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7602
021 567 1532

## மரண அறிவித்தல்

**இராமலிங்கம் இரஞ்சிதன்**

(B.Com.Hons - சுபகணநாதன் பண்ணை உரிமையாளர்)



அல்வாய் கிழக்கு, அல்வாயை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் இரஞ்சிதன் 14.12.2014 ஞாயிற்றுக் கிழமை அகால மரணமானார்.

அன்னார் இராமலிங்கம் மற்றும் காலம்சென்ற காருண்யபுஸ்பம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், சுபதாவின் (முகாமைத்துவ உதவியாளர் - பிரதேச சபை புலோலி) அன்புக் கணவரும், துசோபன் (யா/நெல்லியடி மெ.மி.த.க பாடசாலை மாணவன்), ஹரிவக்ஸன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலம்சென்ற பாலசுந்தரம் மற்றும் செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜ்மோகன் (கோபி-லண்டன்), கிருஷாந்தி, காயத்திரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிபாஸ்கரன் (Sierra Cables), ஞானேஸ்வரன் (சாவகச்சேரி பிரதேச செயலக சமுர்த்தி உத்தியோகத்தர்), இரஞ்சனா (லண்டன்), சுஜாத்தா (லண்டன்), சுகிதா, சுஜித்தா ஆகியோரின் மைத்துனரும், கரீசன் சுகந்தா (லண்டன்), குமரேஸ்வரன் (சூட்டி - கிருஸ்ணா கிறீம் ஹவுஸ்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (16.12.2014) செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.


அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

தகவல்
குடும்பத்தினர்

(சி-9391)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மிகவும் உண்மை போல் இருக்கும் தகவல்கள் வழமையாக நம்பத் தகுந்தனவாக இருப்பதில்லை!



## ரூ.30,000 மட்டுமே கொண்டு உலகளவில் பிரசித்தி பெற்ற நிறுவனத்துடன் இணைந்து மேலும் பணம் சம்பாதிக்கக் கூடிய அரிய வாய்ப்பு!

வீட்டிலிருந்து கொண்டே உங்கள் வசதிப்படி வேலை செய்து மாதமொன்றிற்கு ரூ.25,000 க்கு மேலான பணத்தைச் சம்பாதிக்கலாம்.

வேலை விபரம்: உலகளவில் பிரசித்த பெற்ற நிறுவனம் ஒன்றில் ஒரு தொகையான பிரத்தியேகப் பொருட்களின் விற்பனையை விருத்தி செய்வதற்காக அனுமதிக்கப்பட்ட பிரதிநிதி.

தகைமைகள்: க.பொ.த. சாதாரணதர பரீட்சையில் 3 பாடங்களில் சாதாரண சித்தி. வேலை முன் அனுபவம் தேவையில்லை.

பொருட்களின் விற்பனையை விருத்தி செய்வது மற்றும் இந்த பிரத்தியேக நிறுவனத்துடன் இணைய உங்கள் நண்பர்களை அறிமுகப்படுத்துதல் மூலமாக நீங்கள் மேலும் சம்பாதிக்க முடியும்.

மேற்கூறப்பட்ட தகவல் ஒரு உதாரணமாகும்!
பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்கள் பல வடிவங்களில் உங்கள் வழியில் வரலாம்.

**அவை உங்களை ஏமாற்றுபவை மட்டுமல்ல அவை உங்கள் குடும்பங்களின் மகிழ்ச்சி மற்றும் நிம்மதியையும் அழிக்கின்றன!**
**நன்மையான மற்றும் பாதுகாப்பான வாய்ப்புக்களைத் தெரிந்தெடுத்து கஷ்டப்பட்டுச் சம்பாதித்த உங்கள் பணத்தைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்!**

### பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்களின் அடிப்படை அம்சங்கள் உள்ளடக்குபவை

- பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் பொழுது அல்லது பங்குபற்றுபவர்களினால் மேற்கொள்ளப்படும் பங்களிப்புக்கள் அதிகரிக்கும் பொழுது உயர்ந்தவொரு வருமானம் கிடைக்கும் என உறுதிமொழி வழங்குதல்.
- நம்பமுடியாத உயர் வருமானங்கள் மற்றும் ஏனைய நன்மைகள் பற்றிய தவறான உறுதிமொழிகளை அடிக்கடி மேற்கொள்ளுதல்.
- திட்டத்தின் மூலம் விநியோகிக்கப்படும் பொருட்களுக்குத் திடமான சந்தைக் கேள்வியோ மற்றும் இரண்டாந்தரச் சந்தையோ இல்லாதிருத்தல்.
- பொருட்களுக்கு உத்தரவாதங்களோ அல்லது விற்பனைக்குப் பிந்திய பணிகளோ வழங்கப்படுவதில்லை.
- திட்டத்திலிருந்தான வருமானம் பங்குபற்றுபவரின் விற்பனை அளவைப் பொறுத்தில்லாமல் அவன்/ அவள் கொண்டுவரும் புதிய பங்குபற்றுநர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து வேறுபடுதல்.
- பொதுவாக உயர்ந்த நுழைவுக் கட்டணத்தைக் கொண்டிருத்தல்.
- பங்குபற்றுநர் ஒருவர் திட்டத்திலிருந்து விலகிச் செல்லும் போது விற்பனை செய்யப்படாத மிகுதிப் பொருட்களை மீண்டும் வாங்கும் கொள்கை இல்லாதிருத்தல்.
- பொருட்களை விற்பனை செய்வதில் சிறிதளவு கவனத்தைக் கொண்டிருப்பதுடன் மேலும் புதிய பங்குபற்றுநர்களைச் சேர்ப்பதைப் பிரதான நோக்கமாகக் கொண்டிருத்தல்.
- மிகுந்த வருமானம் கொண்ட பேரம்பேசுதல் மூலம் புதிய பங்குபற்றுநர்களை அவசரமாகத் திட்டத்தில் சேர்ப்பதுடன் பங்குபற்றுநர்களை இரண்டாந்தரம் சிந்திப்பதற்குக் கால அவகாசம் வழங்காமல் இருத்தல்.
- திட்டத்தில் சேருவதற்கான வழமையான அழைப்பு, சிறிதளவு அல்லது முன்அனுபவம் அற்ற அல்லது தகைமைகள் தேவைப்படாத இலகுவானதொரு வேலையாக இருத்தல்.
- பொதுவாகத் திட்டத்தில் சேருவதற்கான கோரிக்கையைப் பெருமளவு உதாசீனம் செய்யமுடியாத நம்பிக்கையுள்ள ஒரு நண்பன் அல்லது குடும்ப அங்கத்தவர் ஒருவர் தான் உங்களைத் திட்டத்தில் இணைப்பதற்கு முயற்சி செய்பவராக இருத்தல்.
- திட்டம் தொடர்பான தகவல்கள், அதன் இருப்பிடம், தொடர்பு கொள்ளும் விபரங்கள் என்பவற்றைப் பொதுவாக அடையமுடியாதிருத்தல்.


குறிப்பு: பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்களைத் தொடங்குதல் மற்றும் பங்குபற்றுதல் என்பன சட்ட விரோதமானதாகும். ஒருவர் குற்றவாளியாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அவர் கடூழியச் சிறைத்தண்டனை மற்றும்/ அல்லது அபராதம் என்பவற்றிற்கு உட்படுத்தப்படுவார்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

மேலதிக விசாரணைகளுக்கு:
தொலைபேசி: 2477100, 2477120, 2477129, 2398539 தொலைநகல்: 2477711
மின்னஞ்சல்: [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்



## வாழ்க்கை வரலாறு....

...நடந்ததை அறிந்த ரஜினியின் அண்ணன் சத்தியநாராயணாவுக்கு கோபம் பொங்கியது. ரஜினியை செம்மையாக அடித்து நொறுக்கினார்.

**பூதச்சாமியார்**

ரஜினிகாந்த், சிறுவயதிலேயே பயம் இல்லாதவராக-துணிச்சல் மிக்கவராக இருந்தார். அவர் ஆறாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும் போது, பள்ளிக்கூடத்துக்கு அருகில் உள்ள காட்டில் பூதச்சாமியார் என்று ஒரு சாமியார் இருப்பதாக மாணவர்கள் பேசிக்கொள்வார்கள்.

பூதமாவது! சாமியாராவது! என்று ரஜினி கேலி செய்வார். அப்படியானால், நீ காட்டுக்கு தன்னந்தனியாகச் சென்று அந்த சாமியாரைப் பார்த்துவிட்டு வா பார்க்கலாம்! என்று மற்ற மாணவர்கள் சவால் விட்டனர்.

சவாலை ஏற்ற ரஜினி, தன்னந்தனியாக காட்டுக்குள் நுழைந்தார். கால்போன போக்கில் வெகுதூரம் சென்று விட்டார். சாமியாரைக் காணோம். நடுக்காடு. இருள் சூழ்ந்து கொண்டு வந்தது. ஆள் அரவமே இல்லை. ரஜினிக்கு லேசாக பயம் வந்தது.

அந்தச் சமயத்தில் வா, மகனே வா! என்று குரல் கேட்டது. ரஜினி திரும்பிப் பார்த்தார். அங்கே ஒரு சாமியார் நின்றுகொண்டிருந்தார். வயது சுமார் 60 அல்லது 70 இருக்கும். தலைமுடி, சடை சடையாகத் தொங்கியது. ரஜினி அவர் அருகில் சென்றார். அவர் ஏதோ மந்திரம் சொல்லி, அதைத் திருப்பிச் சொல்லும்படி ரஜினியிடம் கூறினார். அதன்படி ரஜினி திருப்பிச் சொன்னார்.

இப்போது நீ திரும்பிப்போ! நாளைக்கு வா! என்று சொன்னார், சாமியார். ரஜினி காட்டுக்குள் போய் வெகு நேரமாகத் திரும்பி வராததால், அவருடைய நண்பர்கள் பயந்து போய்விட்டார்கள்.

அப்போது ரஜினிகாந்த், பூதச்சாமியாரைப் பார்த்துவிட்டேன் என்று கூறிக்கொண்டே ஓடி வந்தார். நிஜமாகவா! சாமியாரை பார்த்தாயா! என்று நண்பர்கள் வியப்புடன் கேட்டார்கள். நடந்த விவரங்களை எல்லாம் அவர்களிடம் ரஜினி கூறினார். தைரியமாக நடுக் காட்டுக்கு போய் சாமியாரைப் பார்த்துவிட்டுத் திரும்பிய ரஜினியை நண்பர்கள் பாராட்டினார்கள்.

மறுநாள் பூதச்சாமியாரை ரஜினி போய்ப் பார்த்தார். தொடர்ந்து சில நாட்கள் சென்று வந்தார். ரஜினிக்கு யோகாவையும் சில மந்திரங்களையும் சாமியார் கற்றுக் கொடுத்தார். பிறகு, எதிர்காலத்தில் நீ பெரிய ஆளாக வருவாய் என்று ஆசீர்வதித்து அனுப்பி வைத்தார்.

தந்தையின் விருப்பப்படி கல்லூரியில் சேர்ந்த ரஜினிகாந்த், படிக்கப் பிடிக்காமல் வேலை தேடி சென்னைக்கு ஓடி வந்தார். பல கஷ்டங்களை அனுபவித்தார். கிடைத்த சம்பளத்தில் சினிமா பார்த்துவிட்டு பட்டினி கிடந்தார்.

பெங்களூர் ராமகிருஷ்ணா மிஷன் பள்ளியில் எஸ்.எஸ்.எல்.சி. படித்து முடித்தபோது ரஜினிக்கு வயது 16. அரும்பு மீசை வளரத் தொடங்கிய பருவம். சும்மா ஊர் சுற்றிக்கொண்டிருந்தால், பையன் கெட்டுப்போய் விடுவான், கல்லூரியில் சேர்ந்து படிக்கட்டும் என்று ரஜினியின் தந்தை முடிவு செய்தார்.

தந்தையின் வற்புறுத்தல் காரணமாக வேறு வழியின்றி கல்லூரியில் பி.யு.சி வகுப் பில் சேர்ந்தார். ரஜினி, சில மாதங்கள்தான் படித்தார். படிப்பு வேம்பாய்க் கசந்தது. கல்லூரியில் சம்பளம் கட்டுவ தற்காகக் கொடுத்த 200 ரூபாவை எடுத்துக் கொண்டு சென்னைக்கு ரெயில் ஏறிவிட் டார்.

இந்தக் காலகட்டத்தில் ரஜினி சினிமாப் படங் கள் பார்ப்பது உண்டு. என்றாலும் சினிமாவில் நடிக்கும் ஆசை வரவில்லை. ஏதாவது வேலை தேடலாம் என்ற எண்ணத்தில் தான் சென்னைக்கு வந்தார்.

ஆனால், பல இடங்களில் தேடியும் வேலை கிடைக்கவில்லை. பணம் கரையக் கரைய, பயம் ஏற்பட்டது. கடைசியில் ஒரு தச்சுப் பட்டறையில் வேலைக்குச் சேர்ந்தார். அங்கு போதிய வருமானமும் இல்லை. வேலையும் பிடிக்கவில்லை. எனவே, பெங்களூருக்குத் திரும்பிச் சென்றார்.

**மீண்டும் சென்னை**

பெங்களூரில் ஒரு மளிகைக் கடையில் வேலைக்குச் சேர்ந்தார். (தொடரும்)

## சின்ன வயதில் நடத்திய லீலைகள்



ரஜினியின் அண்ணன்,அண்ணி

# உயிரெழுத்து அகராதி

## ஒரு விமர்சனப் பார்வை

நவீன தொழில்நுட்ப சாதனை வளர்ச்சியின் பயனாக வாசிப்புப் பழக்கம் அருகிவிட்டது எனும் கருத்து



மேலோங்கியுள்ள இக்காலத்தில் நூல்வெளியீடுகளும் அருகிவிட்டன.

இவ்வாறான சூழலில் நல்வழி வெளியீட்டாக கோவிலாக்கண்டி, கந்தையா கனகம்மா நிதியம் பாடசாலைமாணவர்களுக்கு இலவசமாக வழங்கவென தமிழ் அகராதித் தொகுப்பை பயணம் 02 என வெளியிட்டமை, நல்வழி சார்ந்து. பயணம் 01 இல் ஔவைப் பாட்டியின் அறநெறி நூல்களையும் தேர்ந்தெடுத்த திருக்குறள்களையும் தொகுத்து வெளியிட்டமை மிகுந்த வரவேற்பைப் பெற்றது. அவ்வகையில் இலகு நூல்களாக சிறுசிறு பதிப்புகளாக நிகழ்ந்த பயணங்கள் இரண்டும் மிகுந்த பயனுள்ளவை. உளவியல் அடிப்படையில் எவையும் நேர்ச் சிந்தனைகளாகக் கொள்ளல் வேண்டும் எனக் கூறுவர். இங்கு நேர்ச் சிந்தனைகளுடன் செயல் வடிவமும் நூலினூடே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

ஈழத்தில் பல்வேறு அகராதி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதை அறிஞர்கள் அறிவர். அதை புலமைப்பணி வள்ர்க என வழங்கிய வாழ்த்துச் செய்தியில் மறவன்புலவு சச்சிதானந்தம் ஐயா அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார். ஆயினும் உயிரெழுத்து அகராதி என வெளிவருவது நான் அறிந்த வரை இதுவே முதன் முயற்சியாகும்.

தற்காலத்தில் நிறுவனங்கள் நோக்கக் கூற்று, பணிக்கூற்று என்பன காட்சிப்படுத்த வேண்டியது விதியாக்கப்பட்டுள்ளது. இப்போக்கு இந்நூல் விபரத்திலும் முன்னுரையின் Vம் பக்கத்திலும் வெளியீட்டாளர்களால் குறிப்பிட்டிருப்பது, நூல் வெளியீட்டில் புதுமையும்பாராட்ட வேண்டியதுமாகும்.

அகராதியின் அட்டைப்படம் தமிழ்-தமிழ்- தமிழ் அகராதி என்பதற்கு ஏற்றவாறு மண் மணம் கற்றற் சூழல், விழுமியப் பண்புகள், எமது அடையாளக் குறியீடுகள் ஆகியவற்றையும் புலப்படுத்தி நிற்கின்றன. நூலின் நுழைவில் எவ்வழி நல்வழி! அவ்வழி நம்வழி! எனக் கூறலும், வரட்சிநிலை தொடரலாமா, வளம் சேர்க்க வேண்டாமா? என வினவுவதும் வளர்தெடுப்போம் வாருங்கள் என அழைப்பதும் ஊர் கூடித் தேர் இழுக்கும் ஒற்றுமைப் பலத்தை புலப்படுத்துகின்றது. இங்கு வரட்சி நிலை என்பது [illegible] வரட்சியை மட்டும் சுட்டாது கருத்து வரட்சியையும் சுட்டுகின்றது என்பது ஆழநோக்குபவர்களுக்கு எளிதில் புரியும். கூறிவிட்டு இருப்பதை விடச் செய்து காட்டுவோம் வாருங்கள் என அறை கூவல் விடுக்கின்றது.

இவ்வகராதிக்கு மேலும் வளஞ் சேர்க்க எண்ணுபவையாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- பக்க வடிவமைப்பிலுள்ள உயிரெழுத்து அகராதி, நல்வழி என தாளின் கீழ் காணப்படுபவை சொற்களுடன் இணைந்துள்ளமை. கவனித்திருக்க வேண்டும்.
- தாளின் மேற்பக்கத்தில் எவ்வெழுத்துத் தொடர்கள் காணப்படுகின்றது எனும் சுட்டியிடப்பட்டிருக்கலாம்.
- சொற்களுக்கான பொருட்கள் ஒரே பக்கத்தில் பதித்தல் போன்ற சிறிய நுணுக்கங்களைக் கூறலாம்.

அகராதிக்கு, மகுடம் போன்று பின்னட்டையில் காணப்படும் அகர வரிசையிலான அன்னையின் பொற்பாதம் அனுதினம் தொழுவோம்... எனத் தொடங்கும் கவிதை ஆசிரியரின் தமிழ்ப் புலமை, கலாசார விழுமியப் பற்று என்பனவற்றைச் சுட்டி நிற்கின்றது.

அதேபோல அதே கவிதையில் வரும் ஐயம் தோன்றின் அகராதி பார்ப்போம்.... எனும் வரிகள் சுயதேடலை வலியுறுத்துகின்றது.

சு.சுதர்சன்

# சமைப்போம் சுவைப்போம்

## வெந்தய சூப்



தேவையான பொருட்கள்

புளி - எலுமிச்சை அளவு
உப்பு -சிறிது
வெந்தயம் -
1/4 டீஸ்பூன்
துவரம் பருப்பு -
1 டீஸ்பூன்
மிளகாய் வற்றல்- 6
மிளகு- 1 டீஸ்பூன்
தேங்காய்த் துருவல்-
1 1/2 டீஸ்பூன்
நல்லெண்ணெய்-
1 டீஸ்பூன் நெய்-
1 டீஸ்பூன் கடுகு- 1/4 டீஸ்பூன் பெருங்காயம் - சிறிது

செய்முறை

முதலில் புளியை நீரில் போட்டு கரைத்து புளி நீரின் தெளிவை 2 கப் எடுத்துக் கொள்ள வேண்டும். இதில் உப்பைப் போட்டு அடுப்பில் வைத்து கொதிக்க வைக்கவும்.

வெந்தயம், துவரம் பருப்பு, மிளகாய் வற்றல், மிளகு, தேங்காய்த் துருவல் இவற்றில் தேங்காய் துருவல் இல்லாமல் மீதியை நல்லெண்ணெய் விட்டு வறுத்துக் கொண்டு, பிறகு தேங்காய்த் துருவலைச் சேர்த்து அம்மியில் வைத்து வெண்ணெய் போல் அரைத்துக்கொள்ள வேண்டும்.

அரைத்த விழுதை சிறிதளவு நீரில் கரைத்து கொதித்துக் கொண்டிருக்கும் புளி நீரில் கொட்டி நன்றாக கலக்கி விடவும். ஒரு கரண்டியில் நெய் ஒரு தேக்கரண்டி விட்டு காய்ந்ததும் மிளகாய் வற்றல் இரண்டு கடுகு போட்டு தாளித்து சூப்பில் கொட்டவும். பெருங்காயத்தை நீரில் கரைத்து தெளிவை மட்டும் கொட்டி இறக்கி சூடாகப் பரிமாறவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மாநகரசபை

## சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள், சிற்றுண்டிச்சாலைகள், துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான

# மீள்கேள்வி அறிவித்தல்-2015

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி கடைகள் 01.01.2015ம் திகதி முதல் 31.12.2015ம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

கேள்விப்படிவக்கட்டணம் -ரூபா 500.00 (VAT,NBT நீங்கலாக)
கேள்விப்படிவம் விநியோகித்தல் -16.12.2014—24.12.2014 ந.ப. 12.00 மணிவரை
கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் -26.12.2014 நண்பகல் 12.00 மணிவரை
கேள்விதிறத்தல் -26.12.2014 பி.ப 2.30 மணிக்கு

விண்ணப்பப் படிவத்தினை பூர்த்திசெய்து கடிதஉறையின் இடதுபக்க மூலையில் கடையின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ளகேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தபாலில் அனுப்புவோர் மாநகரஆணையாளர்,மாநகர சபை,யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு 26.12.2014ம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாக கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விக்காரர்கள் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் சமுகமளிக்கலாம்.

மேலதிக விபரங்களை மாநகரசபையின் நானாவித இறைவரிப்பகுதியில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல. 0718628576

மாநகரசபைஅலுவலகம்
யாழ்ப்பாணம்.
12.12.2014 (சி-9387)

ஆணையாளர்,
மாநகரசபை

### மாநகரசபை யாழ்ப்பாணம், மீள்கேள்வி அறிவித்தல் அட்டவணை

| தொ. இல | இறைச்சிக்கடை | கடை இல | மீளளிக்கக்கூடிய கேள்வி பிணைப் பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (12% பெறுமதி சேர் வரியும் 2% தே.க.எ. வரியும் நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 01 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 124,700.00 |
| 02 | பண்ணை கோழிக்கடை | இல.07 | 5,000.00 | 329,200.00 |
| 03 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 77,800.00 |
| 04 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 515,090.00 |
| 05 | புங்கன்குளம் ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 97,570.00 |
| 06 | புங்கன்குளம் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 294,270.00 |
| 07 | அரியாலை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 265,900.00 |
| 08 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 7,000.00 | 494,670.00 |
| 09 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 7,000.00 | 426,500.00 |
| 10 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 7,000.00 | 359,100.00 |
| 11 | நாவாந்துறை ஆட்டிறைச்சிக்கடை | இல.11 | 5,000.00 | 63,080.00 |
| 12 | நாவாந்துறை கருவாட்டுக்கடை | இல.12 | 5,000.00 | 12,850.00 |
| 13 | பண்ணைமீன் சந்தை | | 10,000.00 | 3,289,800.00 |
| 14 | குருநகர் மீன் சந்தை | | 10,000.00 | 1,396,500.00 |
| 15 | சுப்ரமணியம் பூங்கா வளாகத்திலுள்ள சிற்றுண்டிசசாலை | | 1,000.00 | 69,350.00 |
| 16 | புங்கன் குளம் சந்தை | | 2,000.00 | 8,980.00 |
| 17 | இந்து விடுதிக்கு தெற்குப்பக்கமாகவுள்ள வாகனத் தரிப்பிட பாதுகாப்பு நிலையம் | | 1,000.00 | 49,900.00 |

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## மயிலணி, ஸ்ரீ.பாலசுப்பிரமணிய ஐயர் பாலச்சந்திர சர்மா (ஓய்வுநிலை அதிபர்)



வலி தெற்கு பிரதேசசபையும், கலாசார பேரவையும் 11.12.2014 நடத்திய விழாவில் திறந்த வெளிப் போட்டியில் 2014 ஆம் ஆண்டிற்கான தமிழ் சிறுகதை 1ம் இடம், தமிழ் பாடலாக்கம் 2ம் இடம், ஆங்கில சிறுகதை 2ம் இடம், ஆங்கில பாடலாக்கம் 1ம் இடம், ஆங்கில கவிதை 1ம் இடம் ஆகிய பரிசில்களை மயிலணி, பிரம்மஸ்ரீ பா.பாலசந்திர சர்மா பெற்றார். இவர் 2014 ஆம் ஆண்டிற்கான யாழ்.மாவட்ட ரீதியாக ஆங்கில சிறுகதை 2ம் இடம், ஆங்கில பாடலாக்கம் 2ம் இடம் ஆகிய பரிசில்களையும் பெறுகிறார்.2012ஆம் ஆண்டுபிரதேசமட்டத்தில் 10 பரிசில்களை பெற்ற இவர் இதுவரை பிரதேச, மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் 40 இற்கும் மேற்பட்ட பரிசில்களை பெற்றமையும், கலைஞருக்கான விருதையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது. வடலியடைப்பு உதராண சித்தி விநாயகர் ஆலய அர்ச்சக பரம்பரையைச் சேர்ந்த இவர் சோதிட ஆய்வாளரும் ஆவார். இவரது கலைப்பணிகள் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

இங்ஙனம்,
சிவஸ்ரீ.து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் J.P
குடும்பத்தினர், (விளைவேலி ஆதீனம்)

(8764)

# விசேட சலுகை

வலம்புரியின் 15 ஆவது ஆண்டு நிறைவினையொட்டி எமது வாடிக்கையாளர்கள் 01.11.2014 முதல் 31.12.2014 வரை மாபெரும் விசேட விலைக் கழிவுடன் தங்களது விளம்பரங்களை எமது பத்திரிகையில் பிரசுரிக்க முடியும் என்பதனை அறியத் தருகின்றோம்.

**முழுப்பக்கம், அரைப்பக்கங்களிற்கு மாத்திரமே இவ் விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்.**

மேலதிக விபரங்களுக்கு இன்றே வலம்புரி காரியாலயத்தை நாடுங்கள்...

தொடர்புகளுக்கு:- 021 2217 603
021 5671 532
Valampuriijaffna@gmail.com

# இராசி பலன்

16.12.2014
(மார்கழி 01, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.15 மணிக்கு,
நவமி காலை 7.41 மணிவரை
அத்தம் மாலை 6.29 மணிவரை
இராகுகாலம் 3.22-4.52 மணிவரை
சுபநேரம் 10.52-12.22 மணிவரை

வளவன்

**மீனம்** மனதிற்கினிய சம்பவங்கள் இடம் பெறலாம், காரிய அனுகூலமுண்டு, தேகநலனில் புத்துணர்வு ஏற்படும், பயணங்களால் பலனுண்டு, வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**மேடம்** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், கடன்களை வசூலிக்க எடுத்த முயற்சிகள் வெற்றிதரும், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும்.

**இடபம்** பிள்ளைகள் வழியில் சுப செலவுகள் ஏற்படலாம், அரசு வழியில் அனுகூலமுண்டு, பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, கல்யாணக் கனவுகள் நனவாகும்.

**மிதுனம்** தொலைபேசி மூலம் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம், வியாபார விருத்தியுண்டு, பயணங்களால் பலனுண்டு, முயற்சிகளில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**கும்பம்** மற்றவர்களிடம் பேசும்போது நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது, கடன் தொல்லைகள் மனதிற்கு கஷ்டம் தரலாம், வேலைச்சுமை கூடும், போசன சுகமுண்டு.

**கடகம்** பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், கனிவாகப்பேசி காரியம் சாதிப்பீர்கள், உறவினர்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம், வருமானம் திருப்திதரும்.

**மகரம்** போட்டியாக செயற்படுபவர்கள் மனம் மாறுவர், மருத்துவ செலவுகள் குறைந்து மனநிம்மதியைக் கொடுக்கும், தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**சிம்மம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், சான்றோர் சந்திப்புண்டு, கௌரவமான நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**தனுசு** கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், தொழில் ரீதியாக புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் உருவாகும், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள்.

**விருச்சிகம்** வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், பணத் தேவைகள் பூர்த்தியாகும், உறவினர் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், கௌரவமான நாள்.

**துலாம்** புண்ணிய காரியங்களுக்காக செலவுகள் செய்து மகிழ்வீர்கள், ஒருசில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்கும் சூழ்நிலை உருவாகும்.

**கன்னி** குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், சுப தகவல்கள் வந்து சேரலாம், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கேசன்துறை பகுதியில் பண மோசடி குறித்து 24 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன

யாழ்ப்பாண மாவட்டத்தின் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவில் பண மோசடி தொடர்பில் இவ்வருடம் இது வரையான காலப்பகுதியில் 24 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக காங்கேசன்துறை பொலிஸ் பிரிவின் விசேட குற்றப்புலனாய்வு பிரிவின் பொறுப்பதிகாரி எம்.எவ்.எம். பிரிடவுஸ் தெரிவித்தார்.

காங்கேசன்துறை பொலிஸ் பிரிவில் பண மோசடி சம்பவங்கள் அண்மைக் காலமாக அதிகரித்துள்ளமை தொடர்பில் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பண மோசடி, பணக்கொடுக்கல்-வாங்கலில் ஏமாற்று செய்தல், வெளிநாடு செல்வதற்கு போலியான முகவர்களிடம் பணத்தை கொடுத்து ஏமாறும் சம்பவங்கள் அதிகரித்து காணப்படுகின்றன.

வர்த்தக நடவடிக்கையில் காசோலை மூலம் கொடுக்கல்-வாங்கல்களை செய்யும் வர்த்தகர்கள் அதற்கான பணத்தை பெறுவதில் சிக்கல்களை எதிர்கொள்வதுடன், ஏமாறும் சம்பவங்களும் அதிகரித்து காணப்படுகின்றன.

வெளிநாட்டுக்கு அனுப்புவதாக ஏமாற்றும் சம்பவங்கள் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை போன்ற கரையோர பிரதேசங்களிலே அதிகளவில் இடம்பெறுகின்றமை முறைப்பாடுகள் மூலம் தெரிய வருகின்றது. எமக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் வெளிநாட்டுக்கு அனுப்புவதாக கூறி ஏமாற்றும் முறைப்பாடுகளே அதிகம். இதற்கு காரணம் . வெளிநாடு செல்வதில் யாழ்ப்பாண மக்கள் அதிக மோகம் கொண டவர்களாக காணப்படுகின்றனர். ஏமாற்றுக்காரர்களின் பொய்யான வாக்குறுதிகளை நம்பி ஏமாறுகின்றனர் என அவா மேலும் தெரிவித்தார். (இ-5)






## பட்டம் விடும் இளைஞர்களால் நெற்பயிர்கள் பாதிப்படைகிறது

(கரணவாய்)

யாழ்.வடமராட்சி வல்லைப் பகுதியில் உள்ள வெளிப் பிரதேசங்களில் குறிப்பாக வயற் பகுதிகளில் நின்று இளைஞர்கள் பட்டம் ஏற்றுவதால் தமது வயல்களிலுள்ள நெற்பயிர்கள் பாதிக்கப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கூட்டமாக இளைஞர்க்ள் வயல்களுக்குள் சென்று பட்டம் ஏற்றும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் வயல்களில் வளர்ந்துள்ள நெற்பயிர்கள் மிதிபட்டு அழிவடைவதாக சுட்டிக்காட்டுகின்றனர்.

பெருந்தொகை பணத்தை செலவு செய்து நெற்செய்கை மேற்கொண்ட நிலையில் தற்போது பெய்துள்ள மழை ஓரளவு ஆறுதலை ஏற்படுத்தியுள்ள நிலையில் இளைஞர்களின் இத்தகைய செயற்பாடுகள் தமக்கு நட்டத்தை ஏற்படுத்துவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-60)

# தெல்லிப்பழை, உடுவில் பிரதேசங்களை அனர்த்த பிரதேசங்களாக அறிவிக்கவும்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.சுன்னாகம் மின்சார நிலையத்திலிருந்து வெளியேற்றப்பட்ட கழிவு ஒயிலினால் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ள பகுதிகளை அனர்த்தப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தக் கோரி பாதிக்கப்பட்ட மக்களின் கையொப்பங்களுடன் ஆறு கோரிக்கைகளை முன்வைத்து மனு ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.**

இந்த மனுவை சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமையத்தின் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான செல்வி சாந்தா அபிமன்னசிங்கம் நேற்று திங்கட்கிழமை முற்பகல் வலி. வடக்கு, தெல்லிப்பழை மற்றும் வலி. தெற்கு, உடுவில் பிரதேச செயலாளர்களிடம் கையளித்தார்.

இதன்போது சூழல் பாதுகாப்பு அமையத்தின் பொருளாளர் சட்டத்தரணி ஜெ.ஜெயரூபனும் கலந்துகொண்டார்.

அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

யாழ்ப்பாணக் குடாநாடானது குடிதண்ணீருக்கு நிலத்தடி நீரையே முழுமையாக நம்பியுள்ளது.

இத்தகைய நிலத்தடி நீரில் கழிவு எண்ணெயைக் கலப்பதால் அந்த நீரை மனிதரோ மிருகங்களோ பறவைகளோ பயன்படுத்த முடியாது போகும்.

பயிர்ச் செய்கையிலும் முழுமையான பாதிப்பையும் ஏற்படுத்தும். பெருந்தாவரங்களின் அழிவுக்கும் அது காரணமாகிவிடுகின்றது. இந்த நிலைமை காலப் போக்கில் குடாநாட்டு மக்களை நிரந்தரமாக இடப்பெயரச் செய்து பிற இடங்களில் குடியேற வைக்கும்.

அத்துடன் மாசடைந்த நீரைப் பயன்படுத்துவதால் புற்றுநோய், சிறுநீரக நோய், தோல் நோய்கள், மலட்டுத்தன்மை, அங்கவீனம், கருக்கலைவு போன்ற பேராபத்துக்களை ஏற்படுத்தும் என மருத்துவ நிபுணர்களும், சர்வதேச ஆய்வு அமைப்புக்களைச் சேர்ந்தோரும் எச்சரித்துள்ளனர். குடாநாட்டில்நிலத்தடி நீரில் இரசாயனப் பொருட்களும் கனதியான உலோகப் பொருட்களும் கலந்து வருவது மக்களை பேராபத்தினுள் தள்ளிவிடும் என்பதை உறுதிப்படுத்துகிறது.

சுன்னாகம் மின்சார சபை வளாகத்தை அண்டிய பகுதிகளின் கிணறுகளில் கழிவு எண்ணெய் கலந்திருப்பது 2011, 2012 ஆம் ஆண்டுகளிலேயே தேசிய நீர் வழங்கல், வடிகால் அமைப்புச் சபையினால் உறுதிப்படுத்தப்பட்டது. ஆனாலும் இது தொடர்பில் எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை.

இன்று வரை கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி சுன்னாகம், சூராவத்தை, கட்சணாவடலி, மயிலங்காடு, கல்லாக்கட்டுவன், ஏழாலை, மல்லாகம் காட்டுத்துறை, மல்லாகம் மேற்கு நீதிமன்ற பகுதி, கட்டுவன் என பரந்துபட்ட கிராமங்களில் 700 வரையான கிணறுகளில் கழிவு எண்ணெய்கள் கலந்துள்ளமை தெரிய வந்துள்ளது.

எனவே,

1. கழிவு எண்ணெய்கள் கிணற்று நீரில் கலந்துள்ள அனைத்துப் பகுதிகளும், சம்பந்தப்பட்ட தரப்பினரால் அனர்த்தப் பகுதிகளாக காலதாமதமின்றி உடனடியாகப் பிரகடனப்படுத்த வேண்டும்.

2. நீர் மாசடையக்கூடிய சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தொழில் சார் நிலையங்களை இயங்காது தடுக்க வலிகாமம் தெற்கு பிரதேச சபையும் வடக்கு மாகாணசபையும்நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன் இதுவரை காலம்தாழ்த்தியமைக்கான பொறுப்பையும் கூறவேண்டும்.


3. இலங்கை மின்சார சபை வளாகத்தில் இயங்கி வரும் அனல்மின் பிறப்பாக்கிகள் மற்றும் ஏனைய இயந்திரங்களிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு எண்ணெய்களை உரிய சுற்றுச்சூழல் நியமங்களுக்கு அமைவாக வெளியேற்றப்படாமை குறித்து சம்பந்தப்பட்ட மின்சார சபை தரப்பினர் பொறுப்புக் கூறலுக்கு உட்படுத்தப்படுவதுடன், சட்டவிரோத நடவடிக்கைகளும் இடைநிறுத்தப்பட வேண்டும்.

4. நிலத்தடி நீரில் கனத்த உலோகங்கள் அடங்கிய கழிவு எண்ணெய்கள் கலந்திருப்பது தொடர்பாக தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்பு அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டு வந்த பரிசோதனைகளின் பெறுபேறுகள் சம்பந்தப்பட்ட அமைப்புகளுக்கும் பொதுமக்களுக்கும் தெரியப்படுத்தப்பட வேண்டும்.

5.பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதாக சந்தேகிக்கப்படும் அனைத்துக் கிணறுகளும் துரிதமாக ஆய்வுக்குட்பட்டு கண்காணிக்கப்பட வேண்டும்.

6. கழிவு எண்ணெய் குடிதண்ணீரில் கலந்திருப்பதால் ஏற்படக்கூடிய ஆபத்துகள் குறித்து மக்களுக்கு அறிவிப்பதுடன், பாதிக்கப்பட்ட கிணறுகளின் நீரைப் பயன்படுதாது தடுக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அந்த அறிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# கை கொடுக்கின்றது உதவும் இதயங்கள்!




யுத்த அவலங்களை தாங்கி வாழ்ந்துவரும் தமிழ் மக்களிற்கு தம்மாலான உதவிகளை ஜேர்மனியை சேர்ந்த உதவும் இதயங்கள் அமைப்பு தொடர்ந்தவண்ணமேயுள்ளது.

சிறுபுள்ளிகள் சேர்ந்து முழுமையான சித்திரமாவது போன்று ஒவ்வொரு குடும்பமாக அது கைதூக்கிவிட முற்படுகின்றது.

அவ்வகையினில் பளை தம்பகாமம் பகுதியினை சேர்ந்த மறைந்த முன்னாள் போராளியினது குழந்தைகளது கல்விக்கு அந்த அமைப்பு இப போது கைகொடுத்துள்ளது.

உத்தியோகபூர்வமாக உதவித்தொகையினை அவ்வமைப்பின் இலங்கை இணைப்பாளரும் வலி.வடக்கு மீள் குடியேற்ற குழு தலைவருமான ச.சஜீவன் நேரில் போராளியின் பாரியாரிடம் கையளித்துள்ளார். மாதாந்தம் இவ்வுதவிகள் தொடருமென தெரிவிக்கப்படுகின்றது.

ஐந்து குழந்தைகளது தந்தையான குறித்த முன்னாள் போராளி நீண்டகாலம் புனர்வாழ்வு முகாமினில் தடுத்து வைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டிருந்த நிலையினில் விபத்தொன்றினில் சிக்கி அண்மையில் உயிரிழந்திருந்தார்.

மேலும் அவலங்களிடையே வாழும் எமது உறவுகளிற்கு கைகொடுக்க அனைத்து உறவுகளிற்கும் உதவும் இதயங்கள் மீண்டும் அழைப்பு விடுத்துள்ளது. (இ-5)

# தடுப்பு முகாமிலிருந்து திரும்பியவருக்கு சுயநினைவில்லை

அம்பாந்தோட்டை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது நீதிமன்ற உத்தரவுக்கிணங்க பிணையில் விடுவிக்கப்பட்ட சுன்னாகத்தைச் சேர்ந்த 53 வயது நபர், சுயநினைவு இழந்துள்ளார் எனவும் அவருக்கான மருத்துவ சிகிச்சைகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், அவரது உறவினர்கள் தெரிவித்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை அவரை வீட்டுக்கு அழைத்து வந்த நிலையில், இதுவரை அவர் யாருடனும் கதைக்கவில்லை என்றும் உளரீதியாகப் பாதிக்கப்பட்டவரைப் போன்று அவர் அமைதியாக உள்ளார் எனவும் அவரது உறவினர்கள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம், சுன்னாகம் மத்தி, தேவாலய வீதியைச் சேர்ந்த கே.வைரவநாதன் (வயது-53) என்பவரே இவ்வாறு பாதிக்கப்பட்டவராவார். இவர், கொழும்பு ஆமர் வீதியிலுள்ள கடையொன்றில் பணியாற்றிக் கொண்டிருந்த போது கடந்த 1990 ஆம் ஆண்டில் கொழும்பில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவமொன்றை அடுத்து காணாமற் போனார்.

இதன்பின்னர் இவரது பெற்றோர், இவரை பல இடங்களில் தேடியும் வைரவநாதன் தொடர்பாக எந்த தகவலும் இல்லை. காலப்போக்கில் இவரது பெற்றோர் உயிரிழந்துள்ளனர். இந்நிலையில் வைரவநாதன் உயிரிழந்துவிட்டார் என அவரது உறவினர்கள் நினைத்து இருநதுள்ளனர்.

இந்நிலையில், அம்பாந்தோட்டையிலுள்ள தடுப்பு முகாமில் அவர் இருப்பதாக அம்பாந்தோட்டை நீதிமன்றத்தால் அவரது உறவினர்களுக்கு கடந்த நவம்பர் மாதம் 11 ஆம் திகதி கடிதமொன்று அனுப்பப்பட்டது.

கடிதத்தின் பிரகாரம் அம்பாந்தோட்டை சென்ற உறவினர்கள், அவரை பிணையில் விடுவித்து சொந்த ஊருக்கு அழைத்து வந்தனர். இருப்பினும், அவருடன் கதைத்து தகவல்களை பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் அவர் இருப்பதாகவும், அவருக்கான மருத்துவ சிகிச்சைகளை வழங்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் உறவினர்கள் மேலும் தெரிவித்தனர. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்டலின் சிவகுமார் அவர்களின்

# லலிதஷேத்ரா வழங்கும்

## அனுமதி முற்றிலும் இலவசம்

தென்னிந்திய "இரட்டை வயலின்"

புகழ் நெய்வேலி திரு S.இராதா கிருஷ்ணா,

அவர்களுடன் "தவில் சக்கரவர்த்தி" "கலைமாமணி" திரு T.R.கோவிந்தராஜன், வயகலா விபஞ்சி திரு.N.இராமகிருஷ்ணன், காஞ்சி காமகோடி பீட ஆஸ்தான வித்வான் திரு.A.கணேசன், ஈழத்து வாத்தியக் கலைஞர் மென்டலின் S.சிவகுமார் ஆகியோர் இணைந்து வழங்கும்

## கிளர்ந்தெழும் தந்திகள்

## (Scintillating Strings) (இசை விருந்து)



16 ஆம் திகதி செவ்வாய் 2014 மாலை 4 மணி

மண்டப அனுசரணை:-

செல்வ மஹால், இல 1229, பூநாறி மரத்தடி, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

விளம்பர அனுசரணை:-

Beetel Lanka Tours & Transport

Beetel Lanka Courier Service







No.272, KKS Road, Jaffna.

TP:- 021-2228591, 0212222210

அனுசரணை:-

அச்சுத்துறையின் முன்னோடி: Harikanan Printers of the North

Blue Ocean

Chelva

ஸப்தமி கலையகம்

சக்தி வீரகேசரி

PACIFIC METAL (PRIVATE) LTD Importers & General Hardware Merchants

Mercury ACCA Campus

(சி-8757)

---

# மரண அறிவித்தல்

## அமரர் திரு.மு.வ.சுப்பிரமணியம் இரத்தினசபாபதி (சபா)



கொக்குவில் மேற்கு மணியர்பதி வீதியைப் பிறப்பிடமாகவும் பிரான்சினை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இரத்தின சபாபதி (09.12. 2014) செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் பவளம் தம்பதியினரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, மகாதேவா மற்றும் பாக்கியநாதன் (ஜேர்மனி), பரமேஸ்வரி, ஞானேஸ்வரி (பிரான்ஸ்), கமலாதேவி, அசோக்குமார் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 16/12/2014 செவ்வாய்க் கிழமை பிரான்சில் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மணியர்பதி வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்:
தர்மரட்ணம் கமலாதேவி
(பச்சைக்கிளி)
021 205 2095

(8708)

---

## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 48<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/2176 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 19 செவ் 7 இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: A/L, AAT/ கணக்காளர்<br>தொ.இ: G/3264 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 29 செவ் 2 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/2177 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 62 1/2 செவ் 12 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: தனியார் தொழில்<br>தொ.இ: G/3266 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 34<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L/ (USA PR)<br>தொ.இ: B/2181 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 58 செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L (பிரான்ஸ் NOT PR)<br>தொ.இ: G/3268 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 13 செவ் 7 இல்<br>உயரம்: 6'2"<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/2185 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 34 1/4 செவ் 2 இல்<br>உயரம்: 5'5" தகைமை/தொழில்: BSC/ வங்கியாளர் (லண்டன்)<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/3269 |

# கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:- 021 720 1005

Email: kalyanamalai.jaffna@gmail.com

காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை சந்தேக நபரை கையளிக்குக


# இந்தியாவின் கோரிக்கையை நிராகரித்தது மலேசிய அரசு

தென்னிந்தியாவில் உள்ள அமெரிக்கா மற்றும் இஸ்ரேலிய தூதரகங்களின் மீது தாக்குதல் நடத்த திட்டமிட்டதாக கூறப்படும் மலேசியாவில் வசித்த இலங்கையர் ஒருவரை தம்மிடம் கையளிக்குமாறு இந்தியா விடுத்த கோரிக்கையை மலேசியா புறக்கணித்துள்ளது.

இந்தநிலையில் மலேசியா, குறித்த இலங்கையரை இலங்கைக்கு அண்மையில் நாடு கடத்தியுள்ளது. தமிழகத்தில், இந்தக் குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்ட சகீர் ஹுசைனிடம் மேற்கொண்ட விசாரணையின் போது, மலேசியாவில் வசித்து வரும் மொஹமட் ஹுசைன் மொஹமட் சுலை மானும் இதில் தொடர்பு கொண்டுள்ளமை தெரியவந்தது. இதனையடுத்து அவரை தமது நாட்டுக்கு கடத்துமாறு இந்தியா, மலேசியாவிடம் பல்வேறு தடவைகள் கோரிக்கை விடுத்தது.

இதற்காக இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பல உடன்படிக்கைளும் சுட்டிக்காட்டப்பட்டன.


எனினும் மலேசியா அதற்கு உடன்படாமல், குறித்த இலங்கையரை சொந்த நாட்டுக்கே அனுப்பியுள்ளது. கொலைக் குற்றச்சாட்டு ஒன்று தொடர்பிலேயே அவரை நாடு கடத்தியதாக மலேசியா காரணம் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது (இ-5)




# நாம் இரக்க உணர்வை உலக மயமாக்குவோம்

**வரலாற்றின் பக்கங்களில் மட்டுமே குழந்தைத் தொழிலாளர்கள் இருக்கவேண்டும் எனவும் நாம் இரக்க உணர்வை உலக மயமாக்குவோம் என்றும் நோபல் பரிசு பெற்ற இந்தியரான கைலாஷ் சத்யார்த்தி விருப்பம் தெரிவித்துள்ளார்.**

## நோபல் பரிசு பெற்ற கைலாஷ் தெரிவிப்பு



2014ஆம் ஆண்டுக்கான அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற கைலாஷ் சத்யார்த்தி நோர்வேயில் இருந்து நேற்று முன்தினம் அதிகாலை நாடு திரும்பினார். இதையடுத்து அவர் தனது மனைவி சுமேதாவுடன் டில்லியில் மகாத்மா காந்தி சமாதியில் அஞ்சலி செலுததினார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறும்போது, "குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிரான நிலுவையில் உள்ள மசோதா விரைநது நிறைவேற்றப்பட வேண்டும். இந்த மசோதா நிறைவேற உதவும் படி அனைத்து எம்.பிக்கள் மற்றும் தலைவர்களை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். இதை நிறைவேற்றத் தவறினால் வரலாறும் இந்தியக் குழநதைகளும் இவர்களை மன்னிக்க மாட்டார்கள். வாய்மை, அஹிம்சை மற்றும் அமைதியை மக்கள் இயக்கமாக காந்திஜி மாற்றினார். இரக்க உணர்வை மக்கள் இயக்கமாக் மாற்ற வேண்டும் என்பதே எனது விருப்பம். இரக்க உணர்வை நாம் உலகமயமாக்குவோம்" மகாத்மா காந்தியின் கொள்கைகளில் தீவிரப் பற்றுடைய சத்யார்த்தி, நோபல் பரிசு பெற்ற அனுபவம் பற்றி கூறும் போது, "விழா மேடையில் இருந்த ஒவ்வொரு விநாடியும் மகாத்மா காந்திதான் என் நினைவில் இருந்தார். அவருடன் இணைந்து சென்று விருதை பெறுவது போலவே நான் உணரந்தேன்" பரிசுத் தொகை பற்றி அவர் கூறும்போது, "இத்தகைய பெரிய தொகையை இதுவரை வாழ்க்கையில் நான் கண்டதில்லை. இதில உள்ள ஒவ்வொரு பைசாவையும் இந்தியாவிலும் பிற நாடுகளிலும் உள்ள குழந்தைகளின் நலனுககாக செலவிடுவேன்" பாகிஸ்தானைச் சேர்ந்த சிறுமி மலாலா யூசுப்சாயுடன் இணைந்து அமைதிக்கான நோபல பரிசை சத்யார்த்தி பெற்றார்.

இந்தியா - பாகிஸ்தான் உறவு குறித்த கேள்விக்கு சத்யார்த்தி பதில் அளிக்கும்போது, "இதுபற்றி கருத்து கூற நான் அரசியல்வாதி இல்லை. என்றாலும் இவ்விரு நாடுகளிடையே நிலையான அமைதிக்கு, இரு நாட்டு மக்கள் இடையிலான தொடர்பும், பரஸ்பர ஒத்துழைப்பும் அதிகரிக்க வேண்டும் என்பதே எனது கருத்து" என்றார். இந்த விருது எனது பொறுப்புகளை அதிகரித்துள்ளது: நாட்டின் கடைசி குழந்தை தொழிலாளர் மீட்கப்படும் வரை எனது பணி முற்று பெறாது" என்றும் அவர் தெரிவித்தார். (இ-5)

# மதவாத நடவடிக்கைகளை பா.ஜ.க. நிறுத்த வேண்டும்

## பிரதமரிடம் கருணாநிதி வலியுறுத்து

மதவாத நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த வேண்டும் என பிரதமர் நரேந்திர மோடிக்கு தி.மு.க தலைவர் கருணாநிதி வலியுறுத்தியுள்ளார். டிசெம்பர் மாதம் 25ஆம் திகதி கிறிஸ்மஸ் தினத்தன்று "நல்லாட்சி தினம்" என்ற பெயரால் சி.பி.எஸ்.இ. பாடசாலைகளில கட்டுரை போட்டிகள் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று பா.ஜ.க அரசு கூறியிருப்பதாக வெளியான செய்தியை சுட்டிக்காட்டி கருணாநிதி இதனை தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில, பா.ஜ.க. அரசின் நடவடிக்கைகள் நாளுக்கு நாள் விபரீதத்தை ஏற்படுத்துவதாகவும, வேதனையைத் தருவதாகவும்தான் உள்ளன. அந்தக் கட்சியிலே உள்ள பலர் ஜனநாயகத்தையும் - அரசியல் சட்டத்தையும் அனுசரிந்து முறையாக நடந்து கொள்ள வேண்டுமென்பதில் எச்சரிக்கையாக இருந்து வந்த போதிலும், ஒரு சில அமைச்சர்களும், கட்சித் தலைவர்களும் மத-மொழி ரீதியாக ஒரு தலைப்பட்சமாகவே நடந்து கொள்கிறார்கள். கிறித்தவ பெருமக்கள் ஆண்டுக்கு ஒரு முறை சிறப்பாகக் கொண்டாடும் கிறிஸ்மஸ் பெருவிழாவிற்கு ஊறுதேடும் வகையில் நடந்து கொள்ள மத்திய அரசில் சிலர் முயற்சிப்பதாக நாளேடுகளில் செய்து வந்துள்ளது. அதாவது மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சகம் முன்னாள் பிரதமர வாஜ்பாய், இந்து மகாசபைத தலைவர் மதன் மோகன் மாளவியா ஆகியோரின் பிறந்த நாளை "நல்லாட்சி தினம்" என்ற பெயரால் டிசெம்பர் மாதம் 25ஆம் திகதியன்று அதாவது கிறிஸ்மஸ நாளன்று கொண்டாடுவதற்கு முன் வந்திருப்பதாகச் செய்தி வெளியாகயுள்ளது. அதையொட்டி மத்திய பா.ஜ.க. அரசு சி.பி.எஸ்.இ. பாடசாலைகள் அன்றைய தினம கட்டுரை போட்டிகள் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கூறியிருககிறது. சி.பி.எஸ்.இ. நிர்வாகம், தனியார் நடத்தும் பாடசாலைகள் உள்ளிட்ட அதன் பாடசாலைகளுக்கு மத்திய அரசின இந்த விருப்பத்தை நேரடியாகத் தெரிவிக்காவிட்டாலும், மத்திய அரசு தானே நடத்துகின்ற "நவோதயா வித்யாலயா" பாடசாலைகளுக்குச் சுற்றறிக்கையாக அனுப்பி, டிசெம்பர் மாதம் 24, 25 ஆகிய திகதிகளில் "கட்டுரைப போட்டி"களை நடத்த வேண்டுமென்று தெரிவித்துள்ளது என அவர் மேலும சுட்டிக் காட்டியுள்ளார். (இ-5)

## பாரதச் செய்தி

# முஸ்லிம் அல்லாதவர்

தனது டுவிட்டர் பக்கத்தை பின் தொடர்ந்தவர்களில் 60% பேர் முஸ்லிம் அல்லாதவர்கள் என பொலிஸ விசாரணையில் ஐ.எஸ்.ஐ.எஸ். ஆதரவாளர் மேக்தி மஸ்ரூர் பிஸ்வாஸ் தெரிவித்துள்ளதாக மத்திய உள் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்தார். பெங்களூரில் ஐடி நிறுவனத்தில் பொறியியலாளராக பணிபுரிந்து வந்த மேற்கு வங்க மாநிலத்தைச் சேர்ந்த மேக்தி மஸ்ரூர் பிஸ்வாஸ் (24) டுவிட்டர் இணையதளம் மூலம் ஐ.எஸ் ஐ.எஸ் தீவிரவாத அமைப்புக்கு ஆள் சேர்க்கும நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் குற்றம்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார்.

கொல்கத்தாவில் வசிக்கும் ஒரு நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த மேக்தி 2012இல் பொறியியல் படிப்பை முடித்து அதே ஆண்டு பெங்களூர் ஐ.டி.சி நிறுவனத்தில் வேலைக்குச் சேரந்துள்ளார்.

மேக்தி கைதைத் தொடர்ந்து கர்நாடக பொலிஸாரிடம் இருந்து அனைத்துத் தகவல்களையும உள் துறை அமைச்சகம் பெற்றுள்ளது என தெரிவித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் நல்லாட்சிக்கான மாற்றம் நிகழ்வதற்கு பிரித்தானிய அரசு ஆதரவு

(கொழும்பு)

**இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்படுவதற்கு பிரித்தானியாவின் ஆளும் கொன்சர்வேட்டிவ் கட்சி ஆதரவு தெரிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. பிரித்தானிய கொன்சர்வேட்டிவ் கட்சியின் மூன்று பிரதிநிதிகள் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்து எதிரணியின் தலைவர்களைத் தனித்தனியாகச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.**

ஜனாதிபதித் தேர்தலில் பின்புலத்தில் இருந்து ஆதரவு வழங்குவதாக எதிரணியின் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுடனான சந்திப்பின் போது, அவர்கள் உறுதி அளித்துள்ளனர்.

அத்துடன், ஜனநாயக கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா, ஜே.வி.பியின் முன்னாள் தலைவர் சோமவன்ச அமரசிங்க மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவ சபை தலைவர் கரு ஜெயசூரிய ஆகியோரையும் இவர்கள் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இதன்போது இலங்கையில் பிரித்தானிய அரசால் அண்மையில் மேற கொள்ளப்ப்ட ஒரு இரகசிய ஆய்வு முடிவின் படி, நல்லாட்சிக்கான மாற்றம் ஒன்று நிகழ்வதற்கு பிரத்தானிய அரசாங்கம் அரசியல் ரீதியாக ஆதரவாக இருக்கும் என்றும் கொழும்புக்கு விஜயம் செய்த பிரித்தானிய கொன்சர்வேட்டிவ் கட்சி பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

கொழும்புக்கான தமது பயணம் தொடர்பாக பிரித்தானிய அரசாங்கத்துக்கு இவர்கள் அறிக்கை ஒன்றையும் வழங்கவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-5)

## மைத்திரிபால மட்டுமல்ல வேறு எவராலும் மகிந்தவின் வெற்றியை தடுக்க முடியாதாம்

### பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இம்முறையும் அமோக வெற்றி பெற்று நாட்டின் ஜனாதிபதியாவதை மைத்திரிபால சிறிசேனவால் அல்ல வேறு எவராலும் தடுக்க முடியாது என்று பிரதமர் டி.எம்.ஜயரத்ன தெரிவித்தார்.

ஒன்றாக அமர்ந்து இரவு உணவு உண்டுவிட்டு விடியற்காலையில் கட்சியைக் காட்டிக் கொடுத்த மைத்திரிபால சிறிசேனவை நம்பி மக்கள் வாக்களிக்கப்போவதில்லை எனக் குறிப்பிட்ட பிரதமர், ஜனர்திபதி மகிந்த ராஜபக்ஷவுக்குள்ள மக்கள் ஆதரவை எவராலும் தடுத்து விட முடியாது என்றும் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரக் கூட்டம் நேற்று முன்தினம் நாவலப்பிட்டி நகரில் நடைபெற்றது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பிரதமர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், மிக நேர்மையாக அரசியல் செய்த திஸ்ஸ அத்தநாயக்க அவரது கட்சியில் நம்பிக்கை இழந்த நிலையிலேயே அரசாங்கத்தோடு இணைந்துள்ளார்.

இந்த முடிவை அவர் அவசரமாக எடுக்கவில்லை. ஆரம்பித்திலிருந்தே எதிர்க்கட்சித் தலைவரின் செயற்பாடுகளில் அவர் அதிருப்தியடைந்தவர் என்பதை நான் பல சந்தர்ப்பங்களில் அறிந்திருந்தேன்.

சகோதர நிறுவனம் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை விமர்சிப்பவர்கள் ஒன்றைத் தெரிந்து கொள்வது முக்கியம்.

இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் உட்பட பல நாடுகளில் சகோதரர்கள் இணைந்து பல தடவைகள் அரசாங்கம் அமைத்துள்ளமையைக் குறிப்பிட வேண்டும்.

ராஜபக்ஷ குடும்பத்தின் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் முன்னோடிகள் கட்சியைக் கட்டியெழுப்புவதில் டீ. ஏ. ராஜபக்ஷ ஆரம்ப காலத்தில் செயற்பட்டவர்.

சகோதரர்கள் இணைந்து வெற்றிகரமாகச் செயற்படுவதைப் பொறுக்காதவர்களே பொறாமையில் சகோதரர் நிறுவனம் என விமர்சிக்கின்றனர்.

மைத்திரிபால சிறிசேன இரவில் நன்றாக எம்மோடு அப்பம் சாப்பிட்டுவிட்டு காலையில் சொல்லிக் கொள்ளாமல் கட்சியை விட்டுச் சென்றவர், மக்கள் அவரில் எவ்வாறு நம்பிக்கை வைக்க முடியும்? என அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (இ-5)

## பொது எதிரணியினர் ஆரம்பப் பாடசாலை மாணவர் போன்று செயற்படுகின்றனராம்

### அமைச்சர் சுசில் கிண்டல்


தமது பக்கம் வந்துள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையை வைத்து குறிப்பிட்ட எண்ணிக்கை வாக்குகள் தமது பக்கம் வந்துள்ளதாக எதிரணி கூறுகின்றது. இது ஆரம்ப பாடசாலை மாணவர்களின் தர்க்கத்தைப் போன்றதாகும். இவ்வாறு தேர்தலில் கணக்குப் போட முடியாது என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

'கொழும்பில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அமைச்சர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

ஆளும் தரப்பிலிருந்து எதிரணிப் பக்கம் மேலும் பல முக்கியஸ்தர்கள் இணைந்துகொள்வார்கள் என்ற எதிர்பார்ப்பில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தரப்பு இருந்தது. ஆனால் அவ்வாறு எதுவும் அண்மைய தினங்களில் நடைபெறவில்லை. வெள்ளிக்கிழமை பாராளுமன்ற அமர்வின்போது இவ்வாறு இடம்பெறும் என்று எதிரணி எதிர்பார்த்தது.

ஆனால் அவ்வாறு நடக்கவில்லை. அமைச்சர்கள் எதிர்த்தரப்புக்கு வருவார்கள் என்ற கதையை வைத்தே தமது தேர்தல் பிரசாரத்தை முன்னெடுப்பதற்கு எதிரணி முயற்சிக்கின்றது. எனவே அமைச்சர்களின் வருகையிலேயே அவர்களின் பிரசாரம் தங்கியுள்ளது.

ஆனால் கிராமப்புறங்களில் மக்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் மிகவும் உறுதியாக இருக்கின்றனர். மேலும் தமது பக்கம் வந்துள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையை வைத்து குறிப்பிட்ட எண்ணிக்கை வாக்குகள் தமது பக்கம் வந்துள்ளதாக எதிரணி கூறுகின்றது. இது ஆரம்ப பாடசாலை மாணவர்களின் தர்க்க செயற்பாட்டை போன்றதாகும். இவ்வாறு தேர்தலில் கணக்குப் போட முடியாது.



மேல் மாகாண சபை உறுப்பினர் ஹிருணிகா வந்தவுடன் ஏதோ வாக்குகளின் எண்ணிக்கையை குறிப்பிட்டனர். அப்படியானால் உதய கம்மன்பில எமது பக்கத்துக்கு வந்துள்ளாரே? மைத்திரிபால எதிரணிப் பக்கம் சென்றதும் ஐக்கிய தேசிய கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க எம்து பக்கம் வந்தார். இதனால் அக்கட்சிக்குள் நெருக்கடி ஏற்பட்டது. மேலும் திஸ்ஸ அத்தநாயக்க ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து விலகி ஆளும் தரப்பு பக்கம் வருவதற்கு காரணம் ஒன்று இருந்தது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## நாட்டில் உயர்கல்வித் துறையின் வளர்ச்சிக்கு பல வசதி வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது

### அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவிப்பு

உயர்கல்வித்துறையின் அபிவிருத்திக்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பல வசதி வாய்ப்புக்களை சகல பல்கலைக்கழகங்களுக்கும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

கிழக்கு பல்கலைக்கழக திருகோணமலை வளாகத்திற்கான பௌதீக விஞ்ஞான பீடம், நூலகம், சிற்றுண்டிச்சாலை ஆகிய கட்டடங்களுக்கு அடிக்கல் நடும் வைபவத்தில நேற்று முன்தினம் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிழக்கு மாகாண ஆளுநர் ரியல் அட்மிரல் மொஹான் விஜேவிக்ரம, கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் கிட்ணன் கோபிந்தராஜ் உட்பட பல அதிகாரிகளும் இவ் வைபவத்தில் கலந்து கொண்டனர்.

இந்த கட்டடங்களின் நிர்மாண வேலைகளுக்காக 666 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## 8,934 முதியோர் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன-இமெல்டா தெரிவிப்பு

சமூக சேவைகள் அமைச்சால் இந்த வருடத்தில் 8ஆயிரத்து 934 முதியோர்களுக்கான, முதியோர் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

சமூக சேவைகள் திணைக்களம் மூலம் 60 வயதைக் கடந்த முதியோர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கி வரும் முறை, 2008 ஆம் ஆண்டு முதல் மாற்றம் செய்யப்பட்டு, சமூக சேவைகள் அமைச்சால் நேரடியாக வழங்கும் முறை ஏற்படுத்தப்பட்டது.

2008 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை 2 இலட்சத்து 161 முதியோர அடையாள அட்டைகள் அமைச்சால் வழங்கப்பட்டுள்ளன.

பிரதேச செயலகங்களிலுள்ள முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர் அல்லது சமூக சேவைகள் அலுவலர் ஊடாக விண்ணபபித்து, பிரதேச செயலாளர்களின் கையொப்பத்துடன் ஓரிரு மணித்தியாலங்களில் முதியோர் அடையாள அட்டை பெறக்கூடிய நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதனைவிட காலத்துக்கு காலம அமைச்சின் நடமாடும் சேவை, அரசசாரபற்ற நிறுவனங்களின் மூலமான நடமாடும் சேவைகள் மூலமாகவும் முதியோர் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

முதியோர் அடையாள அட்டையை வைத்திருக்கும் ஒருவர், வைத்தியசாலைகள், நீதி சேவைகள், வங்கி சேவைகள், போக்குவரத்து சேவைகள், அரச அலுவலகங்கள் போன்றவற்றில் முன்னுரிமையை பெற்றுக் கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## இலங்கை அகதிகளை என்ன செய்வது? இந்திய மத்திய அரசாங்கம் ஆராய்கிறது

(கொழும்பு)

தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கை அகதிகளை நாட்டுக்கு திருப்பி அனுப்புவது தொடர்பில் ஆய்வு செய்ய இந்தியா முடிவு செய்துள்ளது.

இது தொடர்பில் தமிழக அரசின் முடிவுக்காக மத்திய அரசு காத்திருப்பதாக இந்திய வெளிவிவகார இணை அமைச்சர் ஜெனரல் விகேசிங் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இந்திய நாடாளுமன்றத்தின் மேல வையில் நேற்று முன்தினம் தி.மு.க.வின் உறுப்பினர் கே.பி. ராமலிங்கம் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு அளித்து ள்ள எழுத்து மூலமான பதிலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"இந்தியாவில் தங்கியுள்ள இலங்கை அகதிகளை அவர்களின் நாட்டுக்கு மீண்டும் திருப்பி அனுப்புவது குறித்து அரசாங்கத்துடன் இந்திய மத்திய அரசு பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. இது தொடர்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பு உள்ளிட்ட கட்சிகளின் தலைவர்களுடனும் மத்திய அரசு பேச்சு நடத்தி வருகிறது. இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சியாக இந்த நடவடிக்கையை இந்திய மத்திய அரசு மேற்கொண்டுள்ளது.

இந்திய உள்துறை அமைச்சு மற்றும் வெளிவிவகார அமைச்சுக்களின் அதிகாரிகள் குழு தமிழகத்திலுள்ள அகதிகள் முகாம்களைப் பார்வையிட்டு, அவர்களின் கருத்துகளைக் கேட்டறிய விரும்புகிறது. இலங்கைக்கு திரும்ப முடிவெடுக்கும்' அகதிகள், இந்தியாவிடம் இருந்தும், அரசாங்கத்திடம் இருந்தும் எத்தகைய வசதிகளை எதிர்பார்க்கின்றனர் என்பதை அறிவதற்கு இந்த ஆய்வு அவசியம் என்று மத்திய அரசு கருதுகிறது.

இதற்கான ஏற்பாடுகளைச் செய்யும் படியும், இவ்விவகாரத்தில் எத்தகைய முடிவு எடுப்பது என்பது தொடர்பிலும் தமிழக அரசிடம் இந்திய வெளிவிவகார அமைச்சு கேட்டுக் கொண்டுள்ளது.

இவ்விவகாரத்தில் தமிழக அரசின் முடிவுக்காக மத்திய வெளிவிவகார அமைச்சு காத்திருக்கிறது" என்று ஜெனரல் வி.கே. சிங் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முன்யோசனை!

…நீங்கள் அங்கே போவதால் உங்கள் பீப்பாய்களிலுள்ள நீரைக் கொட்டிவிட்டு புதிதாக நீரை நிரப்பிக் கொள்ளுங்கள்." என்று கூறினான்.



அந்த வண்டி யில் இருந்தவனும் அவனோடு வந்த ஆட்களும் மனிதர்களைக் கொன்று தின்னும் ராட்சஸர்கள்.

அவ்வழியே வருபவர்களைப் பேச்சால் மயக்கி அவர்களைத் தாகத்தாலும் பசியாலும் தவிக்கவிட்டு இறந்துபோகச் செய்து அந்த உடல்களைத் தின்றுவிடுவார்கள்.

இதை அறியாத மந்தமதி தன் வண்டிகளில் இருந்த பீப்பாய்களில் இருந்த தண்ணீரைக் கொட்டி காலி செய்தான்.

பிறகு பயணத்தைத் தொடரவே அந்த கனவான் காட்டிய காட்டை அடைய முடியவில்லை.

அவன் போகப் போக அந்தக் காடும் நகர்ந்து போய்க்கொண்டே இருந்தது.

எங்கும் மழை பெய்த தடயமும் இருக்கவில்லை.

மந்தமதியும் அவனது ஆட்களும் தண்ணீருக்குத் தவித்து நாவறண்டு இறந்து போனார்கள்.

அவர்களது வண்டிகளை இழுத்து வந்த எருதுகளும் இறந்துபோயின.

இறந்துபோன மனிதர்களையும் எருதுகளையும் ராட்சஸர்கள் தின்றனர்.

மிகுந்த எலும்புகளை அந்தப் பாலைவனத்திலேயே விட்டு விட்டுப் போனார்கள்.

மந்தமதி கிளம்பிப்போய் பதினைந்து நாட்களான பிறகே போதிசத்வர் தம் வண்டிகளில் சரக்குகளையும்நீரையும்உணவையும் எடுத்துக்கொண்டு சென்றார்.

எல்லோரும் பாலைவனப் பகுதியை அடைந்தபோது போதிசத்வர் தம் ஆட்களிடம் "இந்தப் பகுதி அபாய கரமானது என்று கேள்விப்பட்டிருக்கிறேன்.

இங்கு மனிதமாமிசத்தை விரும்பி உண்ணும் ராட்சஸர்களின் நடமாட்டம் உள்ளது எனவும் கேள்விப்பட்டிருக்கிறேன்.

அவர்கள் பயணிகளிடம் நயமாகப் பேசி ஏமாற்றி அவர்களைத் தம் வலையில் சிக்க வைப்பார்களாம்.



எனவே நீங்கள் என்னிடம் கேட்காமல் எதையும் செய்யக் கூடாது" என்று எச்சரித்தார்.

அவர்கள் கொஞ்சத் தூரத்தில் அழகிய வண்டியில் வரும் கனவான் போன்ற வனையும் அவனது ஆட்களையும் பார்த்தார்கள்.

அந்த கனவான் போலிருந்தவன் மந்தமதியிடம் கூறியது போலவே போதிசத்வரிடம் சொன்னான்.

போதிசத்வரோ "நீங்கள் சொல்லி முடித்தாகி விட்டதல்லவா? உங்கள் வழியே போங்கள்.

தண்ணீரைக் கண்ட பிறகே எங்கள் பீப்பாய்களிலுள்ள நீரைக கொட்டிவிட்டுப் புதிதாக நிரப்பிக் கொள்வோம்" என்றார்.

அதைக் கேட்ட அந்த ராட்சஸர்கள் "உங்கள சிரமத்தைக் குறைக்கலாம் என்று எண்ணியே இதைக் கூறினோம.

இதன்படி நடப்பதும் நடக்காததும் உங்கள் இஷ்டம்" என்று சலிப்புடன் கூறினார்கள்.

போதிசத்வரோ அவர்கள் கூறியதை ஏற்காததால் எதுவும் பேச முடியாமல் மௌனமாகச் சென றார்கள்.

போதிசத்வரும் பார்த்தீர்களா? நாம் வந்த இவ்வளவு தூரத்தில் மழை பெய்யவே இல்லை.

ஈரக் காற்றும் வீசவில்லை. ஆகாயத்தில் ஒரு மேகம் கூடத் தென்படவில்லை.

எனவே இவர்கள் சொனன்து எல்லாம் பொய் என்றும் இவர்கள் மனிதர்களைக் கொன்று தின்னும் ராட்சஸர்கள் என்றும் புரிந்து கொண்டேன்.

நம்மை ஏமாற்றப் பார்த்தார்கள், முடியவில்லை.

நமக்கு முன் இங்கு வந்த மந்தமதியையும் அவனது ஆட்களையும் ஏமாற்றிக் கொன்று விட்டார்கள் போலிருக்கிறது எனறார்.

அவர்கள் கொஞ்சத்தூரம்போனதும் மனித எலும்புக் கூடுகளையும் எருதுகளின் எலும்புகளையும் கண்டார்கள்.

மந்தமதி கொண்டு சென்ற சரக்குகளைக் கண்டு அவர்கள் அவற்றையும் தம்மோடு எடுத்துப் போய் விற்று லாபம் அடைந்தார்கள்.

போதிசத்வரின் முன் யோசனையால் ஒருவர் கூட உயிர் இழக்கவில்லை. *(முற்றும்)*




- ✦1431 - இங்கிலாந்தின் ஆறாம் ஹென்றி பிரான்ஸ் மன்னனாக பாரிசில் முடிசூடினான்.
- ✦1497 - வாஸ்கொடகாமா முன்னர் பர்தலோமியூ டயஸ் சென்றடைய முடியாத தென்னாபிரிக்காவின் அட்லாண்டிக் கரையோரத்தில் உள்ள நன்னம்பிக்கை முனையை சுற்றி வந்தார்.
- ✦1598 - கொரிய, ஜப்பானியக் கடற்படைகளுக்கிடையே இடம் பெற்ற சமரில் கொரியா வெற்றி பெற்றது.
- ✦1653 - சேர் ஒலிவர் குறொம்வெல் இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து, அயர்லாந்து நாடுகள் அடங்கிய பொதுநலவாயத்தின் தலைவரானார்.
- ✦1773 - அமெரிக்கப் புரட்சி: பாஸ்டன் தேநீர் கொண்டாட்டம்- அமெரிக்கர்கள் பிரித்தானிய கிழக்கிந்தியக் கம்பனியின் கப்பல்களில் ஏறி தேநீர் பெட்டிகளை பாஸ்டன் துறைமுகத்தில் எறிந்தனர்.
- ✦1925 - இலங்கை வானொலியின் வானொலி சேவை கொழும்பில் ஆரம்பம்.
- ✦1941 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானியர்கள் சரவாக்கின் மிரி நகரைக் கைப்பற்றினர்.
- ✦1971 - வங்காளதேச விடுதலைப் போரில் பாகிஸ்தான் இராணுவம் சரணடைந்து போர் முடிவுக்கு வந்தது.
- ✦1971 - பாஹ்ரேன் பிரித்தானியாவிடமிருந்து விடுதலை பெற்றது.
- ✦1991 - கசக்ஸ்தான் சோவியத் ஒன்றியத்திடமிருந்து விடுதலை பெற்றது.


### பிறப்புகள்

- ✦1770 - லுடுவிக் ஃவான் பேத்தோவன், ஜேர்மனிய மேற்கத்திய இசை இயக்குனர் (இ. 1827)
- ✦1866 - வசிலி கண்டின்ஸ்கி, ரஷ்ய ஓவியர் (இ. 1944)
- ✦1917 - ஆர்தர் சி. கிளார்க், ஆங்கில எழுத்தாளர்
- ✦1933 - அடையார் கே. லட்சுமணன், பரதநாட்டியக் கலைஞர் நடன ஆசிரியர் (இ. 2014)

### இறப்புகள்

- ✦1916 - கிரிகோரி ரஸ்புடீன், ரஷ்ய மதகுரு, (பி. 1869)
- ✦1999 - ஜோசப் ஆனந்தன், தமிழ் நாடக எழுத்தாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கருவாச்சி காவியம்

## வைரமுத்து – 22

...கருவேலங்காட்டுக்குக் கெழக்க இருக்கிற பாங்கெணத்துல போட்டுட்டு போயிட்டான்.

ராத்திரியோட ராத்திரியா அப்பன் மாருக ஆளுக்கொரு திசையா அலைஞ்சதும் விடிஞ்சு பொணம் கண்டு புடிச்சு மாடுக மாதிரி கதறி அழுதும் கம்பங்காட்ல கெடந்த சூரிய வச்சு இதச் செஞ்சவன் செயில்ராசு தான்னு கண்டுபுடிச்சு அருவா, வேல் கம்போட அவன ஆளாளுக்குத் தேடுனதும் இது தெரிஞ்சு அவன் சிறு மலையில மருந்து குடிச்சுச் செத்துக் கெடந்ததும்; அன்னைக்கிருந்து மாறுகண்ணுத் தேவர் பேச்சு நின்னுபோனதும் ஊருக்கே தெரியும். ஆனா மாறுகண்ணுத்தேவர் கடைசியாச் சொல்லிட்டுச் செத்தது சடையத்தேவருக்கு மட்டுந்தான் தெரியும்.

அண்ணன் தம்பி ஏழு பேர் பெறந்து இப்ப நீயும் நானும்தான் இருக்க மாடா தம்பி.

இப்ப நானும் போயிச் சேர்ந்திருவேன் போலிருக்கு ஒண்ணே ஒண்ணு சொல்லிட்டுச் சாவேன். செய்வியா?

சொல்லுண்ணே...

நம்ம ஆச மக சொர்ணக்கிளியக் கொண்டுபுட்டாங்க.

நம்ம வம்ச வெளக்க அழிச்ச குடும்பத்துல என்னைக்காச்சும் ஒரு ஒச்சம் உண்டாக்காட்டி செத்துச் சுடுகாடு போனாலும் என் ஆவி அடங்காதுடா தம்பி. செய்வியா?

செய்றண்ணே!

இது நடந்து பதினஞ்சு வருசத்துக்கப்புறம் சடையத்தேவருக்கு மகனா வந்து பெறக்குறான் கட்டையன். அதுக்கு அங்கிட்டு அஞ்சு வருசம் கழிச்சு பெரியமூக்கிக்கு மகளா வந்து பெறக்குறா கருவாச்சி.

வஞ்சத்தையும் சாராயத்தையும் ஊத்தி ஊத்தி வளக்குறா சடையத்தேவரு கட்டையன.

பொண்ணு கேக்குற மாதிரி கேட்டு கல்யாணம் முடிக்கிற மாதிரி முடிச்சு அவளச் சீரழிச்சுச் சின்னாபின்னமாக்கி ஒஞ்சதடீ யாத்தா; ஓங்கத ...தீந்ததடி யாத்தா; எங்க பழின்னு வீட்லயே போயி விட்டுட்டு வந்துட்டான்க.

பஞ்சாயத்தக் கூட்டித் தீத்துக்கட்டவும் திட்டம் போட்டுட்டாங்க.

கரிச்சாம்பாறையில கருவாச்சியப் போட்டு வறுத்தெடுத்து அவ குடுமிக்கு அடியில கையக்கோர்த்து இறுக்கிட்டு, சொர்ணக்கிளி கதையக் கட்டையன் சொல்லச்சொல்ல, பூரான் பாம்பு தேளெல்லாம் புகுந்து கொடஞ்சிருச்சு கருவாச்சி புத்திக்குள்ள.



அந்தக் கொடச்சலும் ஒடம்புபட்ட ஒலச்சலும் எதையும் வெளியே சொல்லாம மனசுக்குள்ளயே போட்டு அமுக்கி வைக்கிற கொணமும் சேந்துதான் அவளப் பேயாடவச்சும் பெருங் கூத்துப் பண்ணிருச்சு.

கருவாச்சி மூலியமா சொர்ணக்கிளி தன் கதையைச் சொல்லச் சொல்ல, அழுது மூஞ்சி வீங்கிப்போச்சு ஆணும் பொண்ணும்.

கோடாங்கியும் இப்ப எறங்கி வந்து கேக்குறாரு.

யம்மா சொர்ணக்கிளி! நீ வேற எங்கயும் போயி வெளையாட்டுக் காட்டாம ஏன் சொந்தக்காரப் பிள்ளையைச் சுத்திட்டு அலையிற?

"சிங்காரச் சொர்ணக்கிளி
சீத பெத்த எளையகிளி–ஒனக்குக்
குண்டு மல்லிப்பூவு வேணுமா?
கோழிக்கறிச் சாறு வேணுமா?
வேணுங்கறத வாங்கி
வெளியேறு தாயி"

போறேன். அப்பப்ப வருவேன்.

இது கெட்ட பேச்சு.

இனிமே எங்க பிள்ளையைத் தொடப்படாது. எங்க பிள்ள வீட்லயிருந்தாலும், வெளியிலயிருந்தாலும்; ஆத்தங்கரை, கொளத்தங்கர, வெங்காடு, வெள்ளாமக்காட்டுவழி ஒத்த சத்தையில, போய் வந்தாலும் இந்த மங்கையை தொட மாட்டேன்னு சத்தியம் பண்ணி வெளியேறு.

(தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

...பழக்கமான வடிவ அமைப்புகள் நமது அறிவுக் கூர்மையை முழுமையாகச் சாகடித்துவிடக்கூடும்.

நான் இவற்றையெல்லாம் மக்களிடம் சொல்லும் பொழுது அவர்கள் சொல்கிறார்கள் ஸ்வாமிஜி நீங்கள் சொல்வது எனக்குப் புரிகிறது. ஆனால் என்னால் அவற்றை விட்டு விட்டு வெளியே வர முடியவில்லை. நான் சொல்கிறேன் என்னுடைய

## கவலைகள் இன்றி வாழ்தல்!

வார்த்தைகள் உங்களை ஊடுருவிச் சென்று உங்களுக்குள் ஒரு வெற்றிடத்தை உருவாக்க அனுமதி அளியுங்கள். இங்குதான் தியானம் துணை புரிகிறது. என்னுடைய தியான முகாம்களில் வெளிப்புறப் புரிந்து கொள்ளுதலை கொடுக்கிறேன். பிறகு தியானத்தின் மூலமாக உங்களுக்குள் ஊடுருவிச் சென்று அதன்மீது செயலாற்றுகிறேன்.

ஆனால் மக்கள் சொல்கிறார்கள். ஸவாமிஜி எங்களுக்கு வேலை இருக்கிறது. பணம் கட்ட வேண்டிய பில்கள் இருக்கின்றன. குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் செய்து முடிக்க வேண்டியவைகள் இருக்கின்றன. பிறகு எப்படி எங்களால் தியானம் செய்ய முடியும். நான் அவர்களுக்கு ஒரு எளிய தியான முறையைப் பதிலாக சொன்னேன் உங்கள் பில்களுக்கு பணம் கட்டுவற்கோ அல்லது குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் முடிக்க வேண்டியவற்றை முடிப்பதற்கோ நேரம் இருக்கிறதோ இல்லையோ மூச்சு விடுவதற்குக் கண்டிப்பாக நேரம் இருக்கிறதல்லாவா? இல்லாவிடில் நீங்கள் உயிருடன் இருக்க முடியாது. இப்பொழுது நீங்கள் சுவாசத்துடன் வெறுமனே உங்கள் முச்சைக் கவனியுங்கள். அது உங்களால் செய்யக் கூடிய மிகவும் எளிமையான அதிக சக்தி வாய்ந்த ஒரு தியானமுறையாகும்.



ஞாபகம் வரும் பொழுதெல்லாம் இந்த முறையைப் பயிற்சி செய்யுங்கள். வெகு சீக்கிரத்திலேயே அது ஒரு பழக்கமாகிவிடும். உங்கள் மூச்சில் விழிப்புணர்வைக் கொண்டு வரும் பொழுது நீங்கள் நிகழ்காலத்தில் இந்தக் கணத்தில் இருக்கிறீர்கள். நிகழ்காலத்தில் வாழ்வது உங்களை ஆனந்தத்திற்கு இட்டுச் செல்லும் இப்பொழுதின் ஆற்றல் ஆனந்தத்திற்கு நேரான வழியாகும். ஒவ்வொரு உள்மூச்சிலும் வெளிமூச்சிலும் வெறுமனே விழிப்புணர்வையும் சேர்த்துக் கொள்ளுங்கள். அதனால் ஆனந்தத்தை அடைய உங்களுக்குத் தனியாக நேரம் தேவையில்லை. தனியாக நேரம் ஒதுக்கித் தனிமையை நாடிச் செல்லவோ அல்லது தியான முகாமிற்குச் செல்லவோ தேவையில்லை. உங்கள் தினசரி செயல்களைத்

## ஆன்மீகம் 106

தொடர்ந்து செய்துகொண்டிருக்கலாம். நீங்கள் உருவாக்கும் அதிக விழிப்புணர்வுவினால் உங்களுடைய காலக் கெடுகளும் ஏனைய இலக்குகளும் மிகவும் திறமையுடன் நிறைவேற்றப்படும்.

தியானம் என்பது உங்கள் விழிப்புணர்வில் ஒரு மாற்றம் என்பதை தவிர வேறில்லை. அது உங்கள் இருப்புத் தன்மையில் ஒரு சக்தி மாற்றம். அது ஒரு மூலையில் சப்பணமிட்டு அமர்ந்து கொண்டு நேரான முதுகுடன் மனதைக் கட்டுப்படுத்த முயற்சி செய்வதல்ல. நீங்கள் இவற்றையெல்லாம் செய்ய முயற்சி செய்தால் அது கழுத்து வலியிலும் முதுகு வலியிலும் தான் முடியும்.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலைகல்லுப்போட்ட குளத்தின் நீர் விவசாயத்திற்கு பயன்படாமலுள்ளது

## வடமாகாண அமைச்சர் து.ரவிகரன் நேரில் சென்று பார்வையிட்டார்

தமிழர்களின் புராதன நீர்ப்பாசன சின்னமான அலைகல்லுப்போட்ட குளம் (பண்டாரக்குளம்) முற்றிலும் சேதமடைந்துள்ள நிலையில், சுமார் 200 ஏக்கருக்கு மேற்பட்ட விவசாய நிலம் பாதிக்கப்பட்டுள்ளது.

பண்டாரவன்னியனாரின் விவசாய பூமியாக திகழ்ந்த இப்பகுதியில், இன்று சுமார் 150 இற்கு மேற்பட்ட விவசாயக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு தண்டுவான் மக்களின்






அழைப்பை ஏற்று சமீபத்தில் அங்கு சென்ற ரவிகரன் மக்களுடன் குறைகேள் சந்திப்புக்களை நடத்தினார்.

இதன்போது தண்டுவான், பழம்பாசி உள்ளிட்ட இடங்களில் உள்ள குறைகளை மக்களுடன் நேரில் சென்று பார்வையிட்டார். இதன் ஒருகட்டமாக மக்கள் அலைகல்லுப்போட்ட குளத்தின் தற்போதைய நிலையை ரவிகரனுக்கு நேரில் தெரியப்படுத்தினர்.

இது குறித்து ரவிகரன் மேலும் தெரிவிக்கையில், புராதன கட்டுக்களுடனேயே இக்குளம் இன்னும் காட்சியளிக்கிறது. இங்கு வான்பா யும் அணைக்கட்டுக்கள் உடைந்த நிலையில் நீர் தேங்கி நிற்காமல் உடனேயே வெளியே றவிடுகிறது. இதனால் இங்குள்ள நீர்வளம், விவசாயத்திற்கு முற்றிலும் பயன்படாமல் வீணாகிறது.

இக்குளத்தை புனரமைத்தால் இரு போகமும் செய்யக்கூடிய வகையில் சுமார் 200 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். இதன் மூலம் 150 இற்கும் மேற்பட்ட விவசாயக் குடும்பங்கள் பயன்பெறுவார்கள்.

கடந்த ஆண்டு விவசாயிகள் தமக்கிடையே திரட்டிய நிதியின் மூலம் தான் குளத்தின் பாதைகள் ஓரளவு சீரமைக்கப்பட்டதாகவும் பல வகையில் கோரிக்கைகள் வைத்தும் இது குறித்து யாரும் கண்டு கொள்ளவில்லை என்றும் விவசாயிகள் தெரிவித்தனர். இது குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவிப்பேன் என கூறினேன். மறுநாளே இது குறித்து வடமா காண அமைச்சர் ஐங்கரநேசனிடம் நேரில் அறிக்கையுடன் சென்று தெரிவித்துள்ளேன் என்றார். (2-250)

# இவ்வருடத்திற்கான ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நீண்ட காலமாக நடைபெறவில்லை

## வினோ எம்.பி. இணைத்தலைவர்களுக்கு கடிதம்

மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நீண்ட காலமாக நடத்தப்படாமை தொடர்பிலும் நடத்தப்படாமைக்கான காரணம் என்ன என்பது தொடர்பிலும் மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களுக்கு தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்வினோ நோதராதலிங்கம் கடிதமொன்றை அண்மையில் அனுப்பி வைத்துள்ளார. அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவிடயங்கள் வருமாறு,

மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவர்களாக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் றிசாட் பதியுதீன் ஆகிய இருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தாங்கள் இருவரும் நியமிக்கப்பட்டு ஒரு வருடத்துக்கு மேலாகியும் மேற்படி கூட்டங்கள் எதுவும் இதுவரை மன்னார் மாவட்டத்தில் நடத்தப்படாமல் இருப்பதையிட்டு தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வருகின்றேன். ஒரு மாவட்டத்தின் கடந்தகால, நிகழ்கால, எதிர்கால திட்டங்கள், அபிவிருத்தி யின் முன்னேற்ற நடவடிக்கைகளின் மீளாய்வு, பொது மக்களால் முன்னிலைப்படுத்தப்படும் தீர்க்கப்படாத பிரச்சினைகளை இனங்கண்டு தீர்வு காணுதல் போன்ற விடயங்களை ஆராயும் ஒரு வலுவான களமாக மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவும் அதற்கான கூட்டங்களும் அமைகின்றன. இக்குழுவின் நோக்கமும் அதுவே. நிறைவடைய இருக்கும் இவ் ஆண்டில் ஒரு கூட்டத்தையேனும் தங்களால் நடத்த முடியாமல் போனது மாவட்ட மக்களுக்கு சந்தேகங்களையும் உங்கள் மீதான அவ நம்பிக்கையையும் இயல்பாகவே தோற்றுவித்துள்ளது.

மேலும், திணைக்களத் தலைவர்கள், அதிகாரிகள் தமது கடமைகளை பொறுப்புணர்வுடனும் சேவை நலன் கருதியும் சிறப்பாக மேற்கொள்கின்ற நிலையிருப்பினும் சில வேண்டப்படாத அரசியல் அழுத்தங்கள், தலையீடுகள் காரணமாக சில துறைகளில் எதிர்பார்க்கப்படுகின்ற முன்னேற்றத்தை காண்பதில் எமது மக்களுக்கு இருக்கின்ற நம்பிக்கையீனங்களுக்கும் சந்தேகங்களுக்கும் பதிலளிக்கும் கடப்பாடு மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் எமக்கும் உள்ளது. குறைந்த பட்சம் திணைக்களத் தலைவர்கள், உயரதிகாரிகளின் கவனத்துக்கு இவற்றை கொண்டு வருவதற்கான வாய்ப்பும் எமக்கு மறுக்கப்படுகின்றது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் குறைந்தபட்சம் தலா மூன்று கூட்டங்களாவது நடத்தப்பட்டிருப்பதாக அறிகிறேன்.

வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் ஒவ்வொரு கூட்டம் நடைபெற்றிருக்கின்றன. குறைந்த பட்சம் தலா இரண்டு கூட்டங்களையாவது இம்மாவட்டங்களில் நடத்தியிருக்க வேண்டும். இதற்கான கூட்டுப் பொறுப்பினை நீங்கள் ஏற்றுக் கொண்டேயாக வேண்டும்.

எனவே, இதுவரை ஒரு முறையேனும் நடத்தாமல் புறக்கணிக்கப்பட்ட மன்னார் மாவட்டத்துக்கான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தினை விரைவில் நடத்துமாறு குழுவின் இணைத் தலைவர்கள் என்ற ரீதி யில் தங்களை வினயமாக கேட்டுக் கொள்கின்றேன் என அதில் குறிப்பிட்டுள்ளது. (2)

## ஆசிரியர்களுக்கு அகராதி அன்பளிப்பு




(கிளிநொச்சி)

கிளிநொச்சி கல்வி வளர்ச்சி அறக்கட்டளையினூடாக பின்தங்கிய பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் அண்மையில் கிளிநொச்சி பழைய வைத்தியசாலை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது கனடா வாழ் டாக்டர்களினால ஆசிரியர்களுக்காக அன்பளிப்பு செய்யப்பட்ட ஆங்கில அகராதி அனைத்து ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட்ட்து

இவ் ஆசிரியர்களுடனான கலந்துரையாடலில் அமெரிக்க IMHO நிறுவனத்தின் பொருளாளர் முரளி, கிளிநொச்சி கல்வி வளர்ச்சி அறக்கட்டளையின் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் உறுப்பினர்கள், பணியாளர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (2-254)

## சிறுநீரகம், இருதய நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி!



கைதடி மக்கள் நலன்பேணும் நட்புறவுக் கழகத்தின் டென்மார்க் கிளையின் நிதியுதவி மூலம் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 4 நோயாளர்களுக்குதலா 25 ஆயிரம் ரூபா பண உதவி நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை மாலை 4.30 மணியளவில் கைதடி வடக்கு செல்வா சனசமூக நிலையத்தின் கேட்போர் கூடத்தில் வைத்து வழங்கப்பட்டது. இக்கழகத்தின் உபதலைவர் வீ.சின்னத்தம்பி தலைமை யில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிறுநீரகம் பாதிக் கப்பட்ட 2 பேருக்கும் இருதய நோயாளிகள் 2 பேருக்கும் தலா 25 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் மூத்த உறுப்பினரும் ஓய்வு நிலை அதிபருமாகிய லயன் ப.செல்லத்துரை, மக்கள் வங்கியின் பரந்தன் கிளையின் முகாமையாளர் க.சிறீதரன், கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (2-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் பட்டினியை உணராத அரசு எமக்குத் தேவை இல்லை

## மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

(கொழும்பு)

**அபிவிருத்தி என்னும் போர்வையில் நாட்டு மக்களின் பணம் கொள்ளையிடப்பட்டு வருகின்றது. இந்நிலையில் நான் ஜனாதிபதியானால் இன்று உள்ளதைப் போன்று மூன்று மடங்கு அபிவிருத்தியினை ஏற்படுத்துவேன். மேலும் தோட்டப்புற இளைஞர்களின் தொழில்வாய்ப்பு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினை களுக்கும் உரிய தீர்வினைப் பெற்றுக்கொடுப்பேன். அத்துடன் மக்களின் பட்டினியை உணராத அரசாங்கம் எமக்கு தேவையில்லை என்று எதிரணியின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**



நேற்று முன்தினம் கொத்மலையில் இடம்பெற்ற எதிரணியின் தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். ஐ.தே. கவின் அமைப்பாளர் அசோக ஹேரத் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான கருஜயசூரிய, நவீன் திசாநாயக்க, வீ. இராதாகிருஷ்ணன், பி.இராஜதுரை, ஆர். யோகராஜன் உட்பட மேலும் பலரும் கலந்து கொண்டனர்.

தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் அரச ஊழியர்கள் போன்ற பல்வேறு தரப்பினர்களும் இன்று பொருளாதாரம் உள்ளிட்ட பல சிக்கல்களுக்கும் முகம் கொடுத்து வருகின்றனர். இவர்களின் நலன்கள் பேணப்படுவது அவசியமாகும்.

இளைஞர் யுவதிகளின் வேலையில்லாப் பிரச்சினைகள் அதிகரித்துள்ளன. தோட்டப்புற இளைஞர் யுவதிகளும் இதில் உள்ளடங்குகின்றார்கள். நான் ஜனாதிபதியானால் இளைஞர் யுவதிகளின் வேலையில்லாப் பிரச்சினைக்கு உரிய தீர்வினை பெற்றுக்கொடுப்பேன். தொழில் நுட்ப அறிவினை மேம்படுத்துவதோடு இளைஞர்கள் தேசிய நீரோட்டத்தில் இணைந்து கொள்வதற்கும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வேன்.

பட்டினி ஒரு மோசமான அவலமாக உள்ளது. நாட்டு மக்களின் பட்டினியை உணர்ந்து கொள்ளாத அரசாங்கம் எமக்குத் தேவையில்லை. உல்லாச பயணத்துறை அபிவிருத்தி என்ற பெயரில் வடக்கில் காணிகள் சுவீகரிக்கப்பட்டு வருகின்றது. இதில் எவ்விதமான நியாயமும் இல்லை. நான் ஜனாதிபதியானால் காணி விடயங்கள் குறித்து ஆராய்வதற்கு விசேட குழுவொன்றை அமைத்து நியாயம் பெற்றுக் கொடுப்பேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# ஐ.நாவில் அடுத்த சவாலை எதிர்கொள்ள சர்வதேச சட்டத்தரணிகளுடன் ஆலோசனை

2015 மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கைக்கு எதிராக முன் வைக்கப்படும் அழுத்தங்களை எதிர்கொள்வதற்காக அரசாங்கம் சர்வதேச அளவில் பிரபலமான சட்டத்தரணிகளுடன் ஆலோசித்து வருகிறது என்று இலங்கை வெளி விவகார் அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு,

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலை எதிர்கொள்வதற்கான சட்ட ரீதியான தந்திரோபாயங்கள் குறித்து சர்வதேச அளவில் பிரபலமான சட்டத்தரணிகளுடன் நாங்கள் ஆலோசித்து வருகிறோம்.

அவர்களும் எங்களை தொடர்பு கொண்டுள்ளனர். இது முற்று முழுதாக அரசியல் விவகாரம்.

ஆகவே எங்களை போன்ற மனோ நிலை கொண்ட நாடுகளுடன் இது குறித்து ஆலோசித்து வருகின்றோம்.


இந்த மட்டத்தில் பெருமளவு செயற்பாடுகள் இடம்பெறுகின்றன என அவர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 160 | 140 |
| உருளைக்கிழங்கு | 70 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 500 | 400 | 300 |
| தக்காளி | 170 | 200 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 35-40 | 40 | 40 |
| கோவா | 130 | 140 | 140 |
| கரட் | 200 | 180 | 160 |
| பூசணி | 35-40 | 40 | 40 |
| புடோல் | 80 | 150 | 70 |
| வாழைக்காய் | 60-70 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 60-100 | 120 | 110 |
| பெரிய வெங்காயம் | 80 | 120 | 80-100 |
| பாகற்காய் | 200 | 350 | 250 |
| வெண்டிக்காய் | 160 | 140 | 150 |
| கருணைக் கிழங்கு | 40-50 | 60 | 70 |
| பயற்றங்காய் | 260 | 260 | 260 |
| லீக்ஸ் | 250 | 280 | 230 |
| பீற்றூட் | — | 180 | 150 |
| கறிமிளகாய் | 350 | 350 | 270 |
| முருங்கைக்காய் | — | 500 | — |
| போஞ்சி | 200 | 220 | 210 |
| கத்தரிதம்புள்ள | — | 140 | 140 |
| கீரை - 1 பிடி | 15-20 | 60 | 25 |
| தேசிக்காய் | 70-80 | 140 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 40-50 |
| இராசவள்ளி | — | 130 | 140 |

# எங்கும் எதிலும் பிளாஸ்டிக் உடல் நலத்திற்குக் கேடு

## விளக்குகிறார் சுற்றுச்சூழல் ஆர்வலர் ஜெயராமன்



தொலைதூரப் பயணங்க ளின் போது அரிதாக ஹோட்டல் உணவுகளைப் பயன்படுத்தியவர்களுக்குக்கூட, இன்று ஹோட்டல் உணவு அத்தியாவசியமாகிவிட்டது. சட்னி, சாம்பார் தொடங்கி சாதத்தைக கூட பிளாஸ்டிக் டப்பா, பொலித்தீன் கவர்களில் பார்சல் செய்துதான் தருகிறார்கள. எல்லா இடங்களிலும் பிளாஸ்டிக்கையே, நாகரிக வாழை இலையாகப் பயன்படுத்துகின்றனர். சில இடங்களில் சாப்பிடுவதற்கும் தட்டின் மேல் பிளாஸ்டிக் இலை அல்லது பிளாஸ்டிக் காகிதம்தான் விரிக்கிறார்கள். ஒவ்வொரு வேளை உண்ணும் போதும் கொஞ்சம் பிளாஸ்டிக்கும் உள்ளே போவதுதான் அதிர்ச்சி.

ஹோட்டல்களில் நாம் சாப் பிடுவது இட்லி, தோசை, சாதம் மட்டுமல்ல கூடவே பிளாஸ்டிக்கில் இருக்கும் இரசாயனங்களும் தான். உணவுப் பொருட்களை பிளாஸ்டிக கவர்களில் பக் செய்வதால் ஏற்படும் ஆபத்துகள் பற்றிச் சொல் கிறார் சுற்றுச்சூழல் ஆர்வலரும், ஆய்வாளருமான நித்யானந்த் ஜெயராமன்.

**நல்ல பிளாஸ்டிக்?**

'நல்ல பிளாஸ்டிக்' என்கிற ஒன்று இல்லவே இல்லை. பிளாஸ்டிக்கை மோசமானது, மிக மோசமானது என்றே வகைப்படுத்த முடியும். ஒரு இலட்சம் சிந்தடிக் கெமிக்கல்கள் பிளாஸ்டிக்கில் உள்ளன. அதில் ஆறாயிரத்தை மட்டுமே இதுவரை ஆய்வு செய்துள்ளனர். மீதம் உள்ளவை என்ன தீமைகளை ஏற்படுத்தும் என யாருக்குமே தெரியாது.

பொருளாதாரத்தில் வளமாக உள்ள, சத்தான உணவு உண்பவர்களின் இரத்தத்தை ஆய்வு செய்து பார்த்தபோது, அதில் 275 இரசாயனங்கள் இருந்திருக்கின்றன. அவர்களுக்கே இந்த நிலை என்றால் பிற மக்களின் நிலை இன்னும் மோசம்.

**பிரஷ் முதல் பால் வரை!**

நம் அன்றாட வாழ்வில் காலையில் பல் துலக்குவதில் தொடங்கி இரவில் பால் குடிப்பது வரை எங்கும் எதிலும் பிளாஸ்டிக்தான். பிளாஸ்டிக் பிரஷ், பிளாஸ்டிக் ப்ளேட், பக்கெட் பால், லன்ச் பொக்ஸ், வோட்டர் போத்தல் என எங்கும் பிளாஸ்டிக் மயம். பிளாஸ்டிக் பொருட்களில் சூடான உணவை வைக்கும் போது பிளாஸ்டிக்கில்உள்ள இரசாயனம்உணவோடு கலந்து விடும். இப்படி ஒவ்வொரு நாளும் தெரிந்தும், தெரியாமலும் இரசாயனங்கள் உணவு மூலமாக தினமும் நம் உடலில் சேர்கின்றன. இதனால் பலவிதமான நோய்களும், குறைபாடுகளும் ஏற்படுகின்றன.




“பிளாஸ்டிக் பொருட்கள் தாலேட்ஸ் (Phthalates) இல்லாமல் உருவாக்கப்படுவது இல்லை. தாலேட்ஸ்தான் பிளாஸ்டிக்கை மென்மையாக்கவும் வளைக்கவும் உதவுகிறது. இதில் ஏழு வகையான தாலேட்ஸ்கள் மிக ஆபத்தானவை. நாம் வாங்கும் வோட்டர் போத்தலின் அடிப்பகுதியைப் பார்த்தால், முக் கோண வடிவில் எண் 1 என்று குறிப்பிடப்பட்டிருக்கும். அதே போல போத்தலின் லேபிளிலும் 'ஒரு முறை பயன்படுத்திய பின் தூக்கி எறியுங்கள்' என்று குறிப்பிடப்பட்டிருக்கும். இதை நாம் கவனிக்காமல் பல நாட்களுக்கு அதே போத்தலைப் பயன்படுத்தி வருகிறோம். மலிவான விலையில் உற்பத்தியாகும் போத்தலில் இருந்து டி.இ.எச்.பி (DEHP) என்ற இரசாயனம் வெளியாகி நீருடன் கலக்கும். இது புற்றுநோய் உண்டாக்கும் காரணியாக மாறுகிறது.


தாலேட்ஸ் உள்ள பிளாஸ்டிக்கைப் பயன்படுத்துவதால் ஆண்களுக்கு இயல்புக்கு மீறிய பாலின உறுப்புகள் வளர்ச்சி, ஆண்மைக்குறைவு, குழந்தைகளுக்கு மார்பக வளர்ச்சி, பெண்களுக்கு அதிக மார்பக வளர்ச்சி, கருச்சிதைவு, குறைப்பிரசவம், ஆஸ்துமா போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

எனவே, முடிந்தவரை பிளாஸ்டிக் பொருட்களைத் தவிர்ப்பது நல்லது.

“ஹோட்டலில் 40 மைக்ரான்கள் 'கொண்ட கவர்களில் தான் உணவை பக் செய்கிறார்கள் என்று உறுதியாகச் சொல்ல முடியாது. ஆவி பறக்க, சூடான சாம்பார், ரசம், பொரியல் என பக் செய்யும் கவர்கள் நிச்சயம் அதிக மைக்ரான்களால் தயாரிக்கப்' படுவது இல்லை. கவரில் உள்ள டயாக்சின் (Dioxin) என்ற இரசாயனம் உணவோடு சூடாகக் கலக்கும்போது வயிற்றுக்கோளாறு, பசியின்மை, வயிற்றுப் போக்கு போன்றவை ஏற்படும். தொடர்ந்து ஹோட்டல் உணவையே பார்சல செய்து சாப்பிட்டுக் கொண்டிருந்தால் மலட்டுத்தன்மை வருவதற்கு வாய்ப்புகள் அதிகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்சிகளை உடைக்கும் போர்





அடுத்த மாதம் நடக்கப்போவது ஜனாதிபதி தேர்தலாக இருந்தாலும் அதன் போக்கு என்னவோ, கட்சிகளை உடைப்பதற்கான போராகவே நடந்து கொண்டிருக்கிறது.

வரப்போகும் தேர்தல் ஆளும் கட்சிக்கும் எதிரணிக்கும் இடையில் மிகக் கடுமையான போட்டியாக அமைந்துள்ள சூழலில் கட்சிகளை உடைத்தும் ஆட்களை இழுத்தும் வெற்றியைப் பெற்றுவிட வேண்டும் என்ற வெறி இருதரப்பினரிடையேயும் காணப்படுகிறது.

இதன் விளைவாக இப்போது வாக்காளர்களிடம் வாக்கு கோருவதில் ஆர்வம் காட்டுவதை விட மறுதரப்பை உடைப்பதில்தான் கூடுதல் கவனம் செலுத்தப்படுகிறது.

யார் எப்போது எந்தப் பக்கம் இருப்பார்கள் என்றே அனுமானிக்க முடியாத அளவுக்கு இலங்கை அரசியலில் இப்போது கட்சித் தாவல்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இதற்கு முன்னர் இதுபோன்றதொரு அரசியல் சூழல் எப்போதும் நிலவியதில்லை.

ஆளும் கூட்டணியிலிருந்து ஜாதிக ஹெல உறுமய விலகியதையடுத்து தொடங்கிய இந்தக் கட்சித் தர்வல்கள் ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னரும் முடிவுக்கு வருவதற்கான அறிகுறிகள் தென்படவில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளராகவும் சுகாதார அமைச்சராகவும் பதவி வகித்த மைத்திரிபால சிறிசேனவை தமது பக்கம் இழுத்து பொது வேட்பாளராக அவரை முன்னிறுத்தியது எதிரணியின் பெரும் வெற்றியாகவே கருதப்படுகிறது.

இது அரச தரப்புக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. அதனால்தான் சுதந்திரக் கட்சியின் வரலாற்றில் இடம்பெற்ற மாபெரும் காட்டிக்கொடுப்பு என்று அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா வர்ணித்திருந்தார்.

அதற்குப் பழிவாங்கும் வகையில் ஐ.தே.கவின் பொதுச் செயலாளராக இருந்து திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு அரச தரப்பு வலை வீசியது. முதலில் அரச தரப்புக்கு தாவப் போவதாக செய்திகள் வெளியான போதும் அவர் அதனை மறுத்திருந்தார்.. எனினும் கடந்தவாரம் அவரை அரசதரப்பு ஒருவழியாக தம்பக்கம் இழுத்துக்கொண்டது.

கத்திக்கு க்த்தி, இரத்தத்துக்கு இரத்தம் என்று பழி தீர்ப்பது போலவே சுதந்திரக் கட்சிப் பொதுச்செயலாளருக்குப் பதிலாக ஐ.தே.கவின் பொதுச்செயலாளரை இழுத்துக் கொண்டது ஆளும் கட்சி.

இது குறித்து கருத்து வெளியிட்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஐ.தே.க விலருந்து ஆட்களை இழுப்பது ஒன்றும் தமக்குப் பெரிய வேலையல்ல என்று பகிரங்கமாகவே கூறியிருந்தார்.

திஸ்ஸ அத்தநாயக்கவுடன் ஒரு கோப்பி அருந்தி அவரைத் தம் பககம் இழுத்துக்கொண்டதாகவும், அதுபோல தான் நினைத்தால் ரணில் விக்ரமசிங்கவைக்கூட ஒரு தேநீரைக் கொடுத்து இழுத்து விடுவேன் என்றும் அநுராதபுரத்தில நடைபெற்ற கூட்டத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

ஒன்றை இழந்தால் இன்னொன்றை பெற்றுக் கொள்ளும் அசாத்தியமான திறமை ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு இருப்பதாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல புகழ்ந்திருந்தார்.

இதிலிருந்து ஒன்றை விளங்கிக் கொள்ள முடிந்தது. ஆளும் கட்சிக்கு வாக்குகளைப் பெறமுடியும் என்பதற்காக திஸ்ஸ அத்தநாயக்கவை ஆளும் கட்சி தம் பக்கம் இழுக்கவில்லை.

அரசாங்கத்தை விட்டுச் செல்பவர்கள் இருந்தாலும் அரசாங்கத்தில் இணைந்து கொள்வோரும் இருக்கின்றனர். தமது செல்வாக்கு ஒன்றும் உடைந்து போகவில்லை எனறு காட்டவே அவரைத் தம்பக்கம் இழுத்திருக்கிறது அரசாங்கம்.

இந்தக் கட்சித் தாவல்களுக்கு, பதவிகள், பல்வேறு சலுகைகள் பேரம் பேசப்படுவதாக செய்திகள் வெளியாகின்றன. இந்தப் பேரம் பேசலுக்காகவே அரசியலில் இருப்போரும் உள்ளனர்.

திஸ்ஸ அத்தநாயக்கவின் தாவலும், மைத்திரிபால சிறிசேனவின் பாய்ச்சலும் ஒப்பீடு செய்யக் கூடியவை அல்ல என்று அமைச்சர்களே கூறியிருக்கின்றனர்.

மைத்திரிபால சிறிசேனா பணத்திற்காக எதிரணியின் பக்கம் தாவினார் என்றோ, பதவிக்காகச் சென்றார் என்றோ கருதுவதற்கில்லை. அதற்கான சூழலும் இப்போது இல்லை. அவர ஜனாதிபதி பதவியை அடைந்தாலும்கூட 100 நாட்களுக்குள் அதனை இல்லாமல் செய்துவிடப் போவதாக வாக்குறுதி அளித்துள்ளார்.

பிரதமர் பதவியை அவருக்கு வழங்க ஜனாதிபதி திட்டமிட்டிருந்தார் என்று அமைச்சர்கள் கூறியுள்ளனர். அது அவருக்கும் தெரிந்திருக்கும். எனவே பதவிக்காக எதிரணியின் பக்கம் அவர் சாய்ந்தார் என்று கூற முடியாது.

ஆனால் திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு தாம் ஒன்றுமே கொடுக்கவில்லை என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கூறியுள்ளார். என்றாலும், அரச தரப்புக்குத் தாவிய ஒருசில நாட்களிலேயே சுகாதார அமைச்சராக பதவியை ஏற்றுக் கொண்டார்.

தான் எதற்காகவும் விலை போக மாட்டேன் என்று சில நாட்களுக்கு முன்னதாகவே அறிக்கை வெளியிட்டவர் அவர். பணத்தைப் பெற்றாரா இல்லையா என்பதை விட பதவியைப் பெற்றதன் மூலம் தாம் கட்சி தாவியதன் பின்னணியில் பதவிக்கான பேரம இருந்துள்ளது என்பதை நிரூபித்துக் கொண்டுள்ளார்.

தாம் இறந்த கிளியொன்றை இழந்து அழகிய பச்சைக்கிளி ஒன்றைப் பெற்றிருப்பதாக, ஹிருணிகா பிரேமச்சந்திர எதிரணிக்குத் தாவிய பின்னர் ஐ.தே.க தலைவர் குறிப்பிட்டிருந்தார்.

அவர் இறந்த கிளி என்று குறிப்பிட்டது திஸ்ஸ அத்தநாயக்கவைத்தான்.

மைத்திரிபால சிறிசேனவின் கட்சித் தாவல் போலவே ஹிருணிகாவின் கட்சித்தாவலும் அரசாங்கத்தைப் பாதித்துள்ள ஒன்றாகவே கருதப்படுகிறது.

அதனால்தான் சூட்டோடு சூடாக ஜாதிக ஹெல உறுமயவை உடைத்து உதய கம்மன்பிலவை தம் பக்கம் இழுத்துக் கொண்டது அரசாங்கம்.

அவர் ஏற்கனவே கோத்தபாய ராஜபக்சவுக்கு நெருக்கமானவராகவே இருந்தார். வேண்டா வெறுப்புடன்தான் அரசாங்கத்திலிருந்து வெளியேறினார்.

அவரைத் தம்பக்கம் இழுத்துக் கொள்வதில் அரசாங்கம் அவ்வளவாக சிரமப்பட்டிருக்காது. அரசாங்கத்துக்குள் இருக்கும் பல கட்சிகளும் இப்போது இதே சிக்கலை எதிர்கொண்டுள்ளன.

எதிரணிக்குப் பாய்ந்தால் தமது கட்சி உடைக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சம் அவர்களிடம் இருக்கிறது. குறிப்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இந்த விடயத்தில் கடுமையான அச்சத்தில் இருக்கிறது. முஸ்லிம் காங்கிரஸினால் தெளிவான எந்த முடிவையும் எடுக்க முடியாதுள்ளமைக்கு பிரதான காரணம் கட்சி உடையும் ஆபத்தில் இருப்பது தான்.

கடந்த காலங்களில் இது போன்ற சூழல்களில் எதிரணியுடன இணைய முற்பட்டபோதும், அரசதரப்புடன் ஒத்துழைக்க மறுத்த போதும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உடைக்கப்பட்டது.

பிரிந்து போனவர்கள் அரசாங்கத்துடன் இணைந்தனர். அல்லது புதிய கட்சி அமைத்து அரசின் நிழலில் தங்கிக் கொண்டனர். இப்போதுகூட முஸ்லிம் காங்கிரஸ் கொள்கை ரீதியாக முடிவெடுப்பதா அல்லது கட்சியைக் காப்பாற்ற முடிவெடுப்பதா என்று தெரியாமல் குழம்பியிருக்கிறது.

ஏற்கனவே ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவளிக்கும் விவகாரத்தில் லங்கா சமசமாஜக் கட்சியின் மத்திய குழுவுக்குள்ளும் பிளவு ஏற்பட்டுவிட்டது.

அதன் ஒருபகுதி மத்திய குழு உறுப்பினர்கள், எதிரணி வேட்பாளருக்கு ஆதரவளிக்க, அமைச்சர் திஸ்ஸ விதாரண தரப்பு ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுடன் நிற்கிறது.

இந்தக் கட்சித் தாவல்களில் இன்னொரு முக்கியமான விடயமும நடந்தேறியிருக்கிறது. மலையக அரசியல் களத்தில், அரச தரப்பிலிருந்து முக்கியமான மூன்று பாராளுமன்ற உறுபபினர்கள் அரசிலிருந்து விலகிக் கொண்டுள்ளனர்.

பெருமாள் இராஜதுரை, ப. திகாம்பரம் வே. இராதாகிருஸ்ணன் என மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களும் ஆளும் கட்சியின் பக்கத்திலிருந்து எதிரணிக்குத் தாவியிருக்கின்றனர்.

இவர்கள் தாம் எதிர்பார்த்தவை அரச தரப்பிடமிருந்து கிடைக்காத ஏமாற்றத்தை வெளிப்படுத்தியுள்ளனர். எவ்வாறாயினும அவர்களின் எதிர்பார்ப்புக்கள் எதிரணியுடன் இணைநது கொண்டதால் மட்டும் நிறைவேறிவிடப் போவதில்லை.

மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்றால்தான் அவர்களின் எதிர்பார்ப்பு நிறைவேறும். இப்போது எதிரணிக்குத் தாவியுள்ளவர்கள் அரசதரப்புக்குப் பாயவுள்ளவர்கள் என்று ஒவ்வொரு நாளும் செய்திகள் வெளியாகின்றன. அதுபோலவே அவ்வப்போது கட்சித் தாவல்களும் நடக்கின்றன.

மகிந்த ராஜபக்ச அரசாங்கம் எதிரணியை உடைத்து, எவ்வாறு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றதோ இப்போது அதிலிருந்து பிரிந்து சென்றவர்களால் அந்த நிலையையும் இழந்து நிற்கிறது. மொத்தத்தில் இந்தத் தேர்தல் கட்சிகளை உடைப்பதற்கான, பலவீனப் படுத்துவதற்கான ஒரு போராகவே நடந்து கொண்டிருக்கிறது.

வரும் சாட்களில் இந்தக் கட்சி தாவும் போர், ஆள்பிடி அரசியல் என்பன இன்னும் தீவிரமடையும். ஜனாதிபதித் தேர்தல் முடிந்தாலும் கூட அதில் வெற்றி பெறுபவரைப் பொறுத்து கட்சித் தாவல் இன்னும் அதிகமாகுமே தவிர குறைவதற்கு வாய்ப்பில்லை.

-சுபத்ரா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் கலாசாரத்தை அரசு சீரழித்து விட்டது

## ஜே.வி.பி.குற்றச்சாட்டு



**மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் அரசியல் கலாசாரத்தை சீரழித்துள்ளதாக குற்றம் சாட்டிய ஜே.வி.பி.யின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க அமைச்சரவையோ அல்லது நாடாளுமன்றமோ இன்று நாட்டை ஆட்சி செய்யவில்லை.எந்தவொரு அமைச்சரும் நாட்டில் தீர்மானம் எடுக்கும் பொறிமுறையில் பங்களிப்பு வழங்குவதில்லை. அனைத்து நடவடிக்கைகளும் ராஜபக்ஷாக்களின் தாளத்திற்கு ஏற்ற வகையிலேயே மேற்கொள்ளப்படுகின்றன எனவும் தெரிவித்துள்ளார்**

ஹிங்குராக்கொட பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்றை இன்று ராஜபக்ஷாக்கள் விழுங்கியுள்ளனர். தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீன், கருவாடு, இறைச்சி வகைகளைப் போன்று விலை போகின்றனர்.

2017ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலேயே ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படவிருந்தது.

அந்தக் காலத்தில் தேர்தல் நடத்தினால் என்ன நடக்கும் என்பது ராஜபக்ஷாக்களுக்கு நன்றாகத் தெரியும்.

ஒரே குடும்பம், ஒரே கூட்டம் ஆட்சி நடத்தி வந்தால் பாரிய இரத்த பெருக்கின் பின்னரே ஆட்சி மாற்றம் ஏற்படும்.

எனவே எதிர்வரும் 8ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த மூன்றாம் தவணைக்காக ஜனாதிபதி பொறுப்பினை ஏற்றுக்கொள்வதனை நிறுத்திவிட வேண்டும்.

பொருளாதாரம் பற்றி ஜனாதிபதிசெய்துவரும்பிரசாரம்முற்றுமுழுதான பொய்யாகும். மொத்த தேசிய உற்பத்தியில் மாற்றமின்றி பாதைகளை அமைப்பதில் பயனில்லை.

நீதிமன்றம் மட்டுமன்றி பொலிஸ் திணைக்களமும் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது. பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோனின் கடமைகளை முன்னாள் பொலிஸ்மா அதிபரும், சட்டம் ஒழுங்கு அமைச்சின் செயலாளருமான மஹிந்த பாலசூரியவே மேற்கொள்கின்றார்.

நாட்டில் ஊடக சுதந்திரம் கிடையாது. நாம் சொல்லும் விடயங்களை ஊடகங்களில் வெளிப்படுத்துகின்றார்கள்.

எனினும், ராஜபக்ஷாக்களுக்கு எதிரான விடயங்களை ஊடகவியலாளர்கள் அம்பலப்படுத்துவதிலலை என அநுரகுமார திஸா நாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.(இ-5)

# கோழி போல் கொக்கரிக்கிறார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, தற்போது வயதான கோழி போல கொக்கரிப்பதாக தேசிய சுதந்திர முன்னணி குறிப்பிட்டுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தேசிய சுதந்திர முன்னணியின் மத்திய மாகாண சபை உறுப்பினர் நிமல் பியதிஸ்ஸ இவ்வாறு தெரிவித்தார்.

வயதான கோழி எப்படி கொக்கரித்தாலும் முட்டை கிடைக்காது என்பது நாட்டின் புத்தியுள்ள மக்களுக்கு தெரியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் பிரதி அமைச்சர்களாக இருந்த இராதாகிருஸ்ணன் மற்றும் திகாம்பரம் ஆகியோர் மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவு தெரிவிப்பதாக கூறியதை இங்கு சுட்டிக்காட்டிய நிமல் பியதிஸ்ஸ, அவாகள் தோட்டத் தொழிலாளர்களின் வீட்டுப்பிரச்சி னைக்கு தீர்வு கிடைக்காமை காரணமாகவே கட்சியில் இருந்து விலகியதாக கூறியது பச்சைப் பொய் எனவும் குறிப்பிட்டார்.

மேலும் தோட்டத் தொழிலாளர்களின் வீட்டுப் பிரச்சினைக்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் இம்முறை வரவு செலவுத்திட்டத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கு 50 ஆயிரம் வீடுகள் கட்டிக்கொடுக்க முன்மொழியப்பட்டமையையும் அவர் இங்கு தெரிவித்தார்.

அவர்கள் கட்சியூடாக அயல் நாடுகளுக்கு உளவு பார்க்கும் பணிக்காகவே மைத்திரிபாலவுக்கு ஆதரவு வழங்கியதாகவும் நிமல் பியதிஸ்ஸ மேலும் தெரிவித்தார்.(இ-5)

# அவுஸ்.பெண்ணின் பணம் கொள்ளை

(கொழும்பு)

கொழும்பிலிருந்து கண்டிக்கு புகையிரதத்தில் சென்று கொண்டிருந்த அவுஸ்திரேலிய நாட்டுப் பெண் ஒருவரின் 5 இலட்சத்து 57 ஆயிரம் ரூபா ரொக்கப்பணம் அவரது பிராயாணப்பையுடன் கடுகண்ணாவைப் பிரதேசத்தில் கொள்ளையிடப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற மேற்படி கொள்ளைச்சம்பவம் தொடர்பில் கண்டி சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி காமினி எல்லப்பொலவின் பணிப்புரைக்கு அமைய கடுகண்ணாவை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

மலையகப் பிரதேசங்களை பார்வையிடுவதற்காக மேற்படி அவுஸ்திரேலிய பெண்மணி கண்டிக்கு பயணமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

# விபத்தை விசாரணை செய்ய வந்தது ரஷ்ய விசாரணை குழு



அண்மையில் விபத்துக்குள்ளான அன்ரனோ விமானம் பற்றிய விசாரணைகளை நடத்துவதற்காக ரஷ்யாவை சேர்ந்த விசேட குழு ஒன்று இலங்கை வந்துள்ளது.

இலங்கை விமானப்படையினர்,விமான விபத்து தொடர்பாக நடத்தி வரும் விசாரணைகளுக்கு உதவுவதற்காக ரஷ்யாவின் விசேட குழுவினர் இலங்கை வருவதாக விமானப்படையின் நிறைவேற்று ஊடக அதிகாரி வின்கமாண்டார் கிஹான் சேனரத் தெரிவித்தார்.

விபத்துக்குள்ளான ரஷ்ய தயாரிப்பு விமானமான எண்டநோவ் 32 விமானம் 1996 ஆம் ஆண்டு இலங்கைக்கு கொண்டுவரப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# இன்று ஒரு தகவல்

## ஞானமார்க்கம்

காடொன்றின் மத்தியிலே நிழல்தரும் மரம் ஒன்று இருந்தது. அந்த மரத்தடியிலே ஒரு ஞானி அமர்ந்திருந்தார். அக்காட்டுப் பக்கமாகத் தினமும் விறகு வெட்டுவதற்காக ஒருவன் வந்து போவான்.

வெட்டிய விறகினை விற்று அதன் மூலம் தனது வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தான்.

இவன் அக்காட்டுப் பக்கம் வந்து போவதை அந்த ஞானி அவதானித்தார். "இதோ பார்... மரம் வெட்டுவதிலே உன் வாழ்நாளை வீணடிக்காதே ... இன்னும் சிறிது தூரம் காட்டிற்குள் முன்னேறிச் சென்றால், ஒரு செம்புச் சுரங்கம் இருக்கும். அதிலே ஒருநாள் வேலை செய்தால் ஒரு வாரத்துக்கு நீ கவலை கொள் ளத் தேவையில்லை.தினமும் வேலை செய்யவேண்டி இருக் காது அங்கே போ" என்றார்.

அவனுக்கு நம்ப முடியவில்லை!

"இந்த ஞானி ... எப்போது பார்த்தாலும் இந்த மரத்தடியிலே தான் கண்ணை மூடிக்கொண்டு அமர்ந்திருக்கிறார். இவருக்கு எப்படித் தெரிந்தது.அங்கேயுள்ள சுரங்கம்? என்று யோசனை செய்தான்.

"இருந்தாலும் போய்த்தான் பார்ப்போமே" என்று நினைத்து காட்டினுள்ளே புறப்பட்டான். அவர் சொன்ன மாதிரியே ஒரு செம்புச் சுரங்கம் அவனது கண்ணிலே தென்பட்டது. அவன் அதிலே இணைந்து வேலை செய்தான். ஞானி கூறிய மாதிரியே ஒருநாள் வேலையின் ஊதியமே அவனது வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்த முடிந்தது. குடும்பத்தையும் கவனிக்கக் கூடியதாக இருந்தது. அதோடு வரும் விருந்தாளிகளையும் உபசரிக்க முடிந்தது.

மறுபடியும் அந்த ஞானி அவனை அழைத்து இன்னும் சற்று உள்ளே போனால் ஒரு வெள்ளிச் சுரங்கம் இருக்கும். அங்கே ஒருநாள் வேலை செய்தால் போதும்... ஆறு மாதத்திற்கு வேலை செய்ய வேண்டிய அவசியம் இருக்காது என்றார்.

இதையும் அவன் முதலில் நம்பவில்லை. இருந்தாலும் போய் பார்த்தான். அங்கே உண்மையாகவே ஒரு வெள்ளிச் சுரங்கம்.

மறுபடியும் ஒருநாள் வேலைசெய்தான்... ஆறுமாதத்திற்கு அவன் ஆடம்பரமாக வாழ்க்கை நடத்தினான். இப்படியாக சில நாட்கள் நகர்ந்தன.

மறுபடியும் ஞானியிடம் இவன் தானாகவே சென்றான். அப்போது ஞானி இவனைப் பார்த்து இன்னமும் நீ விபரம் புரியாமலா இருக்கிறாய் ... இன்னும் சற்று முன்னேறி போனால் ஒரு தங்கச் சுரங்கம் உன் கண்ணிலே தென்படும் என்று கூறினார்.

ஆசை யாரை விட்டது?...அங்கேயும் போனான். நாட்கள் நகர்ந்தன. அவன் ஒரு பெரிய பணக்காரனாக மாறிவிட்டான். செல்வம் நிறைய அவனிடம் இருந்தது. "இனிமேல் ஞானியைப் பற்றி நமக்கு என்ன கவலை " என்று இருந்து விட்டான்.

அதுமட்டுமல்ல... "அந்த ஞானியே விபரம் எதுவும் தெரியாதவர்" என்று நினைத்து விட்டான்.

ஏனென்றால் இப்படி ஒரு தங்கச் சுரங்கம் இருக்கிறது தெரிந்தும் அந்த நபர் கண்ணை மூடிக்கொண்டு உட்கார்ந்திருக்காரே ...அவர் எப்போதும் ஒரு ஏமாளியாகத்தான் இருப்பாரோ. என்று நினைத்தான். அவரைப் போய் பார்க்கவே இல்லை.

ஒருநாள் ஞானியே இவனை அழைத்தார்.

என்ன இது.. இப்படியே இருந்துவிட்டால் எனக்கு வயது போய்க் கொண்டிருக்கிறது. நீ இன்னும் சற்றுத்தூரம் முன்னேறிப் போனால் வைரச் சுரங்கத்தையே பார்க்கலாம். நீ தங்கத்துடனேயே உன் நேரத்தை வீணடிக்கிறாய்" என்றார்.

அவன் பின்னர் வைரச் சுரங்கத்தையும் கண்டுபிடித்தான்.

பின்பு அவன் ஞானியிடம் நீண்ட நாட்களாக வரவில்லை.

ஞானி மரணப்படுகையிலே இருந்தார். உடனே வா... உன்னிடம் கடைசி இரகசியத்தையும் சொல்ல வேண்டியிருக்கிறது" என்று சொல்லி அனுப்பினான். வந்தான் அவர் முன்னால் நின்றான்.

வைரத்தை விட பெரிதாக என்ன இருந்து விட முடியும்?" இன்னும் முன்னேறி போ" என்று சொல்லப் போகின்றீர்களா? என்றார்.

ஆமாம் சற்று தூரம் நகர்ந்தால் அள்ள அள்ளக் குறையாத ஒரு பொக்கிஷம் இருக்கிறது. அதை நீ பார்க்கலாம் வைரச் சுரங்கம் தீர்ந்து போய்விடும் என்றார்.

சரி "இவ்வளவு தூரம் தெரிந்து வைத்திருக்கிற நீங்கள் ஏன் இன்னமும் இந்த மரத்தடியிலே அமர்ந்திருக்க வேண்டும்" அந்தப் பொக்கிஷம் எனக்குள்ளே இருக்கிறது. அதற்காகத்தான் உன்னை அழைத்தேன்" என்றார். அவனால் அதை புரிந்து கொள்ள முடியவில்லை.

காட்டுக்குப் போனான் கண்ணை மூடிக்கொண்டு அமர்ந்திருந்தான். அந்த பொக்கிஷத்தைக் அவன் கண்டு பிடித்தான். நாம் இப்போது வாழும் சூழ்நிலையிலே இது பைத்தியக்காரத்தனமாகத் தெரியவில்லை... என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சி பலன்கள்





**ஒன்பதாமிடத்தில் சனி! உயர்வுகள் வந்திடும் இனி... வந்த விருந்தினர்களை வரவேற்பால் திணறடிக்கும் மீன இராசி அன்பர்களே!**

80/100

கடமைக்கும், கடவுள்வழிபாட்டிற்கும் முக்கியத்துவம் கொடுக்கும் உங்களுக்கு, கடந்த இரண்டரை ஆண்டுகளாக நடைபெற்று வந்த அஷ்டமத்துச் சனி விலகி ஆனந்தமான வாழ்க்கையை இப்பொழுது வழங்கப்போகிறது. இந்தச் சனிப்பெயர்ச்சியால் மிகமிக நற்பலன்களை பெறும் ராசிகளில் முதன்மையான ராசியாக, உங்கள் ராசிதான் விளங்கப் போகின்றது.

இனி நல்லநேரம் இல்லம் தேடிவரப் போகிறது. ஆரோக்கியக் குறைபாடுகள் அகலும் மருத்துவச் செலவுகள் குறையும். சீரோடும், சிறப்போடும் வாழ வழிவகுத்துக் கொள்ளப் போகிறீர்கள். செல்வநிலையில் ஏற்பட்ட இழப்புகளை ஈடுகட்டுவீர்கள். பொது நலத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு வீண் பழிகளிலிருந்து விலகும் சூழ்நிலை அமையும்.

அரைகுறையாக நின்ற பணி இனி மீதியும் தொடரும். ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து வேண்டிய உதவிகளைச் செய்து கொடுக்கப் போகிறார்கள். கூட்டு முயற்சியில் லாபம் கிடைக்கும். குடியிருக்கும் வீட்டாலும், கட்டிய வீட்டாலும் வந்த பிரச்சினை அகலும். அடிப்படை வசதிகளைப் பெருக்கிக் கொள்ள ஆயத்தம் செய்வீர்கள். படிப்படியாக உடல் நலம் சீராகும். பணியில் ஏற்பட்ட தொய்வு அகலும். கொடுக்கல்-வாங்கல்களில் இதுவரை இருந்த ஏமாற்றங்கள் அகலும். கூடுதல் லாபம் தொழிலில் கிடைப்பதற்கு புதிய யுக்திகளைக் கையாளுவீர்கள்.

விலகிய சனியை விலகும் நாளிலேயே கும்பிட்டு மகிழ்வது நல்லது. அதனால் காக வாகனச் சனியை வழிபட்டு வந்தால் கடந்த காலத்தில் ஏற்பட்ட சிக்கல்களும், சிரமங்களும் அகலும்.

வடக்கு நோக்கிய பிள்ளையாரையும், வாலில் மணிகட்டிய ஆஞ்சநேயரையும் இதுபோன்ற காலங்களில் வழிபட்டால் தடைகற்கள் அகலும்.

உங்கள் சுயஜாதகத்தில் சனி இருக்கும் நிலையறிந்து, நவாம்சத்திலும் சனிபகவான் இருக்கும் இடம், அதைப் பார்க்கும் கிரகம், அதோடு இணைந்த கிரகம் அனைத்தையும் ஆராய்ந்து நீங்கள் தேர்ந்தெடுத்து செய்யும் தெய்வ வழிபாடுகள்தான் உங்கள் எதிர்காலத்தை இனிமையாக்கும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

பொதுவாக ஒன்பதாமிடத்தில் சனி உலா வரும்பொழுது பொன், பொருட்களின் சேர்க்கை அதிகரிக்கும். புகழ் ஏணியின் உச்சிக்கு செல்வீர்கள். பகை பாராட்டிப் பிரிந்து சென்ற உறவினர்களும், நண்பர்களும் தானாக வந்திணைவர். பொதுவாக போராட்டமான வாழ்க்கை மாறி பூந்தோட்டமான வாழ்க்கை அமையும். எனவே, கசந்த காலங்கள் மாறி வசந்த காலங்கள் உருவாக காக வாகனத்தானையும், அனுமனையும் கைகூப்பித் தொழுவது நல்லது.

**ஒன்பதாம் இடத்து சனி பொன் பொருள் தருமா?**

சனிபகவான், உங்கள் ராசிக்கு 11, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியாவார். லாபாதிபதியாகவும், விரயாதிபதியாகவும் விளங்கும் சனிபகவான் லாபத்தையும், கொடுத்து விரயத்தையும் கொடுப்பதற்கு மூலகாரணமாக இருக்கிறார். நீங்கள் பெற்றோர்களுக்கும், உடன்பிறப்புகளுக்கும் செய்ய வேண்டியதை முறையாக செய்வீர்கள். இழப்புகளை ஈடுசெய்யும் விதத்தில் புதிய வாய்ப்புகள் வந்து சேரும். இடமாற்றம், ஊர்மாற்றம், நாடுமாற்றம், வாகன மாற்றம், தொழில் மாற்றம் உருவாகும்.

பொதுவாக ஒன்பதாம் இடத்தில் சஞ்சரிக்கும் சனி, பொன் பொருள் வாங்கப் போட்ட திட்டத்தை நிறைவேற்றுவார். மண், பூமி வாங்கி சேர்ப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள். திட்டமிட்ட காரியங்களை திட்டமிட்டபடியே நடைபெற தெய்வ வழிபாடுகளையும் மேற்கொண்டு உங்கள் கவலைகளை போக்கிக் கொள்ளுங்கள்.

சனியின் பார்வை 6 ஆம் இடத்தில் பதிவதால் விபரீத ராஜயோக அடிப்படையில், சில நல்ல காரியங்கள் திடீர் திடீர் என நடைபெறும். பொருளாதார நிலை உயரும். ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். உத்தியோக




இருக்கும். கூட்டாளிகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். மாற்று இனத்தவர்கள் உங்கள் மனதிற்கேற்ற விதத்தில் நடந்து கொள்வார்கள்.

**குதூகலம் தரும் குருப்பெயர்ச்சிக் காலம்!**

விருச்சிக ராசியில் சனி சஞ்சரிக்கும் பொழுது, மூன்று முறை குருப் பெயர்ச்சி நடைபெறப் போகிறது. 5.7.2015 இல் சிம்மத்திலும், 2.8.2016 இல் கன்னி ராசியிலும், 2.9.2017 இல் துலாம் ராசியிலும் குரு சஞ்சரிக்கப் போகிறார்.

சிம்மத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, அதன் பார்வை 2, 10, 12 ஆகிய இடங்களில் பதிவாகிறது. எனவே, குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். குலதெய்வ பிரார்த்தனைகளை மேற்கொள்வீர்கள். கடுமையாக முயற்சித்தும் இதுவரை நடைபெறாத காரியங்கள் துரிதமாக நடைபெறும். கடன் சுமை குறையும். உத்தியோகத்திலிருந்தவர்கள் விருப்ப ஓய்வு பெற்று, சுயதொழில் தொடங்க முன்வருவர். அடிக்கடி பயணங்கள் அதிகரிக்கும்.

கன்னி ராசியில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை 1, 3, 11 ஆகிய இடத்தில் பதிவாகிறது. எனவே, ராசியைப் பார்க்கும் குரு யோசிக்காது செய்த காரியங்களில்கூட வெற்றியைக் கொடுப்பார். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். கீர்த்தி பெருகும். கெடுதல்கள் மறையும். பணப் பற்றாக்குறை அகலும். 11 ஆம் இடம் புனிதமடைவதால் பாக்கிகள் வசூலாகி பரவசப்படுத்தும். பயணங்களால் பலன் கிடைக்கும். அந்நிய தேசத்திலிருந்து நண்பர்கள் உங்களுக்கு ஆதரவுக் கரம் நீட்ட முன்வருவர். எண்ணிய எண்ணங்கள் ஈடேறும் வாய்ப்பும் உண்டு.

துலாம் ராசியில் குரு சஞ்சரிக்கும் பொழுது, அஷ்டமத்து குருவின் ஆதிக்கம் மேலோங்கி இருக்கிறது. எனவே, தொழிலில் எதிர்பாராத இழப்புகள் உருவாகும். எனவே கூட்டாளிகளிடம் கூடுதல் விழிப்புணர்ச்சி காட்டுவது நல்லது. மற்றவர்களை நம்பி ஒப்படைத்த பொறுப்புகள் மீண்டும் உங்களிடமே வந்து சேரலாம். குருவின் பார்வை 2,4,12 ஆகிய இடங்களில் பதிவாகிறது. எனவே, பார்க்கும் குருவால் குடும்பச் சுமை குறையும். வீடு கட்டும் முயற்சி அல்லது வாங்கும் முயற்சியில் வெற்றி கிடைக்கும். தாயின் உடல்நலம் சீராகும். பொதுநலத்தில் ஈடுபட்டிருப்போருக்கு புதிய பொறுப்புகள் வந்து சேரும்.

**ராகு-கேது பெயர்ச்சிக்காலம்!**

8.1.2016 இல் சிம்மத்தில் ராகுவும், கும்பத்தில் கேதுவும் சஞ்சரிக்கும் பொழுது எதிரிகளின் பலம் மேலோங்கியிருக்கும். எதைச் செய்தாலும் யோசித்துச் செய்வது நல்லது. உதிரி வருமானங்கள் குறையலாம். உடனிருப்பவர்களால் கடன்சுமை கூடும். உத்தியோக மாற்றங்கள் உறுதியாகலாம்.

27.7.2017 இல் கடகத்தில் ராகுவும், மகரத்தில் கேதுவும் சஞ்சரிக்கிறார்கள். புத்திர ஸ்தானத்தில் ராகு சஞ்சரிப்பதால் பிள்ளைகள் வழியில் செலவுகள் அதிகரிக்கும். அதன் எதிர்கால நலன் கருதி ஒரு பெரும் தொகையைச் செலவு செய்யப் போகிறீர்கள். பூர்வீக சொத்துத் தகராறுகள் தலைதூக்கும். புதிய முடிவெடுத்து சொத்துக்களை பராமரிக்க ஏற்பாடு செய்வீர்கள். பங்காளிப் பகை மாறும். கேதுவின் ஆதிக்கத்தால் மாற்றுக்கருத்துடையோர் உங்கள் வீட்டுப் பிரச்சினையைத் தீர்க்க முன்வருவர். பழைய தொழிலைக் கொடுத்துவிட்டுப் புதிய தொழில் தொடங்கும் எண்ணம் மேலோங்கும். வீட்டிற்குத் தேவையான விலையுயர்ந்த மின்சாதனப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். வாழ்க்கைத் துணை வழியே வந்த பிரச்சி

**ஜோதிடக் கலாமணி**
**சிவல்புரி சிங்காரம்**

னைகள் அகலும்.

**சனியின் வக்ர காலம் பொற்காலமாக மாற..**

உங்கள் ராசிக்கு 9 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் சனிபகவான் மூன்று முறை வக்ரம் பெறுகிறார். 2015, 2016, 2017 ஆகிய மூன்று ஆண்டுகளிலும் வக்ரம் பெறும் பொழுது நன்மையையும், தீமையையும் கலந்தே செய்வார். சனி உங்கள் ராசியைப் பொறுத்தவரை லாபாதிபதியாகவும், விரயாதிபதியாகவும் விளங்குகிறார். லாபாதிபதி வக்ரம் பெறுவது நல்லதல்ல. வருமானத் தடைகள் அதிகரிக்கும் வாய்ப்புகள் வந்தும் உபயோகப் படுத்திக் கொள்ள முடியவில்லையே என்ற கவலை அதிகரிக்கும். தொழிலில் இழப்புகளையும், ஏமாற்றங்களையும் சந்திக்க நேரிடும். வங்கிச் சேமிப்பு கரைகிறதே என்று கவலைப்படுவீர்க்ள். அதே நேரத்தில் விரயாதிபதி வக்ரம் பெறுவது நன்மைதான். விரயத்தைச் சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு வந்து சேரும். வீடுமாற்றச் சிந்தனைகள் மேலோங்கும். இதுபோன்ற காலங்களில் குருவழிபாடும், சனி வழிபாடும் சஞ்சலங்களைத் தீர்க்கும்.

**தொட்ட காரியங்களில் வெற்றி பெற வழிபாடு!**

சனிக்கிழமை தோறும் அருகிலிருக்கும் சிவாலயத்திற்கு சென்று சனிபகவான் சன்னிதியில் எள்தீபம் ஏற்றி அர்ச்சனை செய்வதோடு காகத்திற்கும் சோறு வைப்பது நல்லது. சிறப்பு வழிபாடாக யோகபலம் பெற்ற நாளில் விநாயகர், முருகப்பெருமான், பிரகதீஸ்வரர், அம்பிகை நந்தி எம்பெருமான், தெட்சிணாமூர்த்தி, வாராகி ஆகியவற்றை வழிபட்டு வாருங்கள். நந்தி வழிபாடு நலம் சேர்க்கும். வாராகி வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும்.

*முற்றும்*

# ஒன்பதாமிடத்தில் சனி... உயர்வு வந்திடும் இனி...

ஆதியந்தப் பிரபு படத்தை இல்லத்து பூஜையறையில் வைத்து பாதி அருகம்புல்லையும், பாதி வெற்றிலை மாலையையும் இணைத்து அணிவித்து வழிபட்டால் அனைத்துக் காரியங்களிலும் வெற்றி கிடைக்கும்.

ஸ்தானம் பலப்படுவதால் உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு நினைத்த இடத்திற்கு மாறுதல்களும் கிடைக்கும். சனியின் பார்வை லாப ஸ்தானத்தில் பதிவதால் தொழில் வளர்ச்சி கூடும். தொகை வரவு திருப்திகரமாக

ஊர்மாற்றச் சிந்தனைகளும், நாடுமாற்றச் சிந்தனைகளும் மேலோங்கும். 12 இல் கேது இருப்பதால் பயணத்தில் விழிப்புணர்ச்சி தேவை. இதுபோன்ற நேரங்களில் ராகு-கேது பரிகாரம் செய்து கொள்வது நல்லது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவம் சுற்றி வளைத்த வேளையில் எனது கணவர் பிடித்துச் செல்லப்பட்டார்

## மனைவி சாட்சியம்

எங்களுடைய இடத்தில் இராணுவம் சுற்றிவளைத்து நின்ற போது சிவில் உடையில் வீட்டிற்குள் வந்த ஆறு பேர் எனது கணவரை பிடித்து சென்றனர். இன்று வரை அவர் வீடு திரும்பவில்லை என

அப்பொழுது நான் அவர்கள் நின்ற இடத்திற்கு சென்ற போது, விசாரித்து விட்டு விடுகிறோம். நீங்கள் உள்ளுக்கு போங்கோ என்றார்கள். அன்றில் இருந்து எனது கணவர் வீடு வரவில்லை என்றார்.



அவரது மனைவி தயாபரன் நளினாதேவி ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்தார்.

வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலகத்தில் இடம்பெற்று வருகின்றஜனாதிபதிஆணைக்குழுவின்இரண்டாம் நாளான நேற்றையதின விசாரணையின் போதே காணாமல் போன தங்கராஜா தயாபரனின் மனைவிமேற்கண்டவாறுசாட்சியமளித்தார். அவர் தொடர்ந்து சாட்சியமளிக்கையில்,

செட்டிகுளம், கிறிஸ்தவ குளம் பகுதியில் உள்ள எமது வீட்டிற்கு இரவு 10 மணியளவில் வந்த சிவில் உடையில் வந்த ஆறுபேர் வீட்டு வாசலில் நின்று கூப்பிடார்கள்.

எனது கணவர் வெளியில் வந்ததும் அவருடன் கதைத்தார்கள்.

யார் கடத்தினார்கள் என்று தெரியுமா என ஆணைக்குழுவின் அதிகாரிகள் கேட்ட போது, அவரைப் பிடிக்கும் போது எங்களுடைய இடத்தில் இராணுவம் சுற்றி நின்றார்கள். அவர்கள் தான் கடத்தினார்கள் என்றார். விடிந்ததும் வெளியில் வந்து பார்த்த போது எல்லா இடமும் இராணுவத்தினரின் சப்பாத்து அடையாளம் இருந்தது.

அடுத்த நாள் செட்டிகுளம் ஸ்ரேசன் அடியில் உள்ள இராணுவத்திடம் சென்று கேட்ட போது தாங்கள் பிடிக்கவில்லை என்றனர்.

அதன் பின்னர் அரசின் உதவித் திட்டங்கள் தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழுவினர் விசாரித்தனர். (2-250)

கருணா அம்மானின் கட்டுப்பாட்டு காலப்பகுதியில் எனது மகன் கடத்தப்பட்டார் என தந்தை ஒருவர் சாட்சியமளித்தார்.

அவர் தொடர்ந்து சாட்சியமளிக்கையில்,

எனது மகன் கடந்த 2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அக்கரைப்

இவ்வாறு காணாமல் போனோர் தொடர்பான விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்தார் தந்தை ஒருவர்.

குறித்த தந்தை வவுனியா செட்டி

அவர் கிழக்கு மாகாணத்தில் இருந்தார். அங்கு முகாம்களை அமைத்து அவர்கள் தங்கியிருந்தனர். அந்தக் காலப் பகுதியில் எனது மகன் காணாமற் போனார் என்றார் தந்தை.

## தந்தை சாட்சியம்



பற்றில் காணாமல் போனார். அப்போது அந்தப் பகுதி முழுவதும் கருணாவின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது.

எனவே எனது மகனை அவர்களே கடத்தியிருக்க வேண்டும்.




குளம் மெனிக்பாமில் தான் வசித்து வருகிறார் என்றும் வேலை நிமிர்த்தம் தனது மகன் அக்கரைப்பற்றில் தங்கியிருந்த சமயம் கடந்த 2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் காணாமற் போனார் என்று தெரிவித்தார்.

இதன்போது "அக்கரைப்பற்று யாருடைய கட்டுப்பாட்டில் இருந்தது" எனறு ஆணைக்குழுவினர் கேள்வி எழுப்பினர்.

அதற்கு கருணா அம்மானின் கட்டுப்பாட்டில் இருந்தது என்றார் அந்தத் தந்தை. கருணா வடபகுதியில் தானே இருந்தார் என ஆணைக்குழு மீண்டும் கேட்க, இல்லை

வழமைபோல அரச உதவிகள் குறித்து விசாரித்த ஆணைக்குழு மரணச் சான்றிதழ் பெறவில்லையா என்றும் கேட்டனர். காணாமற் போன எனது மகனுக்கு எப்படி மரணச் சான்றிதழைப் பெற முடியும் என அவர் கூறினார்.

இன்றைய அமர்வில் சாட்சியமளிப்பதற்கு 52 பேர் அழைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இன்றைய அமர்விலும் இராணுவத்திற்கு எதிரான முறைப்பாடுகளே அதிகமாக பதிவாகின. (2-250)

# வள்ளிபுனம் கொலை வழக்கு விசாரணை வவுனியா மேல் நீதிமன்றத்திற்கு மாற்றம்

(முல்லைதீவு)

முல்லைத்தீவு மாவட்ட புதுக் குடியிருப்பு - வள்ளிபுனம் பகுதியில் நடைபெற்ற கொலை தொடர்பான வழக்கு விசாரணை நேற்றையதினம் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றினால் வவுனியா மேல் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது.

புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் பகுதியைச்சேர்ந்த இராசையா சுரேஸ் என்பவரை கொட்டனால் அடித்து கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப் பட்டு, கைது செய்யப்பட்ட வள்ளிபுனம் பாடசாலை வீதியைச் சேர்ந்த காளிமுத்து சிவராசா, முனியாண்டி தயாபரன் ஆகியோருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் விசாரணையின் பின்னர் முகத்தோற்ற அளவில் நிரூபிக்கப்பட்டதைத் தொடர்ந்து மேற்படி வழக்கினை வவுனியா மேல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்து மாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா உத்தரவிட்டார்.

மேற்படி வழக்கில் இணைக்கப்பட்ட வைத்திய அறிக்கையில் பொல்லால் அடித்து மரணம் ஏற்பட்டதாக அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

வவுனியா மேல் நீதிமன்ற அறிவித்தல் வரும் பட்சத்தில் அந் நீதிமன்றிற்கு ஆஜராகுமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி உத்தரவிட்டுள்ளதாக வழக்குடன் சம்பந்தப்ட்ட தரப்பினர் தெரிவித்துள்ளனர். (2)

# வாக்களிக்கத் தகுதியுடையவர்களை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள்

ஜனாதிபதி தேர்தல் அடுத்தாண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி நடைபெறும். இத் தேர்தலில் வாக்களிக்கத் தகுதியுடையோர் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் தொடர்பில் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய தேசிய ஆள் அடையாள அட்டை, கடவுச்சீட்டு , மத குருமாருக்கான ஆட்பதிவு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஆள் அடையாள அட்டை , முதியோர் அடையாள அட்டை, ஓய்வூதிய அடையாள அட்டை ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை வைத்திருப்பவர்கள் இத் தேர்தலில் வாக்களிக்க முடியமென அவர் அறிவித்துள்ளார். (2-277)

# மணல் ஏற்றி பயணிக்கும் உழவு இயந்திரங்கள் செப்பனிடப்பட்ட வீதியை சேதப்படுத்துகின்றன

## பயணிக்க முடியாமல் இடர்பாடுகளை எதிர்கொள்வதாக விவசாயிகள் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சிவநகர், அடம்பன் சேவைக்கான வயல் வீதி அண்மையில் திருத்தம் செய்யப்பட்டும் தற்போது பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகளால் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த வீதியானது கடந்த 40 வருடங்களுக்கு பின்னர் கிளிநொச்சி நீர்ப்பாசன பொறியியலாளரின் சிறியளவிலானநிதியுதவியுடன் அண்மையில் திருத்தம் செய்யப்பட்டது.

இதேவேளை கிளிநொச்சி கமநல சேவை திணைக்களமும் இத்தகைய வேலையைச் செய்வதற்கு உதவுவதற்கு பதிலாக செப்பனிடப்பட்ட வீதிகளையும் பராமரிப்பதற்கு ஏற்ற ஒழுங்கமைப்புக்களைச் செய்யாமல் விவசாயிகள் பாதிக்கப்படக்கூடிய வகையில் நடைபெறும் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தாது இருப்பதாக விவசாயிகளால் குற்றம் சாட்டப்படுகின்றது.

தற்போது அமைக்கப்பட்டுள்ள குறித்த வயல் வீதியூடாக அனுமதியற்ற முறையில் மணல் ஏற்றும் உழவு இயந்திரங்கள் இப் பாதை




யைப் பயன் படுத்தி சேதமடையும் நிலையை ஏற்படுத்துவதுடன், மணல் ஏற்றி பயணிக்கும் உழவு இயந்திரங்கள் புதையுண்டவுடன் வீதியை வெட்டி சேதப்படுத்தி மரங்களைக் குறுக்காக வைத்து வாகனம் சென்று விடுவதாக விவசாயிகளால் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இது தொடர்பில் உரிய கமக்கார அமைப்பினர், கமநலசேவை திணைக்களத்தினர் , பாதுகாப்பு படையினர் , தற்போது உருத்திரபுரத்தில் நடைபெறும் நடமாடும் சேவை பொலிஸ் பகுதியினர் ஆகியோருக்கு, விவசாயிகளால் அறிவிக்கப்பட்டும் நேரில் சென்று தெரிவிக்கப்பட்டும் இதுவரை எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லையென தெரிவிக்கப்படுகின்றது.

எனவே திணைக்களங்களுக்கு பொறுப்பாகவுள்ள மாவட்ட செயலாளர் இவ்விடயத்தில் அதிகூடிய கவனமெடுத்து விவசாயிகளுக்கு உதவ வேண்டுமென பாதிக்கப்பட்ட விவசாயிகளால் கோரிக்கை விடப்படுகின்றது. (2-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸி சிட்னி நகரில் பொதுமக்கள் ஆயுததாரிகளினால் சிறைபிடிப்பு




அவுஸ்திரேலியாவின் தலை நகரமான சிட்னி நகரில் உள்ள லிண் ட்கபே என்ற பிரபல ஹோட்டலில் இருந்த பொதுமக்கள் மற்றும் ஊழியர்கள் துப்பாக்கி ஏந்திய மர்ம நபர்கள் பிணைக்கைதிகளாக பிடித்து வைத்துள்ளமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள அதே வேளை ஐ.எஸ்.ஐ.எஸ்.இது குறித்த தகவல் வெளியானதும் பொலிஸாரும், தொலைக்காட்சி செய்தியாளர்களும் அங்கு விரைந்தனர். தொலைக்காட்சி சனலில் காட்டப்பட்ட காட்சி ஒன்றில், ஹோட்டலுக்குள் பிடிபட்டிருக்கும் பொதுமக்கள் சிலர் ஜன்னலோரம் நிறுத்தி வைக்கப பட்டிருப்பதும், அவர்கள் கைகளில் கறுப்புக்கொடி கொடுக்கப்பட்டுள்ளதும் பதிவாகியுள்ளது. அந்தக் கொடியில், வெள்ளை நிறத்தில் அரபு மொழியில் ஏதோ எழுதப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். எனவே, இது இஸ்லாமிய போராளிகள் அமைப்பான ஐ.எஸ். ஐ.எஸின் செயலாக இருக்கலாமோ என சந்தேகிப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், அவுஸ்திரேலிய பிரதமர் டோனி அபாட், அமைச்சரவை கூட்டத்தை அவசரமாகக் கூட்டியுள்ளார். ஹோட்டலில் பிணைக்கைதிகள் பிடித்துவைக்கப்பட்டுள்ளது குறித்து ஆலோசித்து வருகிறார்.

அவுஸ்திரேலியாவுக்கு தீவிரவாத அச்சுறுத்தல் இருப்பதாக அபாட் ஏற்கெனவே எச்சரித்திருந்தார் என்பது கவனிக்கத்தக்கது.

சிரியா, ஈராக்கில் போராடி வரும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிராக அமெரிக்காவுடன் அவுஸ்திரேலியாவும் கூட்டுச் சேர்ந்துள்ளது. இதற்கு பதிலடியாக ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பு இத்தகைய தாக்குதலை நடத்தியிருக்கலாம் என அஞ்ச ப்படுகிறது.

**பிரதமர் மோடி கண்டனம்**

அவுஸ்திரேலியாவில் பொது மக்கள் சிறைபிடிக்கப்பட்டுள்ள சம்பவத்திற்கு பிரதமர் நரேந்திர மோடி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இது குறித்து டுவிட்டரில், "சிட்னியில் நடைபெறும் சம்பவம் மிகவும் வேதனையளிக்கிறது. மனிதாபிமானமற்ற, துரதிர்ஷ்டவசமான சம்பவம். பிணைக்கைதிகளாக இருக்கும் அனைவருக்காகவும் பிரார்த்தனை செய்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**ஆஸி., பிரதமர் ஆறுதல்:**

சிட்னி நகரின் மார்டின் பிளேஸில் பிணைக்கைதிகள் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் சம்பவம் வருத்தமளிக்கிறது. இருப்பினும், அவுஸ்திரேலியர்கள் பீதியடைய வேண்டாம். அவுஸ்திரேலியாவின் பாதுகாப்பு நிறுவனங்கள் நிலைமையை திறம்பட கையாண்டு வருகிறது என அவுஸ்திரேலிய பிரத மர் டோனி அபாட் தெரிவித்துள் ளார். (இ-5)




## பிரதமர் சின்சே அபே மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் அமோக வெற்றி




ஜப்பான் தேர்தலில் பிரதமர் சின்சே அபே அமோக வெற்றி பெற்று மீண்டும் பிரதமர் பதவியை தன்வசமாக்கியுள்ளார். இடம் பெற்ற தேர்தலின் மூலம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வெற்றி பெற்றுள்ள சின்சே அபே 475 மொத்த ஆசனங்களில் 328 இனை தன்வசமாக்கியுள்ளார்.

ஜப்பான் பிரதமராக கடந்த 2012 ஆம் ஆண்டு முதல் பதவி வகித்து வருபவர் சின்சே அபே. இவருடைய பதவி காலம் முடிவடைவதற்கு இன்னும் 2 ஆண்டுகள் உள்ளன. எனினும் அண்மையில் நாட்டின் பணவீக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக இவர் கொண்டு வந்த பல்வேறு சீர்திருத்தங்களுக்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன.

இதையடுத்து பாராளுமன்றத்தை கலைத்து விட்டு இடைத் தேர்தலை சந்திப்பதென கடந்த மாதம் சின்சே அபே முடிவு செய்தார். அதன்படி 475 உறுப்பினர்களைக் கொண்ட ஜப்பான் பாராளுமன்ற கீழ் சபைக்கு நேற்று முன்தினம் தேர்தல் நடத்தப்பட்டது.

இதில் சின்சே அபே தலைமையிலான விடுதலை ஜனநாயக கட்சி கூட்டணியும், பிரதான எதிர்கட்சியான ஜப்பான் ஜனநாயக கட்சி கூட்டணியும் அதிகாரத்தை கைப்பற்ற போட்டியிட்டன. காலை 7 மணிக்கு தொடங்கிய வாக்கு பதிவு மாலை 4.30 மணியளவில் முடிவடைந்தது.

இடம்பெற்ற தேர்தல் முடிவுகளின் படி சின்சே அபே வெற்றி பெற்று 2 ஆவது முறையாக பிரதமர் பொறுப்பு ஏற்றுள்ளார். இதன் மூலம் அபே 2018 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து பிரதமர் பதவி வகிப்பார் என்பது குறிப்பிடத்தக்கது. அபே கட்சிக்கு பெரும் வெற்றி கிடைக்கும் பட்சத்தில் பொருளாதார சீர்திருத்த கொள்கைகளில் அவர் சுதந்திரமாக செயற்படுவதற்குரிய வாய்ப்பு ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## சீனாவில் தீ 11 பேர் பலி!

சீனாவில் ஹெனாண் மாகாணத்தில் ஹுயாங்குயான் கரா யோக் என்ற இடத்தில் மதுபான சாலை உள்ளது. நேற்றுமுன்தினம் அங்கு திடீரென தீ பிடித்தது. உடனே அங்கு மது குடித்து கொண்டிருந்தவர்கள் திடீரென வெளியேறி ஓட்டம் பிடித்தனர்.

இருந்தும் 11 பேர் தீயில் கருகி பரிதாபமாக இறந்தனர். 38 பேர் காயம் அடைந்தனர். அவர்களுக்கு வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்டது. தீ விபத்துக்கான காரணம் தெரியவில்லை.

இது குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. (இ-5)

## நீர்மின் நிலைய வளாகத்தினுள் கட்டடம் இடிந்து திடீர் விபத்து

ஈக்வடோர் நாட்டின் தலைநகரமான க்விடோவில் உள்கட்டமைப்பு திட்டத்திற்கான கட்டடத்தில் ஏற்பட்ட விபத்தில் சம்பவ இடத்திலேயே 13 தொழிலாளர்கள் பலியாகினர். பத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

சீன நிறுவனமான 'சினோ ஹைட்ரோ, 1500 மெகாவாட் திறன் கொண்ட 200 கோடி ரூபாய் மதிப்பிலான நீர்மின்சார ஆலை திட்டத்தை எக்வடோரில் செயற்படுத்தி வருகிறது. திட்டம் நடைபெறும் கொக கோடா பகுதியில் கட்டுமானப் பணி நடக்கும் இடத்தில் எதிர்பாராத விதமாக புதிதாக கட்டப்பட்டு வந்த கட்டடத்தின் சுவர் இடிந்து விழுந்ததில் 13 பேர் உயிரிழந்தனர். இதில் 10 பேர் ஈக்வடோரைச் சேர்ந்தவர்கள். 3 பேர் சீனாவைச் சேர்ந்தவர்கள்.

இறந்த தொழிலாளர்களின் குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவிப்பதாக அந்நாட்டுப் பிரதமர் ரஃபேல் தெரிவித்தார். இந்த விபத்து குறித்து செய்தி வெளியிட்ட சீனத் தூதரகம், இது "வலிமிகுந்த பாடம்" என்றும், இதிலிருந்து மற்ற சீன நிறுவனங்களும் பாடம் கற்க வேண்டும் என்று கூறியுள்ளது. (இ-5)

## இந்திய தூதரக அதிகாரிகள் பாதுகாப்பாக வெளியேற்றம்

### மத்திய அரசு தகவல்

அவுஸதிரேலியாவின் சிட்னி நகரில் உள்ள லிண்ட் கபே என்ற ஹோட்டலில் இருந்த பொதுமக்கள், ஊழியர்களை துப்பாக்கி ஏந்திய மர்ம நபர் ஒருவர் பிணைக்கைதிகளாக சிறைபிடித்து வைத்திருப்பதால் அங்கு பதற்றம் ஏற்பட்டுள்ளது. நெருக்கடியான நிலையை அடுத்து அருகாமையில் உள்ள இந்திய தூதரகத்தில் உள்ள அனைத்தும் தூதரக அதிகாரிகளும் பாதுகாப்பாக இருப்பதாக வெளியுறவுத் துறை செய்தி தொடர்பாளர் சையது அக்பருதின் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் நடைபெற்றுள்ள இடத்தில் இருந்து 300-400 மீற்றர் தொலைவிலேயே இந்திய தூதரகம் அமைந்திருப்பதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தூதரக அதிகாரிகள் அனைவரையும் பாதுகாப்பாக வெளியேற்றிவிட்டோம். உள்ளூர் அதிகாரிகளிடம் நமது தூதரக அதிகாரிகள் தொடர்பில் உள்ளனர். உள்ளூர் அமைப்புக்களிடம் தொடர்பில் உள்ள நமது தூதரிடம் வெளியுறவு துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தொடர்பு கொண்டு பேசினார்.

இது போன்ற சம்பவங்களை கையாள்வது எப்போதுமே கடினமான ஒன்று. ஆனால் நமக்கு சில விடயங்களில் குறிப்பிட்ட வழிமுறைகள் உள்ளன. உதவி தொலைபேசி மையத்தை நாங்கள் ஏற்படுத்தியுள்ளோம். துணை தூதரக அதிகாரியை 61481453550 என்ற எண்ணில் உதவி எண்ணில் தொடர்பு கொள்ளலாம். ஒருவேளை ஏதாவது தகவலை பெறவேண்டும் என்று யாரேனும் விரும்பினால் அதை நாங்கள் வழங்குவோம். இங்குள்ள இந்தியர்களின் நலனையும் பாதுகாப்பையும் அரசு கவனத்தில் கொண்டுள்ளது என்று சையது அக்பருதின் தெரிவித்தார்

**ஐந்து பேர் தப்பினர்**

இந்நிலையில், ஹோட்டலில் இருந்து 5 பிணைக்கைதிகள் தப்பிவந்தனர். அவர்களிடம் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். இதனிடையே நான்கு வெடி குண்டுகளை துப்பாக்கி ஏந்திய மர்ம நபர் வைத்திருப்பதாகவும் இரண்டு வெடிகுண்டுகளை சிற்றுண்டி விடுதியின் வளாகத்திற்குள்ளேயே வைத்திருப்பதாகவும் மீதமுள்ள இரண்டு வெடிகுண்டுகளை சிட்னியின் பிற இடங்களில் வைத்திருப்பதாகவும் தப்பி வந்த பிணையக் கைதிகள் நியு சவுத்வேல்ஸ் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர். (இ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத்திலிருந்து நாட்டை விடுவித்து மக்களின் அச்சத்தை நானே போக்கினேன்

## ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தில் தெரிவிப்பு

(கொழும்பு)

**பயங்கரவாதத்திலிருந்து நாட்டை விடுவித்தது மட்டுமன்றி நாட்டு மக்கள் மனங்களிலிருந்த அச்சத்தைப் போக்கி, நாட்டை அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்லும் வாய்ப்பு தனக்குக் கிடைத்ததாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

கெலிஓயா நகரில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொ ண்டு உரையாற்றும் போதே ஜனா திபதி மகிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற் றிய ஜனாதிபதி,

நாட்டில் பயங்கரவாதம் தலை விரித்தாடிய சந்தர்ப்பத்தில் அதனை முடிவுக்குக் கொண்டுவரும் வாய் ப்புக் கிடைத்தது. இப்பயங்கரவாதத் தினால் சகல இன மக்களும் துன் பப்பட்டனர். முஸ்லிம்கள் விரட் டப்பட்டமை மட்டுமன்றி சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஆனால் இன்று மக்கள் அச்சமின்றி வாழக்கூடிய சூழ் நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

நாட்டில் யுத்தம் முடிவடைந் தவுடன் அபிவிருத்தி வேலைகள் சகல பிரதேசங்களிலும் துரிதமாக முன்னெடுக்கப்பட்டன. பாதைகள் நவீனமயப்படுத்தப்பட்டுள்ளன. கண்டியிலிருந்து கொழும்புக்கு நாற்பத்தைந்து நிமிடங்களில் செல் லக்கூடிய வாய்ப்பு மிக விரைவில் கிடைக்கும். சுற்றுலாத்துறையில் பாரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளோம். இதனை நோக் கமாகக்கொண்டு வரவு - செல வுத்திட்டம் முன்வைக்கப்பட்டது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார். (இ-5)

# 18ம் திருத்தத்தை ரத்து செய்ய மக்கள் வாக்களிக்க வேண்டும்

18ம் திருத்தச் சட்டத்தை ரத்து செய்ய வாக்களிக்கப்பட வேண் டுமென பல்கலைக்கழக பேராசிரி யர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள விசேட ஊடக அறிக்கையில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்கால சந்ததியினரைக் கருத்திற் கொண்டு எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் மக்கள் தீர்மானம் எடுக்க வேண்டும்.

18ம் திருத்தச் சட்டத்தை ரத்து செய்யும் ஓர் வேட்பாளருக்கே ஆதரவளிக்கப்பட வேண்டும்.

எதிர்பார்க்கும் அனைத்து மாற் றங்களையும் ஒரே இரவில் அல் லது ஓர் அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும் என எதிர்பார்க்கவில்லை.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் நல்லாட்சி மற்றும் ஜனநாயகம் தொடர்பில் கூடுதல் முக்கியத்துவம் உடைய தேர்தலாக கருதப்படுகி ன்றது.

கடந்த ஒரு தசாப்த காலமாக நாட்டில் நல்லாட்சி மற்றும் ஜன நாயக நெறிமுறைகள் வீழ்ச்சியடை ந்துள்ளன.

ஜனாதிபதி தேர்தலின் பின்னர் அரசியலமைப்பு திருத்தங்கள் தொடர்பில் ஆராயப்படவுள்ளதாக பல்கலைக்கழக பேராசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

நாட்டின் பல பாகங்களிலும் காணப்படும் பல்கலைக்கழகங்க ளின் பேராசிரியர்கள் பலர் இந்த ஊடக அறிக்கையில் கையொப்ப மிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வின் ஆட்சி தொடர்பிலான அதி ருப்தியை வெளிக்காட்டும் வகை யில் இந்த ஊடக அறிக்கை அமை ந்துள்ளது. (இ-5)

# ஆட்சியாளர்கள்மீது முஸ்லிம்கள் கடும் அதிருப்தி அடைந்துள்ளனர்

இலங்கையில் வாழும் முஸ்லி ம்கள் இந்த அரசின் மீது அதிருப் தியுடன் காணப்படுவதாகவும் இவ் வாறான அதிருப்திப்பாடானது மக் களை அரசின் மீது நம்பிக்கை இழ க்க வைத்துள்ளதாக திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர எச்.எம்.எம்.ஹரீஸ் தெரிவித்தார்.

கல்முனைக்குடியில் அபிவிரு த்தி திட்டங்களை நேற்று முன் தினம் திறந்து வைத்து உரை யாற் றும் போது அவர் இந்த கருத்தை தெரிவித்தார்.

சுதந்திரத்துக்குப் பின் இந்த நாட்டை எத்தனையோ ஆட்சியாள ர்கள் ஆண்ட போதிலும் இங்கு வாழும் முஸ்லிம்கள் தற்போது இருக்கின்ற ஆட்சியில் கீழ் பல் வேறுபட்ட நெருக்குதல்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இவ்வாறான துன்பங்கள் ஏற்ப ட்ட போதெல்லாம் இந்த அரசு பாராமுகமாக இருந்துள்ளது. அர சின் இவ்வாறான போக்கின் கார ணமாக என்றுமில்லாதவாறு முஸ் லிம் மக்கள் இந்த அரசின் மீது அதிருப்தியுடன் காணப்படுகின்ற னர். இவ்வாறான அதிருப்திப்பாடா னது மக்களை அரசின் மீது நம் பிக்கை இழக்க வைத்துள்ளது.

இதனால் எதிர்வரும் ஜனா திபதித் தேர்தலில் யாரை ஆத ரிப்பது என முஸ்லிம் மக்கள், கட்சி முடிவெடுப்பதற்கு முன்பாகவே தீர்மானித்து விட்டார்கள்.

இன்று என்றுமில்லாத அளவு ஒற்றுமைப்பட்டுள்ள மக்களின் அபிலாசைகளுக்கு அந்த மக்க ளால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளான நாங்கள் தலை சாய்த்தே ஆக வேண்டியுள்ளது.

எத்தனையோ கட்சிகள் மக் களை ஒன்று திரட்ட முற்பட்டபோது ஒன்றுபடாத முஸ்லிம்கள், அவர களது மத ரீதியான உணர்வு களோடு இந்த அரசு விளையா டியதால் மக்களின் போக்கில் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளதுடன் முழு முஸ்லிம் சமூகமும் ஒற்றுமைப் பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# இராணுவ ஆட்சிக்கு முடிபுகட்ட சந்தர்ப்பம்

## அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

இராணுவ மயப்படுத்தப்பட்ட தேர்தலை நோக்கி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் நகர்கின்றது. இராணுவ ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கும் இறுதிசந்தர்ப்பம்தற்போது வந்துள்ளது.

இதை தவற விட வேண்டாம் என தெரிவிக்கும் பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க, வடக்கு கிழக்கு மக்கள் யாரை ஆதரிக்க வேண்டும் என்பது அவர் களின் விரும்பம். அதற்காக தமிழர் களை வற்புறுத்த வேண்டாம் என வும் தெரிவித்தார்.

புதிய ஜனநாயக முன்னணியி னால் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்க ண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,


ஜனாதிபதித் தேர்தலில் போட்டி இருப்பது வழமையானது. ஆனால் ஆட்சியினை விரும்புவதும் யார் ஆட்சிக்கு வர வேண்டும் என்பதை தெரிவுசெய்வதும்பொதுமக்களேயாவர்.

ஆனால் தற்போது மக்களின் விருப்பத்தினை மீறி ஒரு சிலரின் விருப்பத்திற்காக தேர்தல் வெற்றி தீர்மானிக்கப்படுகின்றது. அதற்காக அரசாங்க ஊழியர்களையும் அரச உடைமைகளையும் அரச ஊடக ங்களையும் பயன்படுத்துகின்றனர்.

இதனையும் தாண்டி தற்போது இராணுவ பிரசாரத்தினையும் அரசாங்கம் ஆரம்பித்து விட்டது. எதிரணியின் கூட்டங்களுக்கும் செய்தியாளர் சந்திப்புக்களுக்கும் புலனாய்வு பிரிவு அனுப்பப்படுகி ன்றது. மக்கள் யாரை ஆதரிக்க வேண்டும் என்பது இராணுவத் தினால் கட்டாயப்படுத்தப்படுகின் றது. இராணுவ ஆட்சியினை நோக் கிய பயணத்திற்கான சமிக்ஞை யினை அரசாங்கம் காட்டுகின்றது.

மக்களுக்கு ஜனநாயகத்தினை யும் நல்லாட்சியினையும் பெற்றுக் கொள்ளும் இறுதி சந்தர்ப்பம் தற்போது அமைந்துள்ளது. இதனை தவறவிட வேண்டாம். இதுவே நாட்டின் பாதையினை தீர்மானி க்கும் இறுதி சந்தர்ப்பமென்பதனை மக்கள் மறந்து விட வேண்டாம்.

2005 ஆம் ஆண்டு தேர்தலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீது நம்பிக்கையிருந்ததை விடவும் மறைமுகமான பல ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஜே.வி.பி யுடனும் ஜாதிக ஹெல உறுமயவு டனும் முக்கிய உடன்படிக்கைகள்



செய்து கொள்ளப்பட்டன. அதே போல் விடுதலைப் புலிகளுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது யார் என்பதற்கும் எவ்வாறான தொரு உடன்படிக்கை என்பதற்கும் தெளிவான பதிலை அரசாங்க த்தில் ஒரு சிலர் கொடுக்கலாம். அன்று விடுதலைப்புலிகள் தமிழ் மக்களின் வாக்குரிமையினை தடுத்தமையும் அரசாங்கத்தின் வெற்றிக்கு உதவியமையும் முடிச்சு போடுவதை விட இப்போது உள்ள நிலைமையினை மக்கள் விளங் கிக் கொண்டு சரியான முடிவு எடுக்க வேண்டும் என்றே நாம் எதிர்பார்க்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# தேர்தல் பிரசாரத்தில் சிறைக் கைதிகள்

## கபே குற்றச்சாட்டு





(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வின் தேர்தல் பிரசார நடவடிக் கைகளில், சிறைக் கைதிகள் ஈடுபடு த்தப்பட்டுள்ளனர் என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளில் ஒன்றான கபே அமைப்பு தெரிவி த்துள்ளது.

மாத்தறை, கம்புறுபிட்டியவில் நேற்று முன்தினம் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்துக்கான, மேடை நிர்மாணம் மற்றும் அலங்கார பணிகளுக்காக காலி சிறைச்சா லையைச் சேர்ந்த 44 சிறைக் கைதிகள் பயன்படுத்தப்பட்டுள்ள னர் என்றும் இவர்களுக்கு நீல நிற காற்சட்டை அணிவிக்கப்பட்டிருந் ததாகவும் கபே அமைப்பு தெரி வித்துள்ளது.

இது தொடர்பில் கபே அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,


"புனர்வாழ்வு மற்றும் சிறைச் சாலைகள் புனரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர, மாத்தறை மாவ ட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதியாவார். அவர், கொமியுனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்.

இந்நிலையில், கம்புறுபிட்டிய வில் இடம்பெற்ற ஜனாதிபதியின் பிரசாரக் கூட்டத்துக்காக சிறைச்சா லையின் வாத்தியக் குழு, சிறைச் சாலை பேருந்து, சிறைச்சாலைக் குச் சொந்தமான கொடிக் கம்பங்கள் மற்றும் அலங்காரப் பொருட்கள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன என்றும் கபே வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியன் சுப்பர் லீக் காற்பந்து போட்டி
# கொல்கத்தா - கோவா ஆட்டம் சமநிலை






கொல்கத்தா-கோவா அணி களுக்கிடையிலான ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.


இந்தியன் சுப்பர் லீக் காற பந்து (ஐ.எஸ்.எல்.) போட் டியில் அட்லெடிகோ டீ கொல்கத்தா-எப்.சி.கோவா அணிகள் இடையி லான அரைஇறுதியின் முதலா வது சுற்று கொல்கத்தாவில் நேற்று முன்தி னம் நடந்தது.

காயத்தால் கொல்கத்தா அணியில் நட்சத்திர வீரர் பிக்ரு ஆடவில்லை. இருப்பி னும் சொந்த ஊர் சாதகமான சூழலை கொல்கத்தா அணி பயன்படுத்த தவறியது. கோவா வின் தடுப்பு அரண் கொஞ்சம் பலவீனமானது என்றாலும் கடைசி வரை முட்டுக் கட்டையை கொல்கத்தா அணியினரால் உடைக்க முடியவில்லை. இத னால் இந்த ஆட்டம் கோல் இன்றி (0-0) சமநிலையானது.

இவ்விரு அணிகள் இடை யிலான அரைஇறுதியின் 2 ஆவது சுற்று எதிர்வரும் 17 ஆம் திகதி கோவாவில் நடக்கி றது. இதன் முடிவில் இறுதிப் போட்டிக்கு முன்னேறும் அணி எது என்பது தெரியவரும். (க)

# நியூசிலாந்து அணியை வீழ்த்தி பாகிஸ்தான் அபார வெற்றி





பாகிஸ்தான் - நியூசிலா ந்து அணிகளுக்கிடையில் ஐக்கிய அரபு இராச்சியத்தின் சாரஜா மைதானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற் றுக்கி ழமை இடம்பெற்ற 3ஆவது ஒருநாள் சர்வதேசப் போட் டியில் பாகிஸ்தான் அணி 147 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி, முதலில் துடுப்பெடுத் தாடத் தீர்மானித்தது. அதற் கமைய, 50 ஓவர்கள் நிறை வில் 7 விக்கெட்டுகளை இழ ந்து 364 ஓட்டங்களைக் குவி த்தது. பாகிஸ்தான் அணி சார்பில் அபாரமாக விளை யாடிய அஹமட் ஷெஹ்ஸாட், 120 பந்துகளை எதிர்கொணடு 2 சிக்ஸர்கள் 12 நான்கு ஓட டங்கள் அடங்கலாக 113 ஓட்டங் களைப்பெற்றுக்கொண்டார்.

நியூஸிலாந்து அணியின் பந்து வீச்சாளர்கள் சார்பாக மட் ஹென்றி - 3 விக்கெட் டுகளையும், மிச்சல் மக்கிளே னகன், குரே அன்டெர்சன், நதன் மக்லம் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

365 என்ற இமாலய வெற்றி இலக்கினை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி, 38.2 ஓவர்கள் நிறைவில் சகல விக கெட்டுகளையும் இழந்து 217 ஓட்டங்களை மட்டுமே பெற்று, படு தோல்வியடைந்தது.


நியூசிலாந்து அணி சார் பில் அதிகூடிய ஓட்டமான 46 இனை கன்னே வில்லியம் ஸன் பெற்றுக்கொண்டார்.

பாகிஸ்தான் அணியின் பந்து வீச்சாளர்கள் சார்பில் ஷஹீட் அப்ரிடி மற்றும் ஹரிஸ ஷொஹைல் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், மொஹ மட் இர்பான் 2 விக்கெட்டுகளை யும், வஹாப் ரியாஸ் மற் றும் அஹமட் ஷெஹ்ஸாட் ஆகியோர் தலா ஒரு விக்கெட் டினையும் வீழ்த்தி னர். இப்போட் டியின் நாயக னாக அஹமட் ஷெஹ்ஸாட தெரிவானார்.

5 போட்டிகளைக் கொண்ட குறித்த தொடரில் பாகிஸ்தான் அணி 2 : 1 என்ற நிலையில் முன்னிலை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (க)

SPORTS
விளையாட்டுச் செய்திகள்

# கின்னஸ் அமைப்பினால் டெண்டுல்கர் கௌரவிப்பு



கிரிக்கெட்டின் சகாப்தம் டெண்டுல்கர். கடந்த ஆண்டு நவம்பர் மாதம் அவர் ஓய்வு பெற்றார். டெண்டுல்கரை கின்னஸ் உலக சாதனை அமைப்பு கௌரவித்தது. அதன் 60ஆவது ஆண்டு விழாவையொட்டி அவர் உட் பட 60 விளையாட்டு வீர வீராங்கனைகள் கௌரவிக் கப்பட்டனர். சான்றிதழும், பதக்கமும் வழங்கி டெண் டுல்கரை கௌரவித்தது.

இந்த பாராட்டு குறித்து டெண்டுல்கர் கூறும்போது, உலக கின்னஸ் சாதனை அமைப்பின் 60ஆவது ஆணடு விழாவில் என்னை கௌர வித்தது மிகுந்த மகிழ்ச்சியை தருகிறது. அதே நேரத்தில் மிகுந்த பெருமையையும் அளிக்கிறது என்றார்.

கின்னஸ் சாதனை அமைப் பின் தலைமை நிர்வாகி கிரேக் கூறும்போது, டெண் டுல்கர் கிரிக்கெட்டில் பல்வேறு சாதனைகளை படைத்தவர். இலட்சக்கணக்கான ரசிகர்களை கவர்ந்தவர். இதன் காரண மாக எங்களது ஆண்டு விழா வில் அவரை அங்கீகரித்து கௌரவித்தோம் என்றார்.

டெண்டுல்கர் 200 டெஸ்டில் விளையாடி 15,921 ஓட்டங்களும், 463 ஒருநாள் போட்டியில் 18,426 ஓட்டங்க ளும் எடுத்துள்ளார். சர்வ தேச போட்டிகளில் 100 சதங் களை (டெஸ்ட் 51 ஒருநாள்போட்டி 49) எடுத்துள்ளார். (க)

# சங்காவுக்கு அபராதம்



இலங்கை வீரர் குமார் சங்கக்கார வுக்கு அபராதம் விதிக் கப்பட்டுள்ளது. இல ங்கை - இங்கிலா ந்து அணிகளுக்கு இடையில் பல்லே கலவில் நடந்த ஆறா வது போட்டியில் நடு வரின் தீர்ப்பை மதி க்காது நடக்கவில்லை. இதனால் போட்டி ஊதியத்தில் இரு ந்து 15 வீதத்தை அபராதமாக செலுத் துமாறு ஐ.சி.சி. உத் தரவிட்டது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவாளியின் ஒருநாள் வாழ்வு, ஒரு முட்டாளின் முழு வாழ்வுக்குச் சமன்
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இந்திய மக்களின் சிந்தனை இலங்கை மக்களிடம் இல்லை

உலகில் முதற்தர ஜனநாயக நாடு என்ற பெருமை இந்தியாவுக்கே உண்டு. நூறு கோடி கடந்த மக்கள் தொகை கொண்ட பாரத பூமியில் அரசியல் தலையீடற்ற தேர்தல் நடைபெறுவது கண்டு ஆச்சரியப்படாமல் இருக்க முடியாது.

வாக்களிப்பு முறையில் கையாளப்படும் நவீன தொழில்நுட்ப முறைமைகள் தேர்தல் முறைகேட்டை உச்ச அளவில் கட்டுப்படுத்தி வைத்துள்ளது.

இத்தியாவின் ஜனாதிபதி, பிரதமர் என்ற பதவிகளில் இருந்தவர்கள் நிலை நாட்டிய ஜனநாயக உரிமைகளை – கடமைகளை தேர்தல் ஆணையாளர்களும் நிலைநாட்டி தங்கள் பெயர்களை பாரத பூமியில் பதிய வைத்துள்ளனர்.

இந்தியத் தேர்தல் ஆணையாளர்களாக இருந்த சேசன், கோபாலகிருஷ்ணன் போன்றவர்கள் ஒழுங்கான தேர்தல்கள் இடம்பெறுவதற்கு ஆரோக்கியமான திட்டங்களை வகுத்து அதனை நடைமுறைப்படுத்தியும் காட்டியவர்கள்.

தேர்தல் ஆணையாளர் என்ற பதவியில் இருக்கும் ஒருவர், இந்தியத் தேர்தல் ஆணையாளர்களின் நடுநிலைத் தன்மையை கற்றறிய வேண்டும்.

குறித்த பதவியில் இருக்க வேண்டும் என்பதற்காக அந்தப் பதவியை துஷ்பிரயோகம் செய்வதென்பது நாட்டின் ஜனநாயகத்தையே அழித்தொழிக்கும் செயலாகும்.

ஆக, உலகின் தலை சிறந்த ஜனநாயக நாடு என்ற பெருமையை இந்திய பெற்றுக் கொள்வதன் அடிப்படை என்பது தேர்தல் நடக்கும் ஒழுங்குமுறையில் அமைந்ததாகும். இந்த ஒழுங்கை இந்தியத் தேர்தல் ஆணையமும் நீதித்துறையும் மிகச் செம்மையாகச் செய்து வருகின்றன.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக இந்திய தேசத்தின் ஆட்சியைத் தீர்மானிக்கின்ற கோடிக்கணக்கான சாமானிய மக்கள் அரசியல் அறிவில் மிகுந்த தேர்ச்சி உடையவர்களாக இருப்பது இங்கு நோக்குதற்குரியது.

ஆம்! இந்திய தேசத்தில் ஒரே ஆட்சியை நீண்ட காலத்திற்கு விட்டு வைப்பது நாட்டிற்கும் ஜனநாயகத்திற்கும் ஆபத்தானதென்ற ஒரு பெரும் உண்மையை பாரத பூமியின் அத்தனை மக்களும் அறிந்து வைத்துள்ளனர். இதன் காரணமாக காலத்திற்குக் காலம் ஆட்சி மாற்றம் நடந்து வருகிறது.

அதேசமயம் நேர்மையான ஆட்சி; அந்த ஆட்சியைத் தருகின்ற தலைவரால் தங்கள் நாட்டிற்குப் பெருமை என்று இந்திய மக்கள் நினைத்தபோதெல்லாம் அந்த ஆட்சிக்குத் தாராளமாக சந்தர்ப்பம் கொடுக்கவும் தவறவில்லை.

இவ்வாறாக இந்திய மக்கள் தங்கள் நாட்டின் ஜனநாயகத்தை காப்பாற்றுவதில் காட்டிவரும் தீவிரமும் அதற்காக "வாக்கு" என்ற ஆயுதத்தை பிரயோகிக்க தயங்காத் துணிச்சலுமே இந்திய ஜனநாயகம் நிலைபேறடைய காரணமாயிற்று.

ஆனால், எங்கள் நாட்டின் நிலைமை அதுவன்று. இங்கு போலிப் பிரசாரங்களும், இனவாதசிந்தனைகளும், மதவாத சூளுரைப்புகளுமே வாக்களிப்பைத் தீர்மானிக்கின்றன.

இவ்விதம் வாக்களித்தால் ஜனநாயகம் பறிபோய் விடுமே என்று புத்திஜீவிகள் சிந்தித்தாலும் தேர்தல் வாக்களிப்பில் சாதனை படைக்கும் சாமானிய மக்கள் அவ்வாறான சிந்தனைகளை ஒருபோதும் ஏற்பதில்லை.

இதன் காரணமாக இலங்கையில் தேர்தல் முடிவுகள் எவ்வாறு அமையும் என்ற கருத்துக்கணிப்புகள் அநேகமாக வெற்றிகண்ட வரலாறு இல்லை.

ஏனெனில் சிற்சில சலுகைகளோடும், இனவாத உணர்ச்சி ஏற்றலோடும் வாக்களிக்கும் சாமானிய மக்கள் ஜனநாயகத்தின் நிலைமை என்ன என்று ஒருபோதும் நினைப்பதில்லை.

# ஜனநாயகப் பிரச்சினைகள் நாட்டில் பேசப்படுவதில்லை

## முன்னிலை சோசலிசக்கட்சி கண்டனம்

நாட்டின் அரசியலில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சியை முறையை ஒழிப்பது தொடர்பான விடயம் மாத்திரம் பேசப்படுவதாகவும் இதனால், மக்களின் ஜனநாயகம் தொடர்பான பிரச்சினை பேசப்படுவதில்லை எனவும் முன்னிலை சோசலிசக் கட்சியின் அரசியல் சபை உறுப்பினர் சாமீர கொஸ்வத்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

அத்துடன் பிரதான பிரச்சினையாக நாட்டில் இருந்து பாதுகாப்புக்காக தப்பிச் சென்றவர்களின் பிரச்சினை காணப்படுகிறது.

குமார் குணரட்னத்தின் பிரச்சினையை மாத்திரம் நாங்கள் பேசவில்லை. ஏனைய அனைவருக்கும் இருப்பது போல் குமார் குணரட்னத்திற்கும் இலங்கைக்குள் வறிய மக்களுக்காக போராடி அரசியலில் ஈடுபடும் உரிமை இருப்பதாக நாங்கள் நம்புகிறோம்.

குமார் குணரட்னத்தை மீண்டும் நாட்டுக்கு வரவழைக்க நாங்கள் தொடர்ந்தும் முயற்சித்தோம். உயிரை பாதுகாத்து கொள்ளவே அவர் நாட்டில் இருந்து வெளியேறினார்.

உயிர் பாதுகாப்பு பிரச்சினை அவருக்கு இருந்தது. நாட்டில் அமுலில் உள்ள சட்டத்தின் பிரகாரமே அவரை நாங்கள் நாட்டுக்குள் வரவழைக்க முயற்சித்தோம்.

எனினும் இன்னும் அவருக்கு விசா அனுமதி வழங்கப்படவில்லை. இது சாதாரண வழிமுறையோ விசா கட்டுப்பாடுகளோ அல்ல. அரசியல் நிலைமை.

இது குமார் குணரட்னத்திற்கு மாத்திரம் அல்ல, மேலும் பலருக்கு ஏற்பட்டுள்ள தலைவிதி எனவும் சாமீர கொஸ்வத்த மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

## ஜனவரி 8 ஆம் திகதி விமான நிலையம் பூட்டு

ஜனவரி 8-ம் திகதி இரவு 11 மணிக்கு பின்பாக கட்டுநாயக்க விமான நிலையம மூடப்படும் என மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இந்தத் தேர்தலில் தமது வெற்றி உறுதி ஆகிவிட்டது. இதன் காரணமாக மக்கள் பணத்தை கொள்ளையடித்த ராஜபக்ஷ ரெஜிமெண்ட் நாட்டை விட்டு வெளியேற அனுமதிக்க முடியாது.

மக்கள் பணத்துக்கு பதில் சொல்ல வேண்டியவர்களை இந்தியா போன்ற நாடுகள் காப்பாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது.

இலங்கைத் தீவில் மக்கள் முன்பாக இதற்கு பதில் சொல்லும் பொறுப்பு முன்னைய ராஜபக்ஷ ரெஜிமெண்டுக்கு உள்ளது என தெரிவித்துள்ளார்.

தோல்வியின் நிலை அறிந்து தற்போது என்ன பேசுகின்றோம் என்று தெரியாமல் ஒவ்வொரு கூட்டத்திலும் தனது அரசியல் சலூனுக்கு ஒப்பானது என்று தரம் குறைத்து வருகின்றரர்.

இதனால்தான் ஒவ்வொரு அமைச்சர்களும் இன்று அரசை விட்டு வெளியேறுகின்றனர்.

இன்று ஒன்று மட்டும் சொல்ல விரும்புகின்றேன். அரசாங்கத்துக்கு உள்ளேயும் அரசாங்கத்துக்கு வெளியிலும் நடக்கும் சூழ்ச்சிகள் அறியாத ஜனாதிபதியாக இருக்கின்றமை பற்றி மக்கள் நன்கு அறிவார்கள் என்று தெரிவித்துள்ளார். (எ-11)

## ஹெல உறுமயவின் ஆயிரம் கூட்டங்கள்

ஜனாதிபதித் தேர்தலில் பொது எதிரணியின் வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு திரட்டுவதற்காக ஜாதிக ஹெல உறுமய கட்சி ஆயிரம் கூட்டங்களை நடத்த முடிவு செய்துள்ளதாக அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கிராம, நகர, பிரதேச, மாவட்ட மட்டங்களில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டங்களில் பெருமளவு இளைஞர், யுவதிகளைக் கலந்துகொள்ள வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் அக்கூட்டங்களில் தற்போதைய அரசின் கண்மூடித்தனமான போக்கும், எதிர்காலத்தில் பொதுவேட்பாளர் முன்னெடுக்கவுள்ள திட்டங்கள் பற்றியும் விரிவாக விளக்கப்படும் எனவும் ஹெல உறுமய கட்சியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (எ-11)

# முன்னாள் பிரதமர் சிறிமாதான் அரசியலுக்குள் கொண்டு வந்தார்

## ஜனாதிபதி தெரிவிப்பு

வரலாற்றை தான் மறந்து விடவில்லை என தெரிவித்துள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, சிறிமாவோ பண்டாரநாயக்கவே ராஜபக்ஷவினரை அரசியலுக்குள் கொண்டு வந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

நாவலப்பிட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

சிறிமாவோ பண்டாரநாயக்கவே ராஜபக்ஷவினரை அரசியலுக்கு கொண்டு வந்தார். நான் எனது குடும்பத்தை சேர்ந்த எவரையும் அரசியலுக்கு அழைத்து வரவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மக்களை தவறாக வழி நடத்தும் நோக்கில்தான் தனது குடும்பத்தினரை அரசியலுக்கு அழைத்து வரவில்லை எனக் கூறுவதாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

1970 ஆம் ஆண்டுகளில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு கீழ் மட்டத்தில் இருந்து மேல் மட்டம் வரை உறுப்பினர்களை நியமித்த போதிலும் எவருக்கும் பதவிகளை வழங்கவில்லை எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

எனினும் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர், அமெரிக்காவில் இருந்த கோத்தபாய ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ ஆகியோரை இலங்கைக்கு வரவழைத்து குடும்ப ஆட்சியை ஆரம்பித்தார்.

இந்த உண்மையை மறைக்க ஜனாதிபதி தற்போது புதிய புனை கதைகளை கூறி வருகிறார்.

குறிப்பாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சை ஏனைய சகல அமைச்சு பணிகளிலும் தலையிட வைத்துள்ள ஜனாதிபதி, நாமல் ராஜபக்ஷவை சகல அமைச்சு பணிகளிலும் நேரடியாக ஈடுபட வைத்துள்ளார்.

இதனால் ஜனாதிபதி அரசாங்கத்திற்குள் ஏற்பட்டுள்ள பாரிய எதிர்ப்பை சமாளிக்க இவ்வாறு பல கதைகளை கூற ஆரம்பித்துள்ளதாகவும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (எ-11)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### காலம் கை கொடுக்கும்



- பயத்தை அகற்றி விட்டு, அதற்கு அப்பால் நீ சென்று விடு. இன்று முதல் அறவே பயமற்றவனாக இரு.
- உன்னால் சாதிக்க முடியாத காரியம் ஒன்று இருப்பதாக ஒருபோதும் எண்ணாதே.
- கொள்கைக்காக உன்னை அர்ப்பணிக்கக் கற்றுக்கொள். பொறுமையுடன் முயற்சித்தால் உனக்கு ஆதரவாக காலம் கைகொடுக்கும்.
- தனி மனித வாழ்வு தூய்மையாக இருந்தால், உலக வாழ்வும் தூய்மையாகி விடும்.
- கடவுளுக்குச் சமமான நல்லவர்கள் இன்னும் இந்த உலகில் வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடூர ஆட்சியை ஒழிக்க வேண்டும்

## சந்திரிகா வலியுறுத்து



**நாட்டில் நிலவி வரும் கொடூரமான ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார். இதேவேளை மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்ரமசிங்க, சரத் பொன்சேகா மீதும் தன்மீதும் புலி முத்திரை குத்தப்படுகின்றது எனவும் இது தொடர்பில் ஒரே விடயத்தை மட்டுமே நான் கூறவிரும்புகின்றேன். கண்ணாடி வீடுகளிலிருந்துகொண்டு கல் எறிய வேண்டாம் எனவும் தெரிவித்துள்ளார்.**


இந்த அரசாங்கம் வீதிகளை அமைக்கஅதிகம் விரும்புகின்றது. ஏனெனில் நாங்கள் வீதி அமைக்க செலவிட்ட பணத்தை விடவும் இந்த அரசாங்கம் 18 மடங்கு அதிகளவில் செலவிடுகின்றது. புதிய அரசாங்கம் ஊழல் மோசடிகளை இல்லாதொழிக்கும். மோசடிகள் மூலம் விரயமாகும் பணத்தை சேமித்து நாட்டுக்கு பாரியளவில் நன்மைகளை செய்ய முடியும். ராஜபக்ஷ குடும்பத்தினர் அவர்களது உறவினர்களுக்கு இந்த நாடு சொர்க்க பூமியாகவே காணப்படுகின்றது. எனினும், இவர்களின் திருட்டுக்களை நிறுத்தினால் முழு இலங்கையையும் சொர்க்கபூமியாக மாற்ற முடியும். தெற்கு அதிவேக பாதை மற்றும் கட்டுநாயக்க அதிவேக பாதை என்பன எனது அரசாங்கத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது. எனினும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் வெட்கமின்றி தங்களது பெயர்களை பொறித்து இடத்திற்கு இடம் கட்அவுட்களை வைத்துக் கொண்டுள்ளது. போரை வென்றெடுத்த காரணத்திற்காக காலத்திற்கும் ராஜபக்ஷ குடும்பம் ஆட்சியில் இருக்க அனுமதிக்க முடியாது. முதலில் மகிந்த ராஜபக்ஷ. பின்னர் அவரது சகோதரர்கள். அதன் பின்னர் ராஜபக்ஷவின் மூன்று பிள்ளைகள். இவ்வாறு ஆட்சி செய்தால் 200 ஆண்டுகளுக்கு ஆட்சி செய்ய முடியும். பதவிகளை எதிர்பார்த்து நான் இந்த தேர்தல் பிரசாரப் பணிகளில் பங்கேற்கவில்லை. கொடூரமான ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்பதே எனது நோக்கமாகும் என சந்திரிகா மேலும் தெரிவித்துள்ளார். மாத்தறையில் நேற்று முன்தினம் நடைபெற்றகூட்டமொன்றில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (இ-5)

## ஜனாதிபதியின் மகனின் றகர் போட்டிகளை பார்வையிட கடற்படையினருக்கு பணிப்பு

ஜனாதிபதியின் இரண்டாவது புதல்வர் யோஷித ராஜபக்ஷ கலந்து கொள்ளும் றகர் போட்டிகளை பார்வையிடச் செல்லுமாறு கடற்படை வீரர்களுக்கு உயர் அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளதாக தெரிய வருகிறது.

யோஷித பங்குபற்றும் போட்டிகளை பார்வையிட விளையாட்டு ரசிகர்கள் வருவதில்லை என்பதால், கடற்படை வீரர்களை கட்டாயம் போட்டிகளுக்கு செல்லுமாறு உயர் அதிகாரிகள் பணித்துள்ளனர் என்று கூறப்படுகிறது. றகர் போட்டியை பார்வையிட செல்வது சிறப்பு பணியாக கருதி உயர் அதிகாரிகள் கடற்படையினரின் விடுமுறைகளையும் இரத்துச் செய்துள்ளனர். இதன் காரணமாக கடற்படை வீரர்கள் பெரும் மன அழுத்த நிலைமைக்கு உள்ளாகியிருப்பதாக தெரிய வருகிறது. யோஷித ராஜபக்ஷ கடற் படை அதிகாரி என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## பாரிய ஊழல் மோசடிகள் அம்பலப்படுத்தப்படுமாம்




அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட பாரிய ஊழல் மோசடிகள் பற்றிய தகவல்கள் அம்பலப்படுத்தப்படும் என முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அரசாங்கத்தின் ஒருசில அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் நாட்டுக்கு பாதக விளைவுகளை ஏற்படுத்தும் வகையிலான கொடுக்கல் -வாங்கல்களை மேற்கொண்டுள்ளனர். இந்த கொடுக்கல் -வாங்கல்களினால் பாரியளவு நாட்டின் பொருளாதாரத்திற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. கசினோ சூதாட்ட நிலையங்கள், துறை முகம், விமான நிலையம் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்ட பாரியளவிலான ஊழல் மோசடிகள் பற்றிய விபரங்கள் அம்பலப்படுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 224

டொறின் மன்மதநாயகம்




சுஜீவன் ஜெயச்சந்திரன்




சாந்தகுமார்




துஷா துஷா




பிச்சைக்கார நலச்சங்கம்




கிர்த்து சுரன்



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நாட்டு மக்களுக்கு ஏதுவான கொள்கை அறிக்கை 19 இல்

## ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின், நாட்டு மக்களுக்கு ஏதுவானதும் மிகவும் கவரக் கூடியதுமான கொள்கை அறிக்கை எதிர்வரும் 19 ஆம் திகதி வெளியிடப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர இதனை கூறியுள்ளார்.

நல்ல விதத்தில் நாட்டுக்கு பல பில்லியன் வருமானம் பெறும் வழிகள், தகவல் அறியும உரிமையை உறுதிப்படுத்துதல், ஊடகவியலாளர்கள் சுதந்திரமாக செயற்படக் கூடிய சூழ் நிலை, நடுத்தர மக்களுக்கு நலன் தரக் கூடிய திட்டங்கள் இந்த கொள்கை அறிக்கையில் இருக்கும்.

நாட்டில் இருந்து கொண்டு சென்று வெளி நாடுகளில் பதுக்கப்பட்டுள்ள கறுப்பு பணத்தை மீண்டும் நாட்டுக்கு கொண்டு வர இந்திய பிரதமர் நரேந்திர மோடி மேற்கொண்ட நடவடிக்கைகளை முன்னுதாரணமாக கொண்டு, வெளிநாட்டு வங்கிகளில் இருக்கும் இலங்கைக்குரிய பல மில்லியன் டொலர் பணம் நாட்டுக்கு கொண்டு வரப்படும்.

மைத்திரி ஆட்சியின் 100 நாள் வேலைத் திட்டத்தில் இவை நிறைவேற்றப்படும் எனவும் ராஜித சேனாரத்ன மேலும் கூறியுள்ளார். (எ-11)

# புனித பாப்பரசரின் வருகை ஜனவரியில் பொருத்தமற்றது

## அநுராதபுர பேராயர் தெரிவிப்பு

(கொழும்பு)

பாப்பரசர் முதலாம் பிரான்ஸிஸ் எதிர் வரும் ஜனவரி 13-ம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்வது பொருத்தமற்றது என அநுராதபுரம் பேராயர் நோபட் அந்ராதி ஆண்டகை தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனவரி மாதம் 13-ம் திகதி பாப்பரசர் இலங்கைக்கு விஜயம் செய்வது பொருத்தமற்றது என்பதே எனது தனிப்பட்ட கருத்தாகும்.

எதிர்வரும் ஜனவரி மாதம் 8-ம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது.

தேர்தல் முடிவுகள் வெளியாகி பதற்ற நிலைமை தணிவதற்கு முன்னதாக பாப்பரசர் இலங்கைக்கு விஜயம் செய்வது எந்தளவிற்கு பொருத்தமானது என்பதனை பொறுப்பு வாய்ந்தவர்கள் தீர்மானிக்க வேண்டும்.

ஜனாதிபதி தேர்தல் நடைபெற்று முடிந்த உடனேயே பாப்பரசர் இலங்கைக்கு விஜயம் செய்வது பொருத்தமற்றது.

பேராயர் சபையில் அங்கம் வகிக்கும் பல பேராயர்களின் நிலைப்பாடும் இதுவாகவே உள்ளது.

சில அரசியல்வாதிகள் பாப்பாண்டவரின் படத்தை ஜனாதிபதி தேர்தல் பிரசார பணிகளுக்கு பயன்படுத்திக் கொண்டுள்ளமை வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டுமென நோபட் அந்ராதி ஆண்டகை தெரிவித்துள்ளார்.

சிங்களப் பத்திரிகையொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (எ-11)

## எம்.பியை கட்சி...

கோடி ரூபாய் தருவதாகவும் எனது முடிவை மாற்றிக் கொள்ளுமாறும் கேட்டார்.

நாமல் ராஜபக்ஷ என்னுடன் கதைத்தார். உங்கள் முடிவை மாற்றிக் கொள்ளுங்கள் எனது தந்தை மிகுந்த மனவேதனை அடைந்துள்ளார். மீண்டும் நீங்கள் எங்களுடன் இணைந்து கொள்ளுங்கள். அதற்கு பதிலாக நீங்கள் எதனைக் கேட்டாலும் தர தயாராக இருக்கின்றோம் என்று கூறினார்.

நான் கூறினேன். நாமல் எனக்கு எதுவும் கிடைக்கவில்லை என்று நான் அரசாங்கத்தை விட்டு விலகவில்லை. இவை எல்லாவற்றிற்கும் காரணம் உங்கள் சிறிய தந்தை. அதனை பற்றி உங்கள் தந்தையுடன் கதைத்துள்ளேன். ஆனால் அதனை அவர் சிறிதும் கவனத்திற் கொள்ளவில்லை.

அதன் பின்னரும் எல்லாவற்றையும் சகித்துக்கொண்டு அரசாங்கத்தில் இருக்க முடியாது. அதனால் வெளியேறினேன். இதனை உங்கள் தந்தைக்கு சொல்லுங்கள் என்று கூறினேன். அவர் நிச்சயமாக இதனை அவரது தந்தைக்கு கூறமாட்டார். காரணம் இப்போது குடும்பத்திற்குள் பிரச்சினை தொடங்கியுள்ளது.

கோத்தபாய ராஜபக்ஷ அரை மணி நேரம் என்னுடன் கதைத்தார். ஏன் இப்படி செய்தீர்கள்? ஏன் என்னுடன் இது பற்றி கதைக்கவில்லை? என்றார். நான் கூறினேன். நீங்கள் யார்? ஏன் நான் உங்களுடன் கதைக்க வேண்டும்? என்று.

அதற்கு அவர் நான் ஜனாதிபதியின் தம்பி பாதுகாப்பு செயலாளர். கட்சியின் பழைய உறுப்பினர்களை நன்கு அறிந்தவன் என்று கூறினார். சரி அப்படியானால் அதற்கு நான் என்ன செய்ய என்று நான் கேட்டேன்.

அதற்கு அவர் இல்லை. கொஞ்சம் யோசியுங்கள் என்றார். அதற்கு நான் இனிமேல் யோசிக்க எதுவுமில்லை. உங்களுக்கு தேவையென்றால் என்னை கொன்று விடுங்கள். நான் மனித தன்மைக்கு மட்டுமே கீழ்ப்படிவேன். அழுக்குள்ள இடத்துக்கு மீண்டும் வருவதற்கு நான் விரும்பவில்லை.

இது மட்டுமல்ல; கோத்தபாயவும் ஜனாதிபதி செயலக அதிகாரியும் மைத்திரிபால சிறிசேனவுடன் 3 மணி நேரம் கதைத்தார்கள். கடந்த சனிக்கிழமை ஜனாதிபதியின் பாராளுமன்ற செயலாளர் குமாரசிறி ஹெட்டிகொட மூன்று தடவை என்னுடன் கதைத்தார்.

அவர் எனக்கும் ஜனாதிபதிக்கும் மிக நெருங்கிய நண்பர். எப்போதும் அவரும் ஜனாதிபதியும் நானும் ஒன்றாகத்தான் உணவருந்துவோம். அவர் கூறினார் குணே என்னை உங்களுடன் கதைக்குமாறு ஜனாதிபதி கூறினார்.

அவர் மிகவும் கவலைப்படுகின்றார். மீண்டும் நீங்கள் அவருடன் வந்து சேருங்கள். அவருக்கு உங்கள் மீது எந்தக் கோபமும் இல்லை. இது வரை அவர் உங்களைப் பற்றி ஒரு வார்த்தை கூட குறைவாக பேசவில்லை.

நீங்கள் எந்த நேரமும் அலரி மாளிகைக்கு வர முடியும். உங்கள் முடிவை மாற்றுங்கள் என்றார். இதற்கு நான் கூறினேன். மீண்டும் அந்த அழுக்குள்ள இடத்திற்கு வர நான் விரும்பவில்லை என்று.

நண்பர்களே இப்போது நம் முன்னுள்ள மிகப்பெரிய கேள்வி நாட்டைப் பாதுகாப்பதா? அல்லது தனிப்பட்ட ஒரு குடும்பத்தைப் பாதுகாப்பதா? என்பதே. தீர்மானமெடுக்க வேண்டிய நேரம் நெருங்கி விட்டது என்று கூறினார். (எ-11)

# இங்கிலாந்து - இலங்கை இறுதி ஒரு நாள் போட்டி இன்று




இங்கிலாந்து -இலங்கை அணிகளுக்கு இடையிலான 7ஆவதும் இறுதியுமான ஒரு நாள் போட்டி இன்று கொழும்பு ஆர்.பிரேமதாஸ அரங்கில் நடைபெறுகிறது.

இங்கிலாந்து அணி, இலங்கை அணியுடன் 7 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது.

இத்தொடரின் முதல் 6 போட்டிகளின் நிறைவில் இலங்கை அணி 4:2 என்ற கணக்கில் தொடரை ஏற்கெனவே கைப்பற்றிய நிலையில், சம்பிரதாயபூர்வமான போட்டியான இப்போட்டி பி.ப 2.30 மணிக்கு ஆரம்பமாகிறது.

இப்போட்டியே இலங்கை அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் குமார் சங்கக்கார தாய்நாட்டில் விளையாடும் இறுதி ஒருநாள் சர்வதேச போட்டியாக அமைவதால் இலங்கை அணியைப் பொறுத்தவரை இப்போட்டி நெகிழ்ச்சிக்குரிய போட்டியாக இருக்கும்.

**அணிவிபரம்**

இலங்கை: டில்சான், கருணாரத்ன/சண்டிமல், சங்கக்கார, ஜெயவர்த்தன, மத்யூஸ் (அணித் தலைவர்), திரிமன்னே, பிரசன்னே, பெரேரா, சேனநாயக்க, லக்மல், சண்டகன்.

இங்கிலாந்து: குக் (அணித் தலைவர்), ஹேரால்ஸ், ஜேம்ஸ் ரெய்லர், ஜோ ரூட், மோர்கன், பட்லர், போபாரா, ஸ்ரோக்ஸ், ஜோர்டன், ட்ரெட்வெல், ஹரி கோர்னி. (கு)

## தமிழ்த் தேசி...

பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன சர்வதேச சக்திகளின் சூத்திரத்துக்கு ஏற்ப செயற்படுகின்றார் என்பது அவர் ஆற்றியுள்ள உரையிலிருந்து தெளிவாகின்றது.

இது பாரதூரமான கூற்றாகும். உக்ரேனில தேர்தலில் வெற்றிபெற்ற ஜனாதிபதியை ஒரு வருடம் கூட செயற்பட இடமளிக்கவில்லை என்பதனை நாம் மறந்துவிடக்கூடாது எனவும அவர் குறிப்பிட்டுள்ளார். தற்போது ஜனாதிபதி தேர்தலுக்கு எமது ஆளும் கூட்டணி கடுமையாக உழைக்க ஆரம்பித்துள்ளது.

கிராம மட்டங்கள் உள்ளிட்ட அனைத்து மட்டங்களிலும் ஆளும் கட்சியினர் பரப்புரைகளில் ஈடுபடுகின்றன. ஆனால் பொது எதிரணியின் தேர்தல் பரப்புரைக் கட்டமைப்பு எங்கே? பிரதான கட்சியான ஐக்கிய தேசிய கட்சியின் பரப்புரை செயற்பாடுகள் எங்கே என அவர் கேள்வி எழுப்பியுள்ளார். சரத் பொன்சேகாவுடன் இருந்த ஜயந்த கெட்டகொடவும் எமது பக்கம் வந்துவிட்டார்.

வெறுமனே சமூக ஊடகங்களில் பொய்யான தகவல்களை பரப்புவதையே இன்று எதிரணி பிரதான பரப்புரை ஆயுதமாக கொண்டுள்ளது.

ஆனால் அதற்கு ஆயுள் மிகவும் குறைவாகும். எதிரணி முக்கியஸ்தர்கள் தமது இயலாமையை மறைக்க முயற்சிக்கின்றனர். சந்திரிகா பண்டாரநாயக்க மற்றும் ரணில் ஆகியோரின் யுகங்கள் தற்போதைய இளம் சந்ததியினருக்கு தெரியவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## ஜனாதிபதிக்கு...

முதலாம் தடவை பசிக்காகவும், இரண்டாம் தடவை ஆசைக்காகவும், மூன்றாம் தடவை பேராசைக்காகவும் உணவு உட்கொள்வதாகத் தெரிவித்துள்ளார்.

ஜே.ஆர். ஜெயவர்தன மற்றும் சந்திரிகா பண்டாரநாயக்க ஆகியோர் இரண்டு தடவைகள் ஆட்சி செய்து விலகிக்கொண்டனர்.

ஏன் அவ்வாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் ஆட்சிப் பொறுப்பை விட்டு விலக முடியவில்லை.

17-ம் திருத்தச் சட்டத்தை ரத்து செய்து ஏன் 18-ம் திருத்தச் சட்டத்தை ஜனாதிபதி அமுல் செய்தார். ஏனெனில், பதவி மீது அவருக்கு காணப்படும் அதீத பேராசையே இவற்றுக்கான காரணங்களாகும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை உலகின் எல்லா நாடுகளிலும் இரண்டுதவணைகளுக்கு வரையறுக்கப்பட்டுள்ளது.

முதலாம் தவணை ஆட்சியின் பின்னர் மக்கள் விரும்பினால் இரண்டாம் தவணை ஆட்சி வகிக்கலாம் என ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். அண்மையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (எ-11)

## தேர்தல் வன்...

கள் குறித்து இதுவரை 139 முறைப்பாடுகள் கிடைத்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்ட நாளில் இருந்து இதுவரை 32 வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார். (எ-11)

## கூட்டத்தில்...

பின்னர் அவர் உரையாற்றத் தொடங்கும போது கூச்சல் எழுப்புவதுமாக கூட்டத்தினர் அவருக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதனால் ஜனாதிபதி, கூச்சல் எழுப்பிக் கொண்டிருந்தால் தான் தொடர்ந்து பேச முடியாது என்றும் எச்சரித்தார்.

ஆனாலும், கூட்டத்தினர் அடங்காத நிலையில், உரையை பாதியிலேயே நிறுத்தி விட்டு மேடையில் இருந்து இறங்கிச் சென்று விட்டார்.

அதேவேளை, அவ்வாறு பாதியிலேயே உரை நிறுத்தப்படவில்லை என்றும் வேறொரு கூட்டத்தில் உரையாற்ற வேண்டியிருந்ததால் தான், அவசரமாக அவர் வெளியேறியதாகவும் அரசதரப்பு கூறியுள்ளது.

பெரிய வெங்காயத்தை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்ய அரசாங்கம் அனுமதி அளித்ததற்கு எதிராக சுமார் 500 விவசாயிகள் சில வாரங்களுக்கு முன்னர் அரசாங்கத்துக்கு எதிராக தம்புள்ளையில் ஆர்ப்பாட்டம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## ஓமந்தை வரை...

மகளை புலிகள் பிடித்துச் சென்றுவிட்டார்கள்.

இறுதி யுத்தம் நடைபெற்று மக்கள் இராணுவத்திடம் வந்த போது எனது மகளும் வந்துள்ளாள். அவளை ஓமந்தையில் எமக்கு தெரிந்த ஒருவர் கண்டு கதைத்துள்ளார்.

எனது மகளை அவர் தன்னுடன் வருமாறு அவர் கேட்டபோது, எனது தலை முடி வெட்டப்பட்டுள்ளது.

நான் வந்தா உங்களுக்கு தான் பிரச்சினை. நான் இராணுவத்திடம் பதிகிறேன் என மகள் கூறினார் என்று அவர் என்னிடம் சொன்னார்.

அதன் பின் எனது மகளை பல இடங்களில் தேடியும் இன்று வரை கிடைக்கவில்லை. மனித உரிமை ஆணைக்குழுவிடமும், எனது மகள் ஓமந்தையில் நின்றது தொடர்பான பதிவுகள் உள்ளன.

ஆனால் அவர்களும் எனது மகள் இப்போது எங்கே இருக்கிறாள் என்று தெரியாது என்கிறார்கள். எப்படியாவது என் பிள்ளையை கண்டுபிடித்து தாருங்கள் என்றார். (எ-11)

## அப்பாவை...

வாறு சாட்சியமளித்தார்.

அவர் தொடர்ந்து சாட்சியமளிக்கையில், எனக்கு அப்ப 7 வயது. 2008 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 28 ஆம் திகதி இரவு 8 மணியளவில் எமது வீட்டுக்கு வந்த இராணுவம் கதவைத் தட்டியது. நாங்கள் திறக்கவில்லை.

கோடரியால் கதவை கொத்தி அப்பாவை பிடித்துச் சென்றனர். அம்மா போய் மறிக்க மறிக்க எங்கள விட்டுட்டு ட்ரக் ஒன்றில அப்பாவை ஏத்தி கொண்டு போட்டாங்க.

ஆமி உடுப்புடன் தான் வந்து கொண்டு போனாங்க. இதற்கு முதல் ஒருக்கா எங்கட அப்பாவை ஆண்டியாபுளியங்குளம் இராணுவம் சுற்றிவளைத்து சந்தேகத்தில் பிடித்து சென்றவங்க.

பிறகு பிணையில் விட்டு அப்பா காம்பில போய் அடிக்கடி சைன் வைக்கிறவர். அப்படி செய்த நிலையிலேயே பிறகு என்ர அப்பாவா கொண்டு போட்டாங்க. அம்மாவும் வெளி நாட்டுக்கு வேலைக்கு போட்டா. நானும் தங்கையும் தான் உறவினர்களுடன் இருக்கிறோம் என்றார். குறித்த சிறுவன் தனது உறவினர் ஒருவருடன் சாட்சியமளிக்க வந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரசியலில்...

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக தேர்தல் பரப்புரைக்கு ஓய்வுபெற்ற படையினரை பயன்படுத்துவதாக என்மீது குற்றம் சுமத்துபவர்கள் ஒன்றை மறந்து விட்டனர்.

இலங்கையின் கூட்டுப்படைகளின் தளபதியாக இருந்து கொண்டு தான் ஜெனரல் சரத் பொன்சேகா அரசியலில் பிரவேசித்தார். 2010ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் தான் போட்டியிடப் போவதாக அறிவித்த பின்னர் தான், சரத் பொன்சேகாவின் இராஜினாமாவை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டிருந்தார்.

இந்த ஜனாதிபதித் தேர்தலில் பெரும்பாலான படையினர் அரசாங்கத்தையே ஆதரிப்பர். போரை முடிவுக்கு கொண்டுவர சிறந்த அரசியல் தலைமையை வழங்கிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை குற்றச்சாட்டுகள் மூலம் தோற்கடித்து விடமுடியாது.

ஓய்வுபெற்ற படையினர் அரசியலில் ஈடுபடுவதற்கோ, தேர்தலில் போட்டியிடுவதற்கோ அல்லது எந்தக் கட்சிக்கும் ஆதரவு தெரிவிப்பதற்கோ எவ்வித தடையும் இல்லை. அது அவர்களின் விருப்பம் சார்ந்தது.

ஜனநாயக கட்சியின் தலைவர் சரத் பொன்சேகாவை விட, மேலும் பல ஓய்வுபெற்ற படை அதிகாரிகள் அரசியலில் ஈடுபட்டுள்ளனர். பல்வேறு அரசியல் கட்சிகளிலும் அவர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

ஒரு குறிப்பிட்ட அரசியல்கட்சிக்கு ஓய்வு பெற்ற படை அதிகாரிகள் ஆதரவு தெரிவிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிப்போர், 1989ஆம் ஆண்டு காலப்பகுதியில் விடுதலைப் புலிகள் அரசியல் கட்சியாக அங்கீகரிக்கப்பட்டதை மறந்து விட்டனர்.

அதேபோன்று விடுதலைப் புலிகள் தவிர்ந்த ஏனைய எல்லா தீவிரவாத அமைப்புகளும் அரசியல் கட்சியாக தம்மை பதிவு செய்து கொண்டு தேர்தலில் போட்டியிட்டன" என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)


## தவறிவிட்டது

மனோகரன் -கவிமாறன் 9518218 10Vஆள் அடையாள அட்டை, தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம், ATM அட்டை என்பன அடங்கிய பேஸ் உரும்பிராய் சந்திக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

T.P:-021 223 0883

(சி-9388)



## V2 Travels and Tours

அனைத்து நாடுகளிற்குமான விமானப்பயணச்சீட்டுகள்
குறைந்த கட்டணத்தில் முற்பணமின்றி உங்கள் இல்லத்திற்கே பயணச்சீட்டுக்கள் கொண்டுவந்து தருகின்றோம்

அனைத்து நாடுகளிற்குமான விசா ஆலோசனைகள், online,விண்ணப்படிவங்கள், நிராகரிக்கப்பட்ட -Rejected visas குறைசார், சட்டவல்லுனர்களின் உதவியுடன் செய்து தரப்படும்

வெளிநாட்டிலிருந்து இலங்கை வருபவர்களின் இலங்கை விசா நீட்டிப்பு கொழும்பு செல்லவேண்டிய தேவையின்றி எமது அலுவலகங்களிலேயே செய்து தரப்படும்

கட்டார்,மத்தியகிழக்கு நாடுகளுக்குச் செல்வோருக்கான விமானப்பயணச்சீட்டுக்கள் மற்றும் பயண ஒழுங்குகள் மிகவும் குறைந்த கட்டணத்தில் செய்து தரப்படும்

யாழ்ப்பாணம்
49A சம்பல் வேன் - பெரிய நாவகம் மூவிளக்
0773867257

நெல்லியடி
மூடக்காட்டுச்சந்தி
0776699892

வல்வெட்டித்துறை
மாற்கீர் - வல்வெட்டி
0776697960

• மிகவும் குறைந்த கட்டணத்தில் 3 மாத பயிற்சியுடன் சர்வதேச அங்கீகாரமுடைய சான்றிதழ் மற்றும் வேலைவாய்ப்புக்கள்
• எம்முடன் இணைந்து தொழில்செய்ய விரும்பும் முகவர்கள், தனிநபர்கள் வரவேற்கப்படுகிறார்கள்


# தமிழ் மக்கள்...

டமைப்பு வலியுறுத்துவதாக பரப்பப்படுகின்ற வதந்திகள் முற்றிலும் பொய்யானவை. இந்தத் தேர்தல் தொடர்பில் நாங்கள் எந்த நிலைப்பாட்டை எடுப்பது என்று முடிவுக்கு இன்னமும் வரவில்லை.

ஆயினும் இத்தேர்தலில் கட்டாயம் வாக்களிக்குமாறு எமது மக்களைக் கோருவது என்று மட்டும் இப்போது முடிவு செய்துள்ளோம். இதனை மக்களுக்குத் தெளிவாக எடுத்துக் கூறுகிறோம்.

இந்தத் தேர்தலில் அளிக்கப்படும் ஒவ்வொரு வாக்கும் முக்கியமானது. எனவே இத்தேர்தலில் வாக்களிக்காமல் விடுவது குறித்தோ அல்லது தேர்தலைப் புறக்கணிப்பது குறித்தோ மக்கள் சிந்திக்கக் கூடாது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் இடம்பெற்ற தேர்தல்களில் நாம் எமது பலத்தை வெளிப்படுத்தியது போன்றே, இந்த தேர்தலிலும் எமது வாக்குகளை அளிப்பதன் மூலம் எமது பலத்தை வெளிப்படுத்த முடியும். எமது மக்களுக்கு நாம் கூறும் ஆலோசனை இது ஒன்று தான்.

இத்தேர்தல் தொடர்பில் எமக்குள்ள தெரிவுகள் குறித்து கிராம மட்டத்தில் மக்களின் கருத்துக்களை நாம் அறிந்து வருகிறோம். இந்தக் கலந்துரையாடல்களை முடித்து, அது தொடர்பிலான எமது நிலைப்பாட்டை விரைவில் அறிவிப்போம்.

இத்தேர்தல் தொடர்பில் எம்முடன் பேச வேண்டிய தேவை இல்லை என்று ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஏற்கெனவே கூறிவிட்டது. அவர்கள் எம்முடன் பேச விரும்பவில்லை.

அதேவேளை, இந்தத் தேர்தலுக்குப் பின்னரே தேசியப் பிரச்சினைக்கான தீர்வு குறித்து கலந்துரையாட முடியும் என்று எதிரணியின் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தேசியப் பிரச்சினையை ஒரு தேர்தல் விவகாரமாக இரு பிரதான வேடபாளர்களுமே கருத்தில் எடுத்துக் கொள்ளத் தயாராக இல்லை. இத்தேர்தலில் வாக்க ளிப்பதற்கு முன்னதாக மக்கள் இதனைக் கருத்தில் எடுத்துக் கொள்வது முக்கியம்.

நாம் தமிழ் வாக்காளர்களை எமது முடிவுக்கு இழுத்து வரவில்லை. நாம் ஒரு பிரபலமான கட்சி என்ற வகையில், எமது மக்களுடன் கலந்துரையாடியுள்ளோம். இந்தக் கலந்துரையாடல் மக்களுக்கு நம்பிக்கையளிக்கும்.

நாம் உயர்மட்டத்தில் இருந்து முடிவுகளை எடுக்கவில்லை. எமது முடிவை எடுப்பதற்கு முன்னர், எமது மக்களின் கருத்துகளை அறிந்து செயற்படுகிறோம்" என்று சுமந்திரன் மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

# நீர்கொழும்பில்...

கொண்டனர்.

போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட ஐந்து இந்திய மீனவர்களை விடுதலைசெய்வதற்கு இலங்கை அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும் இந்தியாவில் தடுத்துவைக்கப்பட்டுள்ள எமது மீனவர்களை விடுவிப்பதற்கு இந்திய அரசாங்கம் இதுவரை எந்த விதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர்.

எமது மீனவர்களை விடுதலைசெய்வதற்கு இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து திருத்தியடைய முடியாதென்று கூறிய ஆர்ப்பாட்டக்காரர்கள், எதிர்வரும் நத்தார் தினத்திற்கு முன்பு இவர்களை விடுதலைசெய்வதற்கு நடவடிக்கைகளை எடுக்குமாறு வேண்டுகோள் விடுத்தனர்.

ஆயினும் இது சம்பந்தமாக கருத்துகளை தெரிவித்துள்ள மீன்பிடி துறை துணை அமைச்சர் சரத் குமார குணரத்ன இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களை விடுவிப்பதற்கான தலையீடுகளை மேற்கொள்வதற்கு சட்டரீதியாக இலங்கை அரசாங்கத்திற்கு அவகாசம் இல்லை என்று கூறினார். (எ-11)

# இராசியான...

நடத்தியது இல்லை. ஆனால் 2005-ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிறந்த தினத்துக்கு முதல் நாளான 2005 நவம்பர் மாதம் 17-ம் திகதி இடம்பெற்றது. 17-ம் இலக்கத்தின் கூட்டுத்தொகை 8 ஆகும்.

மேலும் 2010-ம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலின் போது வேட்பு மனுத்தாக்கல் 17-ம் திகதியே செய்யப்பட்டது. 17-ம் இலக்கத்தின் கூட்டுத்தொகை 8 ஆகும். தேர்தல் 2010 ஜனவரி மாதம் 26-ம் திகதி இடம்பெற்றது. 26 ன் கூட்டுத்தொகை 8 ஆம் ஆகும். எனவே கடந்த காலங்களில் இலக்கம் எட்டு மிகவும் அதிர்ஷ்டமாக காணப்பட்டுள்ளது.

இந்நிலையில் எதிர்வரும் 2015-ம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற உள்ள தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் இம்மாதம் 8-ம திகதியே இடம்பெற்றது. தேர்தலும் 8-ம் திகதியே நடைபெறவுள்ளதால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெறுவார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு இராசி உள்ளதால் இலக்கங்களும் தானாகவே வந்து அமைகின்றன.

மேலும் 2004-ம் ஆண்டு ஏப்ரல் 2-ம் திகதி இடம்பெற்ற பொதுதேர்தலையடுத்து சந்திரிகா குமாரதுங்க, மகிந்த ராஜபக்ஷவை பிரதமர் பதவிக்கான பொறுப்புகளை 8-ம் திகதி உத்தியோகபூர்வமாக கையேற்குமாறு அறிவித்தார்.

இது லொற்றிரி பரிசு போன்றது. ஏனென்றால் தானாகவே 8 ஆம் திகதியன்று அவர் பொறுப்புகளை ஏற்கும் வகையில் அமைந்தது. அதிர்ஷ்டம் உள்ள ஒருவருக்கு இயற்கையாக இது போன்று அதிர்ஷ்டங்கள் அமையும.

இதேவேளை நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கலை இம்மாதம் 8-ம் திகதி முற்பகல் 10.20க்கு தாக்கல செய்தார். இந்த நேரம் மிகவும் சக்திவாய்ந்த நேரமாகும். இந்த நேரத்தில் வலுவான இரு யோகங்கள் இருந்தன.

மேலும் ஜனாதிபதி தனது வேட்பு மனுவை இடது கையினாலே ஆணையாளரிடம் ஒப்படைத்தார். இது பிழையான விடயமல்ல. கடந்த தேர்தலிலும் இடது கையிலேயே வேட்பு மனுவை ஒப்படைத்திருந்தார். காரணம் இது ஒரு நல்ல திசையாகும்.

சகல காரியங்களும் சுப நேரத்தின்படியே இடம்பெறுகின்றது. முதலாவது தேர்தல் பிரசார கூட்டமும் சுப நேரத்தின்படியே இடம்பெற்றது. மேலும் இறுதி தேர்தல் பிரசார கூட்டம் வாக்களிக்க செல்லும் எல்லாம் சுப நேரப்படியே இடம்பெறும்.

ஆட்சி செய்யும் அதிகாரம் அவர் கூடவே பிறந்த ஒன்றாகும். இரண்டாவது தேர்தலில் உலகத்தில் உள்ள எந்தவொரு தலைவர்களாலும் பதிவு செய்ய முடியாத வெற்றியை பதிவு செய்தார். எனவே நடைபெற உள்ள தேர்தலில மிகப்பெரிய வெற்றி பெறுவது உறுதி. (எ-11)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அமரர் திருமதி பத்மாசினி அம்மா சிவபாதசுந்தரம்



மண்ணுலகில் 08 - 06 - 1944

விண்ணுலகில் 16 - 11 - 2014

திதி:- அபர பக்க நவமி (16.12.2014)

கடந்த 16.11.2014 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி பத்மாசினி அம்மா சிவபாதசுந்தரம் அவர்களின் 31 ஆம் நாளை நினைவு கூரும் வேளையில் இத்துயரச் செய்தி கேட்டு உடன் வந்து உதவியோருக்கும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு ஆறுதல் தெரிவித்தோருக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வழங்கியும், மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும், போசனமளித்து உதவியவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் 14.11.2014 ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது.

வீட்டுக்கிருத்தியம் 16.12.2014 இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

118/4 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(8769)

குடும்பத்தினர்.
தொலைபேசி:- 0777702247

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 25.02.1947

விண்ணில் 16.12.2008

அமரர் நல்லையா தவகுலசிங்கம்

(இளைப்பாறிய சீமெந்து கூட்டுத்தாபன ஊழியர், தவம் அக்றோ நிறுவன உரிமையாளர்)

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவர்" என்ற வள்ளுவர் வாக்குக்கு ஏற்ப பார்போற்ற வாழ்ந்து காட்டிய பாசத்தின் திருவுருவமே தாங்கள் எமை விட்டுப் பிரிந்து ஆண்டுகள் ஆறு ஆனபோதிலும் உங்கள் நினைவுகள் என்றும் மாறாது.

இல.43 கோட் றோட், மல்லாகம்.

(8772)

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.12.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org